தமிழ்நாடு அரசு

# தமிழ்

## ஆறாம் வகுப்பு

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2012
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல்)

பாடநூல் குழு

குழுத் தலைவர்

ஏ. முத்துக்கிருஷ்ணன்,
(மேனாள் கல்விப் பேரவைக்குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம்),
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

மேலாய்வுக் குழு

வா. ஆ. சிவஞானம், மேனாள் இயக்குநர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை.

அ. திருஞானம், மேனாள் மாவட்டக் கல்வி அலுவலர், சென்னை.

வல்லுநர் குழு

முனைவர் ச. மாடசாமி, மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், எஸ்.பி.கே. கல்லூரி, அருப்புக்கோட்டை.

முனைவர் தெ. வெற்றிச்செல்வன், உதவிப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

த. தனுஷ்கோடி,
முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார் கோவில், சிவகங்கை மாவட்டம்.

நூலாசிரியர் குழு

ப. கலைச்செல்வி, தமிழ் விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
களியாம்பூண்டி – 603 402, காஞ்சிபுரம் மாவட்டம்.

தமிழ். திருமால், தமிழாசிரியர், திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி, குடியாத்தம், வேலூர்.

பெ. சோமசுந்தரம், பட்டதாரி ஆசிரியர், அரசு மேனிலைப் பள்ளி, வடமதுரை, திண்டுக்கல்.

கொ.சுப. கோபிநாத், பட்டதாரி ஆசிரியர், மொகைதீன் அப்துல்காதர் அ.மே. பள்ளி, காரையூர், புதுக்கோட்டை.

சொ. இராஜலட்சுமி, தமிழாசிரியர், அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, படப்பை, காஞ்சிபுரம்.

கு. சிவக்குமார், தமிழாசிரியர், அரசு மேனிலைப் பள்ளி, அரும்பாக்கம், சென்னை.

சி. பொய்யாமொழி, ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், திருப்பெரும்புதூர் ஒன்றியம், காஞ்சிபுரம்.

ஹ. சிவராமன், இடைநிலை ஆசிரியர், சௌராஷ்டிர ஸ்ரீவரதராஜா உயர்நிலைப் பள்ளி, பாரதிபுரம், திண்டுக்கல்.

சீ. திருமுருகன், இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. நடுநிலைப் பள்ளி, தாண்டாம்பாளையம், ஈரோடு.

கணினி அச்சு : ச. மெய்யழகன், இரா. மாரியப்பன் ● ஓவியம் : கோ. இராமமூர்த்தி, ப. கருப்புசாமி, ஸ்ரீதர் ● வடிவம் : மாரீஸ்.

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்,
கல்லூரிச்சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச்சாலை, சென்னை – 600 006.

விலை : ரூ.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும் சிந்துவையும் கூர்ச்சரத்தையும் மராட்டியத்தையும் திராவிடத்தையும் ஒரிசாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

‘நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்’ என்று உளமார உறுதி கூறுகிறேன்.

‘ஒருபோதும் வன்முறையை நாடேன்’ என்றும், ‘சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதிநெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்’ என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

‘இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட நான் என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.’

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன்சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

- மனோன்மணியம் பெ. சுந்தரனார்

## பொருளடக்கம்


| இயல் | | பக்க எண் |
|---|---|---|
| 1 | வாழ்த்து | 1 |
| | திருக்குறள் | 2 |
| | தமிழ்த்தாத்தா உ. வே. சா. | 5 |
| | கடைசிவரை நம்பிக்கை | 8 |
| 2 | நாலடியார் | 16 |
| | பாரத தேசம் | 17 |
| | பறவைகள் பலவிதம் | 16 |
| | பாம்புகள் | 21 |
| 3 | நான்மணிக்கடிகை | 30 |
| | ஆராரோ ஆரிரரோ | 31 |
| | வீரச்சிறுவன் | 35 |
| 4 | இசையமுது | 42 |
| | பழமொழி நானூறு | 43 |
| | மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம் | 44 |
| | ஊர்த்திருவிழா – ஒரு கலைவிழா | 47 |
| 5 | சித்தர் பாடல் | 54 |
| | இளமையில் பெரியார் கேட்ட வினா | 56 |
| | தங்கமாம்பழமும் சூட்டுக்கோலும் | 60 |

| இயல் | | பக்க எண் |
| --- | --- | --- |
| 6 | புறநானூறு | 68 |
| | திண்ணையை இடித்துத் தெருவாக்கு! | 69 |
| | தேசியம் காத்த செம்மல் | 70 |
| | எது பெரிய உண்மை? | 74 |
| 7 | திருக்குறள் | 84 |
| | செய்யும் தொழிலே தெய்வம் | 86 |
| | கல்லிலே கலைவண்ணம் | 87 |
| | சாதனைப் பெண்மணி மேரிகியூரி | 90 |
| 8 | தனிப்பாடல் | 98 |
| | அந்தக் காலம் இந்தக் காலம் | 100 |
| | தயக்கம் இன்றித் தமிழிலேயே பேசுவோம் | 101 |
| | நாடும் நகரமும் | 105 |
| 9 | குற்றாலக் குறவஞ்சி | 114 |
| | மரமும் பழைய குடையும் | 116 |
| | எது பண்பாடு? | 117 |
| | வணக்கம் ஐயா! | 122 |
| | மொழி விளையாட்டுகள் | 133 |

## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
|---|---|---|
| 1 | வாழ்த்து | 4 |
| | திருக்குறள் (1, 2, 4, 7, 10) | 10 |
| 2 | நாலடியார் | 4 |
| 4 | இசையமுது | 9 |
| 6 | புறநானூறு | 4 |
| 7 | திருக்குறள் ( 3,5,6,8,10 ) | 10 |
| 8 | தனிப்பாடல் | 8 |
| 9 | குற்றாலக் குறவஞ்சி ( 1 – 4 அடிகள் ) | 4 |
| | மனப்பாடஅடிகள் மொத்தம் | 53 |

(பாடநூலுள் * இவ்வுடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி)

# வாழ்த்து

## திருவருட்பா

**கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்என்**
**எண்ணில் கலந்தே இருக்கின்றான் – பண்ணில்**
**கலந்தான்என் பாட்டில் கலந்தான் உயிரில்**
**கலந்தான் கருணை கலந்து.** *

– இராமலிங்க அடிகளார்

### பாடல்பொருள்

கருணை நிறைந்த இறைவன் என் கண்ணில் இருக்கிறான்; என் சிந்தனையில் கலந்து இருக்கிறான்; என் எண்ணத்தில் கலந்து இருக்கிறான்; என் பாட்டில் கலந்து இருக்கிறான்; பாட்டின் இசையில் கலந்து இருக்கிறான். அவன், என் உயிரில் கலந்து இருக்கிறான்.



### ஆசிரியர் குறிப்பு

இராமலிங்க அடிகளார், திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். இவர், கடலூர் மாவட்டம் மருதூரில் பிறந்தவர். பெற்றோர் இராமையா – சின்னம்மையார் . ஜீவகாருண்யஒழுக்கம், மனுமுறை கண்டவாசகம் ஆகிய நூல்கள் இவர் எழுதியவை. இவர் பாடல்கள் அனைத்தும் 'திருவருட்பா' எனத் தொகுக்கப்பட்டுள்ளன. சமரச சன்மார்க்க நெறியை வழங்கியவர் இவரே.

அனைத்து மதங்களின் நல்லிணக்கத்திற்காகச் சன்மார்க்க சங்கத்தையும், பசித்துயர் போக்கி, மக்களுக்கு உணவளிக்க அறச்சாலையையும் அமைத்தவர். அறிவுநெறி விளங்க ஞானசபையையும் நிறுவியவர். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய கருணை மனம் இவருடையது. வடலூர் அறச்சாலையில், பசியால் வாடும் மக்களுக்குச் சோறிட, இவர் அன்று மூட்டிய அடுப்பு இன்றும் அணையாமல், தொடர்ந்து பசிப்பிணி தீர்த்து வருகிறது. இவர் வாழ்ந்த காலம் 05. 10. 1823முதல் 30.01. 1874வரை.

இவரது திருவருட்பாவிலிருந்து ஒரு பாடல், வாழ்த்துச் செய்யுளாகத் தரப்பட்டுள்ளது.

# திருக்குறள்

## அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். *

பொருள் : அன்பை அடைத்து வைக்க தாழ்ப்பாள் இல்லை; அன்புக்கு உரியவரின் துன்பத்தைப் பார்த்ததுமே அன்பு, கண்ணீராக வெளிப்பட்டு நிற்கும்.

(ஆர்வலர் – அன்புடையவர்; புன்கணீர் – துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்; பூசல் தரும் – வெளிப்பட்டு நிற்கும்.)

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. *

பொருள்: அன்பில்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கு மட்டும் உரியது என்று எண்ணுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

(என்பு — எலும்பு. இங்கு உடல், பொருள், ஆவியைக் குறிக்கிறது.)

3. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

பொருள்: உடம்போடு உயிர் இணைந்து இருப்பதனைப்போல, வாழ்க்கை நெறியோடு அன்பு இணைந்து இருக்கிறது.

(வழக்கு – வாழ்க்கைநெறி; ஆருயிர் – அருமையான உயிர்.)

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு. *

பொருள்: அன்பு விருப்பத்தைத் தரும். விருப்பம், அனைவரிடமும் நட்புக்கொள்ளும் பெருஞ்சிறப்பைத் தரும்.

(ஈனும் – தரும்; ஆர்வம் – விருப்பம்; வெறுப்பை நீக்கி விருப்பத்தை உண்டாக்கும் என்பது பொருள். நண்பு – நட்பு.)

5. அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

பொருள்: அன்போடு பொருந்திய வாழ்க்கை நெறியைக் கடைப்பிடித்தவர் உலகத்தில் மகிழ்ச்சி உடையவர் ஆவர். (என்ப – என்பார்கள்; வையகம் – உலகம்.)

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

பொருள்: அன்பு அறத்தை மட்டும் சார்ந்தது என்று கூறுவோர் அறியாதவர்; வீரத்திற்கும் அன்புதான் துணை. (மறம் – வீரம்; கருணை, வீரம் இரண்டிற்குமே அன்புதான் அடிப்படை என்பது பொருள்.)

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். *

பொருள்: எலும்பு இல்லாத உயிர்களை வெயில் வருத்தி அழிப்பதுபோல, அன்பில்லாத உயிர்களை அறம் வருத்தி அழிக்கும்.

(என்பிலது – எலும்பு இல்லாதது (புழு); அன்பிலது – அன்பில்லாத உயிர்கள்.)

8. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

பொருள்: பாலை நிலத்தில் வாடிய மரம் தளிர்க்காது. அதுபோல, நெஞ்சில் அன்பு இல்லாத மனிதர் வாழ்க்கை தளிர்க்காது.

(அன்பகத்து இல்லா – அன்பு + அகத்து + இல்லா – அன்பு உள்ளத்தில் இல்லாத; வன்பாற்கண் – வன்பால் + கண் – பாலை நிலத்தில். வற்றல்மரம் – வாடிய மரம்; தளிர்த்தற்று – தளிர்த்து + அற்று – தளிர்த்ததுபோல.)

9. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

பொருள்: நெஞ்சில் அன்பு இல்லாதவர்க்குக் கை, கால் முதலிய உடல் உறுப்புகளால் என்ன பயன் ?

(புறத்துறுப்பு – உடல் உறுப்புகள்; எவன் செய்யும் – என்ன பயன் ?; அகத்துறுப்பு – மனத்தின் உறுப்பு, அன்பு.)

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. *

பொருள்: அன்பு செய்வதுதான் உடம்பில் உயிர் இருப்பதற்கு அடையாளம். அன்பில்லாதவர் உடம்பு வெறும் தோலால் மூடப்பட்ட எலும்புதான். அங்கு உயிர் இல்லை.



## ஆசிரியர் குறிப்பு

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

இவருடைய காலம் கி.மு. 31 எனக் கூறுவர். இதனைத் தொடக்கமாகக் கொண்டே திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது. இவருடைய ஊர், பெற்றோர் குறித்த முழுமையான செய்திகள் கிடைக்கவில்லை.

இவர் செந்நாப்போதார், தெய்வப்புலவர், நாயனார் என வேறு பெயர்களாலும் போற்றப்படுகிறார்.

## நூல் குறிப்பு

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.

இந்நூலில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் 10 குறட்பாக்கள் என 1330 குறட்பாக்கள் உள்ளன. திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலை முப்பால், பொதுமறை, தமிழ்மறை எனவும் கூறுவர். திருக்குறள் 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுகிறது.

திருக்குறளில் உள்ள 'அன்புடைமை', 'இனியவை கூறல்' ஆகிய அதிகாரங்கள் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

### திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கிடும் முறை

கிறித்து ஆண்டு (கி.பி.) + 31 = திருவள்ளுவர் ஆண்டு.

எடுத்துக்காட்டு : 2012 + 31 = 2043

(கி.பி. 2012ஐத் திருவள்ளுவர் ஆண்டு 2043 எனக் கூறுவோம்.)

# தமிழ்த்தாத்தா உ. வே. சா.



"ஐயா... ஐயா..."

வெளியில் யாரோ அழைக்கும் குரல்கேட்டு வீட்டுக்குள் இருந்த பெரியவர் வாசலுக்கு வந்தார். யாரோ உதவி கேட்டுத்தான் வந்திருப்பார் என்று நினைத்து வந்தவருக்கு வியப்பு. வாசலில் நின்றவரைப் பார்த்தால், அவர் பெரிய மனிதராகவும் நல்ல படிப்பாளியாகவும் தெரிந்தார். அவர் முகத்தில் அப்படியொரு தெளிவு இருந்தது.

"என்ன வேண்டும் ?" என்று வீட்டுக்காரர் கேட்டார்.

"தங்கள் வீட்டில் பழைய ஓலைச்சுவடிகள் நிறைய இருப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன். அவற்றில், தமிழ்மொழியின் சிறந்த இலக்கியங்கள் இருக்கலாம். ஓலைச்சுவடியில் உள்ளனவற்றை எல்லாம் எழுதிப் புத்தகமாக அச்சிட்டு வருகிறேன். உங்கள் வீட்டில் உள்ள சுவடிகளைக் கொடுத்தால், அவற்றைப் பார்த்து எழுதிவிட்டுத் திருப்பித் தந்துவிடுவேன். இந்த உதவியை மறுக்காமல் தாங்கள் செய்தல் வேண்டும்" என்றார்.

இதனைக் கேட்ட வீட்டுக்காரருக்குச் சினம் வந்துவிட்டது.

"நாளை ஆடிப்பெருக்கு. விடியற்காலையில் ஆற்றில் விடுவதற்காக வீட்டில் கொஞ்சம் ஓலைச்சுவடிகள் வைத்திருக்கிறேன். அது பொறுக்கவில்லையா உமக்கு ?" எனக் கத்தினார்.

"ஓலைச்சுவடிகளைப் படிக்கவேண்டுமே தவிர, அவற்றை ஏன் ஆற்றில் விடவேண்டும்... ?" என வந்தவர் கேட்டார்.

வீட்டுக்காரர் மேலும் சினம் கொண்டார். "அஃது உமக்குத் தேவையில்லாதது. ஆடிப்பெருக்கு நாளில் சுவடிகளை ஆற்றில் விட்டால் புண்ணியம் என்பது சாத்திரம். அவற்றை எல்லாம் கொடுக்கக்கூடாது" எனக் கூறி, வந்தவரை விரட்டினார்.

வந்த பெரியவர், வீட்டுக்காரரிடம் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், அவர் ஓலைச்சுவடிகளைத் தர ஒத்துக்கொள்ளவில்லை. வந்தவரோ அதற்காக மனம் தளரவில்லை; அந்த ஊரைவிட்டும் செல்லவில்லை. அந்த வீட்டுக்காரருக்குத் தெரியாமல், அன்றிரவு வேறொரு வீட்டுத்திண்ணையில் படுத்துக்கொண்டார். குளிரும் பனியும் அவரை வாட்டின.



(உ. வே. சா. பதிப்பித்த மணிமேகலை ஓலைச்சுவடியின் ஓர் ஏடு)

விடியற்காலையில் கோழி கூவியதும் அந்த வீட்டுக்காரர் ஓலைச்சுவடிகளுடன் ஆற்றுக்குச் செல்வதனைப் பார்த்தார் அந்தப் பெரியவர்; அவரைப் பின்தொடர்ந்து மறைந்து மறைந்து சென்று, ஒரு புதருக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு நடப்பதனை எல்லாம் பார்த்துக்கொண்டு இருந்தார்.

வீட்டுக்காரர் நீராடியபின், ஓலைச்சுவடிகளை ஆற்றில்விட்டுச் சென்றார். அவர் விட்டுச்சென்ற ஓலைச்சுவடிகளை அப்பெரியவர் தேடி எடுத்தார். அவற்றில் இருந்த ஈரத்தைத் தன் வேட்டியால் துடைத்தார். அங்கேயே சுவடிகளை வாசிக்கத் தொடங்கினார். அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. அவர் தேடித்தேடி அலைந்த அருந்தமிழ் இலக்கியங்கள் சில அச்சுவடிகளில் இருந்தன. அந்தப் பெரியவரே உ.வே. சாமிநாதர். (இந்த நிகழ்வு இன்றைய ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடுமுடி என்னும் ஊரில் நடைபெற்றது.)

அந்தக் காலத்தில் தாளோ எழுதுகோலோ இல்லை. பனை ஓலையைப் பக்குவப்படுத்தி, அதில் எழுத்தாணி கொண்டு எழுதுவார்கள். அவ்வாறு எழுதப்பட்ட ஓலைக்கு 'ஓலைச்சுவடி' என்று பெயர். அக்காலத்தில் செய்யுள், இலக்கணம் முதலியன ஓலைச்சுவடிகளில்தான் எழுதப்பட்டன. ஓலையில் ஆணியால் எழுதும்போது, ஓலை கிழியாமல் எழுதுதல் வேண்டும். அதனால், ஓலைச்சுவடி எழுத்துகளில் புள்ளி இருக்காது; ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடு இருக்காது. பேரன் என்பதனைப் பெரன என்றும் வாசிக்கலாம். பேரன என்றும் வாசிக்கலாம். முன்னும் பின்னும் உள்ள வரிகளை வைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

பிழை இல்லாமல் எழுதவேண்டும் என்பதற்காக, உ. வே. சா. வெவ்வேறு சுவடிகளை வைத்துப் பலமுறை ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே, அவற்றை அச்சுக்கு அனுப்பினார்.

அவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளை வாசித்து, நமக்காகத் தாளில் எழுதி, அச்சிட்டுப் புத்தகமாக வழங்கினார் உ. வே. சாமிநாதர். நாம் அவ்விலக்கியங்களைப் படிப்பதற்காக அவர் ஓய்வின்றி உழைத்தார். அதனால், அவரைத் தமிழ்த்தாத்தா உ. வே. சா. என அன்போடும் உரிமையோடும் நாம் அழைக்கிறோம்.

'குறிஞ்சிப்பாட்டு' என்னும் சுவடியை அச்சில் பதிப்பிப்பதற்காக எழுதிக் கொண்டிருந்தார். அச்சுவடியில் தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள்

ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் சில இடங்கள் :

1. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை.
2. அரசு ஆவணக் காப்பகம் , சென்னை.
3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. சரசுவதி நூலகம், தஞ்சாவூர்.

இருந்தன. அவற்றுள், தொண்ணூற்றாறு பூக்களுடைய பெயர்கள் மட்டுமே தெளிவாக இருந்தன; மூன்று பூக்களின் பெயர்கள் தெளிவாக இல்லை. ஆனால், மூன்றே மூன்று பூக்கள் தானே தெரியவில்லை என அவர் விட்டுவிடவில்லை. அந்தப் பூக்களின் பெயர்கள் தெளிவாக உள்ள சுவடி யாரிடமாவது இருக்காதா என மறுபடியும் ஊர்ஊராக, வீடுவீடாகத் தேடிச் சென்றார். (குறிஞ்சிப்பாட்டு – பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; இதன் ஆசிரியர் கபிலர்) பல மாதங்கள் கழித்து, அவர் தேடிய பூக்களின் பெயர்கள் உள்ள சுவடி ஒன்று கிடைத்தது. அதன் பிறகே அந்நூலை அச்சுக்குக் கொடுத்தார். எதனையும் அரைகுறையாகச் செய்ய விரும்பாத சுறுசுறுப்பான அந்தத் தாத்தா, தம் வாழ்நாள் முழுவதும் ஓய்வில்லாமல் பதிப்புப் பணியை மேற்கொண்டார்.

அவர் பிறந்த ஊர், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம். அவருடைய இயற்பெயர் வேங்கடரத்தினம். அவருடைய ஆசிரியரின் பெயர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம். அவருடைய ஆசிரியர், அவருக்கு வைத்த பெயர் சாமிநாதன். அதனால் அவர், உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன் என்பதன் சுருக்கமாகவே உ. வே. சா. என்று அழைக்கப்பட்டார். 19. 02. 1855ஆம் ஆண்டு பிறந்த அவர், 28. 04. 1942 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார். அஃது என் சரிதம் என்னும் பெயரில் நூலாக வெளிவந்தது.

அவர் தொடங்கிய தமிழ்ப்பணி இன்னும் முழுமை அடையவில்லை. அவருடைய பேரப்பிள்ளைகளான நாமும் அப்பணியைத் தொடர்வோம்.

### சிறப்புக் குறிப்புகள்

* உ.வே.சா. அவர்களின் பெயரால் 1942இல் நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் இன்றும் சென்னையில் உள்ள பெசண்ட் நகரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

* உ.வே.சா. அவர்களின் தமிழ்ப் பணிகளை வெளிநாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், சூலியல் வின்சோன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

* நடுவணரசு, உ.வே.சா. அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் வகையில் 2006ஆம் ஆண்டு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

உ. வே. சா. பதிப்பித்த நூல்கள்

| | |
|---|---|
| எட்டுத்தொகை | 8 |
| பத்துப்பாட்டு | 10 |
| சீவகசிந்தாமணி | 1 |
| சிலப்பதிகாரம் | 1 |
| மணிமேகலை | 1 |
| புராணங்கள் | 12 |
| உலா | 9 |
| கோவை | 6 |
| தூது | 6 |
| வெண்பா நூல்கள் | 13 |
| அந்தாதி | 3 |
| பரணி | 2 |
| மும்மணிக்கோவை | 2 |
| இரட்டைமணிமாலை | 2 |
| பிற பிரபந்தங்கள் | 4 |



உ. வே. சா. நினைவு இல்லம், உத்தமதானபுரம்.




நடுவண் அரசு, 2006ஆம் ஆண்டு வெளியிட்ட சிறப்பு அஞ்சல்தலை



# கடைசிவரை நம்பிக்கை

சிறுமி ஒருத்தியின் உண்மை வரலாறு இது. அவள் பெயர் சடகோ. முழுப்பெயர் சடகோ சசாகி. அவள் ஜப்பான் நாட்டுச் சிறுமி.

ஜப்பானில் இரண்டு இடங்களில் அமெரிக்கா குண்டு வீசியது. ஒன்று ஹிரோசிமா; மற்றொன்று நாகசாகி. அக் குண்டுவீச்சில் இரண்டு இலட்சம் ஜப்பானியர் இறந்தனர்.

ஹிரோசிமாவுக்கு அருகில் சடகோ, தன் பெற்றோருடன் வசித்து வந்தாள். அப்போது, அவளுக்கு வயது இரண்டு . குண்டுவீச்சில் அவள் குடும்பம் தப்பியது.

சடகோ பள்ளியில் படித்து வந்தாள். அவளுக்கு 11 வயது ஆனது. ஒருநாள் பள்ளியில், அவள் விளையாடிக்கொண்டு இருந்தாள். அப்போது, திடீரென மயங்கி விழுந்தாள். மருத்துவர் அவளைச் சோதித்துப் பார்த்தார். அவளுக்குப் புற்றுநோய்!

அணுகுண்டு வெடித்தபோது உண்டான கதிர்வீச்சுதான் இதற்குக் காரணம். சடகோவை மருத்துவமனையில் சேர்த்தார்கள். புற்றுநோய் ஆளைக் கொல்லும் என்பதனைச் சடகோ தெரிந்து கொண்டாள்.

ஆனால், சடகோ சாக விரும்பவில்லை; உயிர்வாழவே ஆசைப்பட்டாள். ஒருநாள் சிசுகோ என்னும் தோழி, அவளைப் பார்க்க வந்தாள். சிசுகோ கை நிறைய காகிதங்கள் எடுத்து வந்தாள். அந்தக் காகிதங்கள் சதுரம் சதுரமாக வெட்டப்பட்டு இருந்தன. ஒரு காகிதத்தைச் சிசுகோ எடுத்தாள். அப்படியும் இப்படியும் காகிதத்தை மடக்கிக் கொக்கு ஒன்று செய்தாள். ஜப்பானியர் வணங்கும் பறவை – கொக்கு.

“சடகோ, கவலைப்படாதே! நான் செய்தது மாதிரி ஆயிரம் கொக்குகள் செய்! நோய்

குணமாகும். இது நம் நாட்டு நம்பிக்கை" என்றாள், சிசுகோ.

சடகோவுக்கு நம்பிக்கை கிடைத்தது; துணிச்சல் பிறந்தது. நாள்தோறும் கொக்குகள் செய்யத் தொடங்கினாள். தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு இருபது கொக்குகள் செய்தாள். நாள் செல்லச்செல்ல உடம்பில் வலிமை குன்றியது. அவளால், நாள் ஒன்றுக்கு மூன்று கொக்குகள்கூடச் செய்ய இயலவில்லை.



சிறுமி சடகோ

சடகோ, தன்னை மரணம் நெருங்கிவிட்டதனை உணர்ந்தாள். ஆனாலும், காகிதக் கொக்கு செய்வதனை மட்டும் அவள் நிறுத்தவே இல்லை. கொக்கு செய்யும்போது, அவள் கவலையை மறந்திருந்தாள்.

ஒருநாள், அவளால் ஒரு கொக்கு மட்டுமே செய்ய முடிந்தது. அதன்பிறகு, அவளால் எதுவும் செய்ய இயலவில்லை. 1955ஆம் ஆண்டு அக்டோபர் 25ஆம் நாள் சடகோ இறந்துவிட்டாள்.

சடகோவின் படுக்கை முழுவதும் காகிதக் கொக்குகள் இருந்தன. மொத்தம் அறுநூற்று நாற்பத்து நான்கு கொக்குகள் இருந்தன. ஆயிரம் கொக்குகளுக்கு இன்னும் முந்நூற்று ஐம்பத்தாறு கொக்குகள் வேண்டும். தோழிகள் கூடி முந்நூற்று ஐம்பத்தாறு கொக்குகள் செய்தனர்; எண்ணிக்கையை ஆயிரம் ஆக்கினர். சடகோவின் விருப்பத்தை நிறைவு செய்தனர்.



காகிதத்தில் உருவங்கள் செய்யும் கலையை ஜப்பானியர் 'ஓரிகாமி' என்று கூறுவர்.

தன் வாழ்நாளின் இறுதிவரை நம்பிக்கையுடன் வாழ்ந்தவள் சடகோ. தான் தொடங்கிய செயலை, அவள் நிறுத்தவே இல்லை.

அவளுக்கு ஒரு நினைவாலயம் கட்ட வேண்டுமெனத் தோழிகள் நினைத்தார்கள். அதற்காகப் பொதுமக்களிடம் நிதி திரட்டி, ஹிரோசிமா நகரின் மையத்தில் நினைவாலயம் கட்டினார்கள். அதனுள் சடகோவுக்குச் சிலை வைத்தார்கள். அதற்குக் குழந்தைகள் அமைதி நினைவாலயம் எனப் பெயர் சூட்டினார்கள். அந்நினைவாலயத்தில் பின்வருமாறு எழுதி வைத்தார்கள்.

உலகத்தில் அமைதி வேண்டும்!

இஃது எங்கள் கதறல்! இஃது எங்கள் வேண்டுதல்!

(நாள்தோறும் நூற்றுக்கணக்கான குழந்தைகள் அந்த நினைவாலயம் வருகின்றனர். சடகோ சிலைக்குக் காகிதக் கொக்குகள் செய்து வணங்குகின்றனர்.)

நன்றி: அரவிந்த குப்தா எழுதிய, 'டென் லிட்டில் பிங்கர்ஸ்'.

## 1. இலக்கணம்

இலக்கணம் எதற்கு ? நாம் பேசும் மொழியை, எழுதும் மொழியை முறையாகப் புரிந்து கொள்வதற்கு இலக்கணம் தேவை.

இப்படி எழுது, அப்படி எழுது எனக் கட்டளை இடுவதற்காக இல்லை.

அவன் வந்தாள் – என எழுதினால் யாருக்காவது புரியுமா ? வந்தவர் ஆணா, பெண்ணா என்பது எப்படித் தெரியும் ?

நாம் பேசுவதும் எழுதுவதும் மற்றவர்க்கும் புரிதல் வேண்டும்; நமக்கும் புரிதல் வேண்டும். அதற்குத்தான் இலக்கணம் தேவைப்படுகிறது.

## 2. மொழிக்குள் வியப்பு

ஒரு கடலைப் பார்க்கிறோம். ஒரு மலையைப் பார்க்கிறோம். எப்படி வியக்கிறோம்! ஒரு மொழியைப் படிக்கும்போது, அப்படி ஒரு வியப்பு ஏற்படும்.

தமிழின் முதல் எழுத்து – அ

'அ' என்னும் எழுத்தின் முதுகுக்குப் பின்னால் | இதுபோன்று ஒரு கோடு இருக்கிறது. உலகத்தில் நூற்றுக்கணக்கான மொழிகளின் முதல் எழுத்திலும் இப்படி ஒரு கோடு இருக்கிறது. அ எழுத்து மனிதனைக் குறிக்கிறதாம். | இந்த முதுகுக்கோடு பழங்காலத்தில் வேட்டை ஆடுவதற்கு மனிதன் முதுகில் சுமந்த அம்புக்கூட்டைக் குறிக்கிறதாம்; என்னே, வியப்பான செய்தி!

## 3. எழுத்துகளும் மனிதர்களும்

மனிதர்களைப்போலத்தான் எழுத்துகளும். அவற்றுக்குள் நட்பும் உண்டு; இனமும் உண்டு.

'ங்' என்னும் எழுத்துக்குப் பின்னால் 'க' இன எழுத்தே வரும். 'ங்', 'க' இரண்டும் நண்பர்கள். (எ.கா. ) சிங்கம், தங்கை.

அதேபோல் 'ஞ்', 'ச' இரண்டும் நண்பர்கள். இவ்விரண்டும் சேர்ந்தே வரும். (எ.கா.) மஞ்சள், அஞ்சாதே.

ண்ட, ந்த, ம்ப, ன்ற – எழுத்துகளும் நண்பர்கள். பெரும்பாலும் இவை சேர்ந்தே வரும். (எ.கா.) பண்டம், பந்தல், கம்பன், தென்றல்.

நீங்களும் சில சொற்களைச் சொல்லிப் பாருங்கள். நட்பு எழுத்துகளைக் கண்டுபிடியுங்கள்.

(நட்பு எழுத்துகளை இன எழுத்துகள் என இலக்கணம் கூறுகிறது.)

## 4. வேறுபாடு அறிதல் :

### 1. குறில் நெடில்

ஓடோடி வந்தான்.

இத்தொடரில் 'ந்' மற்றும் 'ன்' இரண்டும் மெய் எழுத்துகள். அவற்றை விடுத்து, மீதம் உள்ள எழுத்துகளில்,

ஓ டோ தா – இவை மூன்றும் நெடில் எழுத்துகள்.

டி வ – இவை இரண்டும் குறில் எழுத்துகள்.

நல்ல தமிழில் எழுத குறில், நெடில் வேறுபாடு அறிவது அடிப்படை அறிவாகும்.

பயிற்சி அ. நெடில் எழுத்துகளைக் கோடிட்டுக் காட்டுக.

பாட்டில் கலந்தான்.

என்புதோல் போர்த்த உடம்பு.

ஆ. குறில் எழுத்துகளைக் கோடிட்டுக் காட்டுக.

இன்புற்றார் எய்தும் சிறப்பு.

அன்பின் வழியது உயிர்நிலை.

### 2. ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு

செய், சேய் என்னும் இரண்டு சொற்களைப் பாருங்கள்.

செ – இஃது ஒற்றைக்கொம்பு.

சே – இஃது இரட்டைக்கொம்பு.

ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பால் பொருள் எப்படி மாறுகிறது பாருங்கள்.

இதனைச் செய், தாய்சேய் நலவிடுதி.

ச் என்பது மெய்யெழுத்து, எ என்பது உயிரெழுத்து.

இவ்விரண்டும் சேரும்போது செ. இது குறில்.

ச் உடன் ஏ சேரும்போது சே. இது நெடில்.

பயிற்சி : செடி, சேவல், பெண், பேகன், வெடி, வேடன், தென்னை, தேள், நெல், நேர்மை – இந்தச் சொற்களில் கொம்புடைய எழுத்துகளைப் பிரித்து எழுதுக.

| ஒற்றைக்கொம்பு | இரட்டைக்கொம்பு |
|---|---|
| செ டி = ச் + எ | நே ர் மை = ந் + ஏ |
| | |
| | |
| | |

**3. ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்புகளோடு துணை எழுத்துச் சேரும்போது ஏற்படும் மாற்றங்களைப் பாருங்கள்.**

கொடி பறக்கும் கோடிப்பணம் கிடைக்கும்

க் + ஒ – இரண்டும் சேர்ந்தால் கொ. இது குறில்.

க் + ஓ – இரண்டும் சேர்ந்தால் கோ. இது நெடில்.

பயிற்சி : கொம்பு, கொடி, கோவில், போர்வை, சோலை, சொல், பொன், தோல், மோர், நொடி. இந்தச் சொற்களில் ஒற்றை, இரட்டைக்கொம்பும், துணையெழுத்தும் உடைய எழுத்துகளைப் பிரித்தெழுதுக.

| ஒற்றைக்கொம்பும் துணை எழுத்தும்<br>பொன் = ப் + ஒ | இரட்டைக்கொம்பும் துணை எழுத்தும்<br>சோலை = ச் + ஓ |
|---|---|
| | |

## 5. பிரித்தலும் சேர்த்தலும்

### 1. பிரித்து அறிதல்

பழந்தமிழ் இலக்கியம் நம் செல்வம். பொருள் உணர்வுக்கு ஏற்பப் பிரித்துப் படிக்கத் தெரியாமல், பழந்தமிழ் இலக்கியத்தின் அருமையை நாம் அறிந்துகொள்ள முடியாது. ஆகையால், பிரித்துப் படிக்கும் திறமையை நாம் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

(எ.கா.) தமக்குரியர் → தமக்கு + உரியர்

அன்பீனும் → அன்பு + ஈனும்

நிழலருமை → நிழல் + அருமை

பிரித்தபோது விடுதலையான எழுத்துகளைக் கண்டுபிடித்துவிட்டீர்களா ? உ, ஈ, அ மூன்றும் உயிர் எழுத்துகள் அல்லவா ? கீழ்க்காண்பனவற்றைப் பிரித்து எழுதுக.

வழக்கென்ப → ____________

புறத்துறுப்பு → ____________

தரமில்லை → ____________

விடுதலையாகி வெளிப்பட்ட உயிர் எழுத்துகளைக் கோடிட்டுக் காட்டுக.

## 2. சேர்த்து எழுதுதல்

சொற்களைச் சேர்த்துப் பேசும் வழக்கமும் எழுதும் வழக்கமும் நம்மிடம் உள்ளன. அவனெங்கே என்றுதான் கேட்கிறோம். அவன் எங்கே என்று பிரித்துப் பேசுவதில்லை.

பயிற்சி : சேர்த்து எழுதுக.

பருப்பு + உணவு – ________________

கரும்பு + எங்கே ? – ________________

அவன் + அழுதான் – ________________

அவள் + எங்கே ? – ________________

சொற்கள் சேரும்போது மறைந்த எழுத்துகள் எவை ? அவையும் உயிர் எழுத்துகள்தாமே ! உயிர் எழுத்துகள் மறைவதும் வெளிப்படுவதும் ஏன் ? சிந்தியுங்கள்.

## வகுப்பறைத் திறன்கள்

### 1. பேசும் திறன்

ஏதேனும் ஒரு தலைப்பில் மூன்று மணித்துளிகள் பேசுக.

அ. என்மீது அன்பு செலுத்துபவர்.

ஆ. காணாமல் போன ஒரு பொருள் – அதனை நான் கண்டுபிடித்த முறை.

இ. என் தாத்தா/பாட்டி.

### 2. எழுதும் திறன்

I. ஓரிரு சொற்களில் விடை தருக.

அ. யாரை நாம் வள்ளலார் என அழைக்கிறோம் ?

ஆ. என்பு என்பதன் பொருள் யாது ?

இ. தமிழ்த்தாத்தாவின் வாழ்க்கை வரலாற்று நூலின் பெயர் என்ன ?

ஈ. குறிஞ்சிப்பாட்டு எத்தனை பூக்களைக் குறிப்பிடுகின்றது ?

உ. சடகோ எந்த நாட்டுச் சிறுமி ?

II. ஓரிரு வரிகளில் விடை தருக.

அ. அன்புடையார் இயல்பு யாது ?

ஆ. அன்பில்லாத வாழ்க்கை தளிர்க்காது. எதனைப் போல ?

இ. குறிஞ்சிப்பாட்டு நூலைப் பதிப்பிக்க உ. வே. சா. மேற்கொண்ட முயற்சி யாது ?

ஈ. சடகோவின் நினைவாலயத்தில் தோழிகள் எழுதி வைத்த சொற்றொடரை எழுதுக.

3. படைப்புத்திறன்

அ. கொடுமுடியில் உ. வே. சா. சுவடி தேடிய நிகழ்ச்சியைச் சிறு நாடகமாக நடித்துக் காட்டுக.

ஆ. சடகோ, சிசுகோ – இரு பெயர்களும் கோ என்னும் எழுத்தில் முடிந்துள்ளன. லா என்னும் எழுத்தில் முடியும் சில பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக. (எ.கா.) அகிலா.

## வாழ்க்கைத்திறன்கள்

இவ்வியலின்வழி நாம் கற்ற வாழ்க்கைத்திறன்கள் இரண்டு.

1. நம்பிக்கை　　　2. முயற்சி

இவை குறித்து மேலும் சிந்திப்போம்.

பயிற்சி

1. நம்பிக்கை தருதல் (உரிய விடையைத் தேர்வு செய்க.)

I. சடகோவுக்கு நம்பிக்கை தந்தவர்

அ. மருத்துவர்　　ஆ. பெற்றோர்　　இ. தோழி சிசுகோ

II. ஓட்டப்போட்டியில் தோற்றுப்போனவரிடம் எப்படிப் பேசுதல் வேண்டும்?

அ. நீ மெதுவாக ஓடினாய்.

ஆ. இனி, ஓட்டப்போட்டியில் கலந்துகொள்ளாதே!

இ. அடுத்தபோட்டியில் நீ உறுதியாக வெற்றி பெறுவாய்!

III. விபத்தில் சிக்கி அடிபட்டவரிடம் எப்படிப் பேசுதல் வேண்டும்?

அ. நீ ஏன் அந்தப் பக்கம் போனாய்?

ஆ. இனிமேல், மிதிவண்டி ஓட்டாதே, நடந்து போ!

இ. நீ விரைவில் நலம் பெறுதல் வேண்டும்.

2. நம்பிக்கை பெறுதல்

I. நினைவில் நிற்பது...

அ. சடகோவின் கண்ணீர்　　ஆ. சடகோவின் படிப்பு

இ. சடகோவின் நம்பிக்கை

II. மூன்று பூக்களின் பெயர்களைக் கண்டுபிடிக்கலாம் என்னும் நம்பிக்கை உ. வே. சா. அவர்களுக்கு இருந்ததா ?

அ. இருந்தது ஆ. இல்லை இ. தெரியவில்லை

III. உ. வே. சா. அவர்களின் நம்பிக்கைக்குக் காரணம் என்ன ?

அ. அவருடைய வயது ஆ. அவருடைய அறிவு

இ. அவருடைய ஆர்வம்

IV. பள்ளிக்குப் போகும் பாதை முழுவதும் சேறும் சகதியுமாக உள்ளது. உன் முடிவு என்ன ?

அ. இந்த வழியிலேயே போகலாம். ஆ. வீட்டுக்குத் திரும்பலாம்.

இ. மாற்றுப்பாதையில் செல்லலாம்.

V. எல்லாரிடமும் சண்டையிடும் மாணவனை என்ன செய்யலாம் ?

அ. அடித்தால் சரியாவான். ஆ. விலக்கிவைத்தால் வழிக்கு வருவான்.

இ. தனியே அழைத்துப் பேசினால் கொஞ்சமாவது கேட்பான்.

### 3. முயற்சி

புற்றுநோயுற்ற சிறுமி அறுநூற்று நாற்பத்து நான்கு காகிதக் கொக்குகள் செய்தாள்.

உரிய சொல்லைத் தேர்வு செய்க.

1. முயற்சிக்கு நோய் ______________ இல்லை. ( தடை, வயது, பகை )
2. எண்பத்தேழு வயதுவரை உ. வே. சா. தமிழுக்காகவே உழைத்தார். முயற்சிக்கு ______________ வரம்பு கிடையாது. ( தடை, வயது, பகை )
3. கவலையை மறக்க உரிய வழி எது ?

   அ. தொலைக்காட்சி பார்ப்பது

   ஆ. தூங்குவது

   இ. ஏதாவது ஒருவேலையில் ஈடுபடுவது
4. ‘முயற்சி திருவினை ஆக்கும்’ எனக் கூறியவர் ___________.

   (ஔவையார், திருவள்ளுவர், பாரதியார்)

விடைகள் : வாழ்க்கைத்திறன்கள் 3. முயற்சி

1. தடை 2. வயது 3. ஏதாவது ஒருவேலையில் ஈடுபடுவது 4. திருவள்ளுவர்

# நாலடியார்

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு. *

– சமணமுனிவர்

## பாடல்பொருள்

நாயின் கால்விரல்கள் நெருங்கி இருக்கும். அதனைப்போலச் சிலர் நம்மோடு நெருக்கமாக இருப்பார்கள். ஆனால், அவர்கள் ஈயின் கால் அளவுக்குக்கூட நமக்கு உதவ மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் நட்பால் நமக்கு என்ன பயன் ?

வாய்க்கால், தொலைவிலுள்ள நீரைக் கொண்டுவரும்; அந்நீரை வயலுக்குப் பாய்ச்சி விளைய உதவும். அவ்வாய்க்காலைப்போல உதவும் மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள், எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அவர்தம் நட்பை நாம் தேடிக்கொள்ளுதல் வேண்டும்.

## சொற்பொருள்

நாய்க்கால் – நாயின் கால்; நன்கணியர் – நன்கு + அணியர்; அணியர் – நெருங்கி இருப்பவர்; ஈக்கால் – ஈயின் கால்; என்னாம் – என்ன பயன் ?; சேய் – தொலைவு; செய் – வயல்; அனையார் – போன்றோர்.

## நூல்குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். இந்நூல், நானூறு பாடல்களைக் கொண்டது; அறக்கருத்துகளைக் கூறுவது. ‘நாலடி நானூறு’ என்னும் சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு. இந்நூல், சமணமுனிவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு.

## பதினெண்கீழ்க்கணக்கு – விளக்கம்

சங்க நூல்கள் எனப்படுபவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும். பத்துப்பாட்டில் பத்து நூல்களும், எட்டுத்தொகையில் எட்டு நூல்களுமாக மொத்தம் பதினெட்டு நூல்கள். இவற்றை, ‘மேல்கணக்கு நூல்கள்’ எனக் கூறுவர்.

சங்க நூல்களுக்குப்பின் தோன்றிய நூல்களின் தொகுப்பு, ‘பதினெண்கீழ்க்கணக்கு’ என வழங்கப்படுகிறது. இத் தொகுப்பிலும் பதினெட்டு நூல்கள் உள்ளன. பதினெண் என்றால், பதினெட்டு என்பது பொருள். இந்நூல்களைக் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் கூறுவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை அறநூல்களே.

# பாரத தேசம்

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
    ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்
    உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்.

குடைகள் செய்வோம்உழு படைகள் செய்வோம்
    கோணிகள் செய்வோம்இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
    ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்.

காவியம் செய்வோம் நல்லகாடு வளர்ப்போம்
    கலை வளர்ப்போம் கொல்லர் உலைவளர்ப்போம்
ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள் செய்வோம்
    உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்.

சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
    தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
    நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்.

– மகாகவி பாரதியார்



### சொற்பொருள்

தலை சாயுதல் – ஓய்ந்து படுத்தல்; வண்மை – கொடை; உழுபடை – வேளாண்மை செய்யப் பயன்படும் கருவிகள்; கோணி – சாக்கு; நடை – சாலையில் செல்லும் வண்டிகள்; பறப்பு – பறக்கும் வானூர்தி முதலியன; ஞாலம் – உலகம்; உவந்து செய்வோம் – விரும்பிச் செய்வோம்; தமிழ்மகள் – ஔவையார்; மேலவர் – மேலோர்; கீழவர் – கீழோர்; மற்றோர் – பிறர்க்கு உதவும் நேர்மை அற்றோர்; நெறியினின்று – அறநெறியில் நின்று.

**ஆசிரியர் குறிப்பு:** பாரதியார் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கவிஞர். ‘பாட்டுக்கொரு புலவன் பாரதி’ என்று கொண்டாடப்பட்டவர். இவர், விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார். கனவு காண்பதில் பாரதிக்கு நிகர் பாரதியே. இந்தப் பாட்டில்தான் என்னென்ன கனவுகள் ? அன்று அவை கனவுகள். இன்று கனவுகள் நனவாகி உள்ளன. ‘வெள்ளிப் பனிமலையின்மீது உலாவுவோம்’ எனத் தொடங்கும் பாடலின் ஒரு பகுதி, நம் பாடத்தில் இடம்பெற்றுள்ளது. இவர் வாழ்ந்த காலம் 11.12.1882முதல் 11.9.1921வரை.

# பறவைகள் பலவிதம்



உலகம் முழுவதும் இருந்து பல நாட்டுப் பறவைகள்வந்து தங்கி இருக்கும் இடத்துக்குப் பெயர்தான் பறவைகள் புகலிடம்.



பூநாரை
நிலத்திலும் அடர் உப்புத்தன்மை உள்ள நீரிலும் வாழும்.
கடும் வெப்பத்தை எதிர்கொள்ளும் தன்மை உடையது.

விழாக்கள் என்றதும் நமக்கெல்லாம் மகிழ்ச்சி பீறிட்டு எழும். ஏனெனில், விழாக்களின் போது, நம் வீட்டில் பட்டாசு வெடிக்கலாம். எத்தனை வகையான வண்ணங்களில் பட்டாசுகள் இப்போது வந்துவிட்டன. கம்பி மத்தாப்பில் தொடங்கி, வானவெளியில் பாய்ந்து வண்ண வண்ணப் பூக்களாய் விரியும் வெடிகள்வரை எத்தனை வியப்பூட்டும் பட்டாசுகள்.

பட்டாசு வெடிக்காத மக்கள் யாராவது உலகத்தில் இருப்பார்களா ? இருக்கவே மாட்டார்கள் என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், பட்டாசு வெடிக்காத ஓர் ஊரே இருக்கிறது. நம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிற்றூர் கூந்தன்குளம். அந்த ஊர் மக்கள் பட்டாசே வெடிப்பதில்லை. அது மட்டுமன்று. அந்த ஊரில் யார் வீட்டில் திருமணம் நடைபெற்றாலும், ஊர்க்கோவில் திருவிழா நடைபெற்றாலும், டும்டும் ஒலி எழுப்பும் மேளதாளம் இடம்பெறாது. இவ்வளவு ஏன் ? அந்த மக்கள் உரக்கப் பேசுவதுகூடக் கிடையாது.

ஏன் அப்படி ?

ஏனெனில், அந்த ஊரில் உள்ள பெரிய ஏரி, பறவைகளின் புகலிடமாகத் திகழ்கிறது.

பறவைகள் ஏன் நாடுவிட்டு நாடு பறந்து வருகின்றன ? பருவநிலை மாறும்போது பறவைகள் இடம்விட்டு இடம் பெயர்கின்றன. பருவநிலை என்றால் என்ன ? மே மாதம் பள்ளிகளுக்கு விடுமுறை விடுகிறார்கள். ஏனெனில், அப்போது வெயில் மிகக் கடுமையாக இருக்கும்.

வெயில் கொளுத்தினால், அதனைக் கோடைக்காலம் என்கிறோம். விடாமல் மழை பெய்தால், மழைக்காலம் என்கிறோம்.

மார்கழி மாதம் பனிபெய்யும். அதனைப் பனிக்காலம் என்கிறோம். வெயிலும் மழையும் பனியும் மாறிமாறி வருவதனைப் பருவநிலை மாற்றம் என்கிறோம்.

உலகத்தின் சில பகுதிகளில் பனி உறையும் காலம் உண்டு. பனி கூடினால் நாம் போர்வை அல்லது கம்பளியால் போர்த்திக் கொண்டு படுத்துக்கொள்கிறோம். ஆனால், பறவைகளுக்குப் போர்வை கிடையாதே. ஆகவே, அவை பனி கூடியதும் அந்த இடத்தைவிட்டுப் பறந்து வேறு இடத்துக்குச் செல்கின்றன.

சில இடங்களில் வெயில் கூடுதலாக இருக்கும். அப்போதும், அந்த இடத்தைவிட்டுப் பறந்து செல்ல வேண்டியதுதான். இப்படிப் பறந்து செல்வதனை, 'வலசைபோதல்' என்பார்கள்.

பருவகால மாற்றத்தைப் பறவைகள் நமக்கு உணர்த்து கின்றன. அந்தக் காலத்தில் பறவைகள் இடம் மாறுவதனை வைத்து,'இன்றைக்கு மழைவரும் போலிருக்கே' என்று, நம் முன்னோர்கள் கூறிவிடுவார்கள்.

ஒரு நாட்டில் பழம் தின்றுவிட்டுப் பறந்துபோய் இன்னொரு நாட்டில் எச்சமிடுகிறது பறவை. அந்த எச்சம் மண்ணில் விழும்போது, அப்பழத்தின் விதை அங்கு முளைத்து மரமாகி விடுகிறது. இப்படி உலகம் முழுவதும் மரம், செடி, கொடிகளைப் பரப்பும் வேலையைப் பறவைகள் செய்கின்றன.

வயல்வெளிகளில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், வண்டுகளைப் பறவைகள் தின்றுவிடுகின்றன. அதன்மூலம் பறவைகள் உழவர்களுக்கு உதவுகின்றன. இப்படிப் பல உதவிகள் செய்யும் பறவையானது, மனிதர்களின் நல்ல நண்பன் அல்லவா ?

அப்படிப்பட்ட நண்பனைப்பற்றித் தெரிந்துகொள்வோம். நமக்குத் தெரிந்த பறவைகள் எத்தனை ? காகம், குருவி, கொக்கு, மயில் போலச் சில பெயர்களே நமக்குத் தெரிகின்றன.

ஆனால், நம் நாட்டில் மட்டும் ஏறத்தாழ ஈராயிரத்து நானூறுவகைப் பறவைகள் வாழ்கின்றன. சில பறவைகளின் பெயர்களை நாம் தெரிந்துகொள்வோம் !

பறவைகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

**சமவெளி மரங்களில் வாழும் சில பறவைகள் :**

மஞ்சள்சிட்டு,
செங்காகம்,
சுடலைக்குயில்,
பனங்காடை,
தூக்கணாங்குருவி.

**நீர்நிலைகளில் வாழும் சில பறவைகள்:**

கொக்கு,
தாழைக்கோழி,
பவளக்காலி,
ஆற்று உள்ளான்,
முக்குளிப்பான், நாரை,
அரிவாள் மூக்கன்,
கரண்டிவாயன்,
ஊசிவால் வாத்து.

**மலைகளில் வாழும் சில பறவைகள் :**

இருவாச்சி,
செந்தலைப் பூங்குருவி,
மின்சிட்டு,
கருஞ்சின்னான்,
நீலகிரி நெட்டைக்காலி,
பொன்முதுகு,
மரங்கொத்தி,
சின்னக்குறுவான்,
கொண்டை உழவாரன்,
இராசாளிப் பருந்து,
பூமன் ஆந்தை.

1. தேனைக் குடித்து வாழும் பறவைகள்
2. பழத்தை உண்டு வாழும் பறவைகள்
3. பூச்சியைத் தின்று வாழும் பறவைகள்
4. வேட்டையாடி உண்ணும் பறவைகள்
5. இறந்த உடல்களை உண்டு வாழும் பறவைகள்.

பறவைகளுள் சில, அழகாகக் கூடுகட்டி வாழ்பவை. நம் ஊர்களில் தூக்கணாங்குருவியின் கூடுகளைப் பார்க்கலாம். அடடா, எத்தனை அழகுடனும் பாதுகாப்பாகவும் தூக்கணாங்குருவி கூடு கட்டுகிறது!

இப்படிப்பட்ட நம் பறவை நண்பர்களைப்பற்றி இன்னும் நிறைய தெரிந்து கொள்ளல் வேண்டும். தெரிந்துகொண்டால் மட்டும் போதுமா? அவை நிம்மதியாக வாழ உதவியும் செய்தல் வேண்டும். பறவைகளுக்கு நாம் எப்படியெல்லாம் உதவலாம்?

கூந்தன்குளம் சிற்றூர் மக்கள் பட்டாசு வெடிக்காமலும் மேளம் அடிக்காமலும் இருப்பது பறவைகள் அச்சமற்று இருக்கவே. அதுபோல, பல உதவிகளை அவற்றுக்கு நாமும் செய்யலாம்.

கூந்தன்குளம் மட்டுமல்லாமல், எங்கெல்லாம் பறவைகள் புகலிடம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் நாம் பட்டாசு வெடிக்கக் கூடாது.

உங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள புகலிடத்துக்கு ஒருமுறையாவது சென்று வாருங்கள். வெளிநாடுகளிலிருந்து அங்கு வரும் பறவைகளைக் கண்டு மகிழுங்கள்.

நாள்தோறும் விடியற்காலையிலும் மாலையிலும் பறவைகள் எழுப்பும் ஒலிகளைக் கூர்ந்து கேட்போம். பறவைகள்போல ஒலிஎழுப்பி அவற்றோடு பேசுவோம்.

பறவைகளின் வாழ்விடங்களான மரங்களைப் பாதுகாப்பதே அவற்றுக்கு நாம் செய்யும் பேருதவியாக இருக்கும்.

**தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் புகலிடங்கள்:**

1. வேடந்தாங்கல்
2. கரிக்கிரி (காஞ்சிபுரம் மாவட்டம்)
3. கஞ்சிரங்குளம்
4. சித்திரங்குடி
5. மேல்செல்வனூர் (இராமநாதபுரம் மாவட்டம்)
6. பழவேற்காடு (திருவள்ளூர் மாவட்டம்)
7. உதயமார்த்தாண்டம் (திருவாரூர் மாவட்டம்)
8. வடுவூர் (தஞ்சாவூர் மாவட்டம்)
9. கரைவெட்டி (பெரம்பலூர் மாவட்டம்)
10. வேட்டங்குடி (சிவகங்கை மாவட்டம்)
11. வெள்ளோடு (ஈரோடு மாவட்டம்)
12. கூந்தன்குளம் (திருநெல்வேலி மாவட்டம்)
13. கோடியக்கரை (நாகப்பட்டினம் மாவட்டம்)



# பாம்புகள்



பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தாள் அமுதா. புத்தகப் பையை மேசையின்மீது வைத்தாள். வீட்டில், செழியன் ஏதோ எழுதிக்கொண்டு இருந்தான். அவனருகே சென்றாள்.

அமுதா: அண்ணா... எனக்கோர் உதவி செய்வாயா ?

(எழுதுவதனை நிறுத்திவிட்டு, 'என்ன' என்பதுபோல் நிமிர்ந்து பார்த்தான் செழியன்.)

அமுதா: அடுத்தவாரம் எங்கள் பள்ளியில் சென்னைக் கிண்டியிலுள்ள பாம்புப் பண்ணைக்கு அழைத்துச் செல்கிறார்கள் அண்ணா... பாம்பைப் பற்றி உனக்குத் தெரிந்ததனைச் சொல்லேன்...!

செழியன்: 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்று சொல்வார்கள்.

அமுதா: அதுதான் தெரியுமே. வேறு ஏதாவது...

செழியன்: ம்ம்... பாம்பு பற்றித்தானே! 'பாம்புகள் ஊர்வன வகையைச் சார்ந்தவை. பெரும்பாலான பாம்புகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பன. சில பாம்புகள் மட்டும் குட்டிபோடும்.

அமுதா: சுவையான வேறு செய்தி இருந்தால் சொல்!

செழியன்: இந்த நாளிதழில் இருக்கிறது படிக்கிறேன், கேள்... உலகம் முழுக்க ஈராயிரத்து எழுநூற்று ஐம்பது வகைப்பாம்புகள் இருக்கின்றனவாம். இந்தியாவில் மட்டும் இருநூற்று நாற்பத்து நான்கு வகைப் பாம்புகள் இருக்கின்றனவாம்.

அமுதா: அப்படியா!

செழியன்: மேலும், பாம்பு வகைகளில் ஐம்பத்திரண்டு வகைப்பாம்புகளுக்கு மட்டும்தான் நச்சுத்தன்மை உண்டாம்.

(அப்போது, வீட்டிற்குள் வந்த அம்மாவின் முகத்தில் அலுவலகம் சென்று வந்த களைப்பு.)


அம்மா: என்ன, அண்ணனும் தங்கையும் கடுமையாகக் கலந்துரையாடிக் கொண்டு இருக்கிறீர்கள் ?

பாம்பினம், உலகில் மனித இனம் தோன்றுவதற்குப் பத்துக்கோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது.

இந்தியாவில் உள்ள இராஜநாகம்தான் உலகிலேயே நஞ்சுமிக்க மிக நீளமான பாம்பு. 15 அடி நீளமுடையது. கூடுகட்டி வாழும் ஒரே வகைப் பாம்பு இது. இராஜநாகம், மற்றப் பாம்புகளையும்கூட உணவாக்கிக் கொள்ளும்.



பாம்புகளின் பற்கள் உள்நோக்கி வளைந்திருக்கும். இரையைப் பிடித்தால் தப்பவிடாது. பாம்புகள் இரையை மென்று தின்பதில்லை. அப்படியே விழுங்கிவிடுகின்றன.



செழியன்: பாம்புகளைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம்!

அம்மா: ஓ... அப்படியா! முதலில் பாம்புபற்றி நான் ஒரு வினா கேட்கிறேன். பாம்பு, பால் குடிக்குமா? குடிக்காதா?

அமுதா: குடிக்காது.

செழியன்: பாம்பு விழுங்குகிற எலி, தவளைகள் உடம்பில் உள்ள நீர்ச்சத்தே அதற்குப் போதும்.

அம்மா: உனக்கு யார் சொன்னது, செழியா?

செழியன்: எங்கள் ஆசிரியர் சொன்னார்.

அம்மா: சரிதான். அப்புறம், நல்ல பாம்பின் தலையில் மாணிக்கக் கற்கள் வைத்திருக்கிறதென்று சொல்வது வெறுங்கட்டுக்கதை. பாம்பு, தன்னுடைய எச்சிலில் நஞ்சு வைத்திருப்பது எதற்குத் தெரியுமா?

செழியன்: இதுகூடத் தெரியாதா? அடிக்க வருபவர்களைக் கடிக்கத்தான்.

அம்மா: அப்படியில்லை. பாம்பு, தான் பிடிக்கும் இரையைக் கொல்லவும், செரிப்பதற்காகவும்தான் தன்னுடைய எச்சிலில் நஞ்சு வைத்திருக்கிறது.

அமுதா: கேட்கவே வியப்பாக இருக்கிறதே! பாம்புக்குக் காது இருக்கிறதா?

அம்மா: பாம்புக்குக் காது அவ்வளவாக வளர்ச்சி அடையவில்லை. காற்றில் வரும் ஓசைகளைப் பாம்பினால் கேட்க இயலாது. தரையில் ஏற்படும் அதிர்வுகளை உணர்ந்து, அதன்மூலம் பாம்பு முன்னெச்சரிக்கையாக இருக்கிறது.

செழியன்: அப்புறம் எப்படி, பாம்பாட்டியின் மகுடி ஓசையைக் கேட்டுப் பாம்பு ஆடுகிறது?

அம்மா: பாம்பு, மகுடி இசைக்கு ஆடவில்லை. மகுடி வாசிக்கிறவரைக் கண்ணால் பார்க்கிறது. மகுடி அசைவதனைப் போலப் பாம்பும் அதனைப் பார்த்து அசைந்தாடுகிறது. அவ்வளவுதான்.

அமுதா: ‘பாம்பு, உழவர்களின் நண்பன்’ என ஒரு புத்தகத்தில் படித்தேன். பாம்பு, எப்படி நண்பனாக முடியும்?

அம்மா: பாம்புகளால் உழவர்களுக்குப் பெரிய நன்மைகள் இருக்கின்றன. வயலில் உள்ள பயிர்களை



ஒரு பாம்பைக் கொன்றால், அதன் இணைப் பாம்பு பழிவாங்கும் என்று சொல்வது உண்டு. இஃது உண்மையன்று. கொல்லப்பட்ட பாம்பின் உடம்பில் இருந்து வெளியேறும் ஒருவகை வாசனைப் பொருள், மற்றப் பாம்புகளையும் அந்த இடம் நோக்கி வரவழைக்கிறது. பழிவாங்க, பாம்புகள் வருவது இல்லை.

பாம்பு, தன் நாக்கை அடிக்கடி வெளியே நீட்டும். சுற்றுப்புறத்தின் வாசனையை அறிந்துகொள்ளவே அவ்வாறு செய்கிறது.

நல்லபாம்பின் நஞ்சு, கோப்ராக்சின் (Cobrozin) என்னும் வலிநீக்கி மருந்து செய்யப் பயன்படுகிறது.

தோலுக்காகப் பாம்புகள் கொல்லப்படுவதனைத் தடுக்க,இந்திய அரசு,வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972இன்படி, சட்டம் நிறைவேற்றி உள்ளது.

எலிகள் அழிக்கின்றன. அவற்றை அழிப்பதில் பாம்புகளுக்குப் பெரும் பங்கு இருக்கிறது.

(அப்போது செல்பேசி மணி ஒலிக்கிறது. அம்மா, அதனைக் கைப்பையிலிருந்து எடுத்துப் பேசினார்.)

அம்மா : சொல்லுங்க... ம்ம்... அப்படியா! அச்சச்சோ... நான் இப்பத்தான் வீட்டுக்கு வந்தேன், சரிங்க.

செழியன்: யாரம்மா... ?

அம்மா: அப்பாதான். உங்கள் மாமாவின் பையன் செல்வத்தைப் பாம்பு கடித்து விட்டதாம். மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றுள்ளார்களாம். அப்பாவும் செல்வத்தைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொன்னார்.

அமுதா: இப்பொழுதுதான் அண்ணன், நச்சுப்பாம்புகள் குறைவாக இருப்பதாகச் சொன்னான். அதற்குள் ஒரு பாம்புக்கடி செய்தியா ?

அம்மா: அப்படி இல்லை. பாம்பு, யாரையும் தேடிப்போய்க் கடிப்பது இல்லை. மனிதர்களால் தனக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டால்தான் கடிக்கும். பாம்பு நஞ்சினால் இறந்தவர்களைவிட, அச்சத்திலும் அதிர்ச்சியிலும்தான் பெரும்பாலானோர் இறந்துவிடுகிறார்கள்.

செழியன்: பாம்புக்கடிக்கு ஆளானவர்களுக்கு முதலுதவியாக என்ன செய்தல் வேண்டும் ?

அம்மா: பாம்பு கடித்தவுடன் கடிபட்ட இடத்தை அசையாமல் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். கடிபட்ட இடத்திற்குமேல் உடனடியாகக் கட்டுப்போட்டுப் பக்கத்தில் உள்ள மருத்துவமனைக்கு விரைந்து அழைத்துச் செல்லுதல் வேண்டும். நச்சுமுறிவு மருந்து கொடுத்தல் வேண்டும். இதுவே முறையான முதலுதவி.

அமுதா: இதனை எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது.

அம்மா: முதலில் பாம்பைக் கண்டாலே அடித்துக் கொல்லவேண்டும் என நினைக்கவே கூடாது. பாம்பினால் எந்தத் தொல்லையும் நமக்குக் கிடையாது. அதுவும் ஓர் உயிர்தான் என்று புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

செழியன்: அம்மா மிகவும் களைத்துக் காணப்படுகிறார்கள். நானும் தோட்டத்திற்குச் செல்கிறேன். அடுத்தவாரம் நீ சுற்றுலாவுக்குச் சென்று வா. பாம்பைப் பற்றி இன்னும் நிறைய தெரிந்து கொள்வாய்.

அமுதா: பாம்பு அடிக்கடி நாக்கை நீட்டுகிறதே, ஏன் ? (அம்மா, 'தெரியாது' என்பதாகத் தலையாட்டியபடி எழுந்து சென்றார்.)

(செழியன் இருக்கையைவிட்டு எழுந்தான். கையை வளைத்து, 'புஸ்... புஸ்...' என்று பாம்புபோல் ஒலியெழுப்பிக்கொண்டே தோட்டத்துப் பக்கம் ஓடினான்.)

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

உயிரெழுத்து 12

மெய்யெழுத்து 18

உயிர்மெய் எழுத்து 216

ஆய்த எழுத்து 1

மொத்தம் 247

க்+ஈ = கீ

க்+உ = கு

## இலக்கணமும் மொழித்திறனும்

### அ. மொழி அறிவோம்

தமிழில் உள்ள முதல் எழுத்துகள் மொத்தம் முப்பது. உயிர் எழுத்துகள் பன்னிரண்டு; மெய் எழுத்துகள் பதினெட்டு; ஆக மொத்தம் முப்பது.

பின்வரும் சொல்லைப் பாருங்கள். (எ.கா.) அண்ணா.

அ – உயிரெழுத்து

ண் – மெய்யெழுத்து

ணா – உயிரும் மெய்யும் சேர்ந்து வந்த உயிர்மெய் எழுத்து.

உயிரும் மெய்யும் சேர்ந்து 216 (இருநூற்றுப் பதினாறு) உயிர்மெய் எழுத்துகளை உருவாக்குகின்றன. ஆனால், அவற்றைப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவது இல்லை.

எடுத்துக்காட்டாக, கி, சி, பி, டி, தி, மி – போன்ற உயிர்மெய் எழுத்துகள் அன்றாடப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுகின்றன.

ஙி, ஞி போன்றவை அவ்வாறு பயன்படுவது இல்லை.

ஙௌ, ஞௌ, ணௌ போன்ற எழுத்துகளை எப்போதாவது வாசித்து இருக்கிறீர்களா ?

அடிப்படையான தமிழ் எழுத்துகள் முப்பது மட்டுமே.

### ஆ. குறில் நெடில் உண்டாவது எப்படி ?

அ, இ, உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய்க்குறில் எழுத்துகள் உண்டாகின்றன.

கடல், கிளி, குரங்கு, சென்னை, சொல்

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஏழும் நெடில் எழுத்துகள். இவை மெய் எழுத்துகளோடு சேரும்போது, உயிர்மெய் நெடில் எழுத்துகள் உண்டாகின்றன.

காளை, கீற்று, கூடல், கேள்வி, கை, கோவில், கௌதாரி

குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுதுக.

பல் தேய்த்தேன்.

பால் குடித்தேன்.

பல், பால் இடம் மாறினால் குழப்பம் வரும்.

பயிற்சி: கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு தொடர்களை அமைக்கவும்.

1. கல் ______________________
2. கால் ______________________
3. குடை ______________________
4. கூடை ______________________

## இ. சேர்த்தும் பிரித்தும் எழுதுவோம்.

பயிற்சி : சேர்த்து எழுதுக.

முதல் சொல்லின் கடைசி எழுத்து மெய்.

சேரும் சொல்லின் முதல் எழுத்து உயிர்.

சேரும்போது நடக்கும் மாற்றம் என்ன ?

மணம் + உண்டு → __________

சிலர் + அழுவார் → __________

புகழ் + இழந்தேன் → __________

மாற்றம் : உயிர் எழுத்தானது, மெய் எழுத்தில் இணைந்தது.

பிரித்து எழுதுக.

இரும்பாணிகள் → __________

கொல்லருலை → __________

வேறில்லை → __________

மாற்றம் : உயிர் எழுத்துத் தனியே பிரிந்தது.

## ஈ. பிழையின்றித் தமிழ் எழுதுவோம்.

பின்வரும் சொற்களைப் பிழையின்றி எழுதுக.

அ. பன்னெண்டு – ______________________

ஆ. நார்பது – ______________________

இ. அம்பது – ______________________

தன்பயிற்சி : எண்களை எழுத்தில் எழுதிப் பழகுங்கள்.

அ. 13 ______________________

ஆ. 33 ______________________

இ. 98 ______________________

ஈ. 108 ______________________

உ. நல்ல தமிழ்ச்சொற்களை அறிந்துகொள்வோம்.

வாய்க்கால், செய் ஆகியவை வயல் சார்ந்த அருமையான சொற்கள்.

நினைவில் வைப்போம்.

வண்மை, ஞாலம் முதலிய சொற்களை நாம் பழக்கத்திற்குக் கொண்டு வருவோம்.

இப்படிப் பேசுவோம்; எழுதுவோம்.

அ. ஞாலம் பெரியது.

ஆ. அவர் வண்மை உள்ளவர்.

(நினைவில் வையுங்கள்; வண்மை என்பதன் பொருள் கொடைத் தன்மை. வன்மை என்பதன் பொருள் கொடுமை.)

ஊ. எழுத்துகளும் உறவும்

1. தன் எழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துகள்

(உடனிலை மெய்ம்மயக்கம்)

எழுத்துகளுக்குள் நட்பு உண்டு என்பதனை அறிந்தோம் அல்லவா ?

தமிழில் சில எழுத்துகள் தன் எழுத்தோடு மட்டும் சேர்ந்து வரும். (எ.கா.) பக்கம், அச்சம், மொத்தம், அப்பம்.

க், ச், த், ப் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் மட்டும் சேரும் எழுத்துகள். நீங்களும் இவ்வாறு சில சொற்களைச் சேர்த்துப் பாருங்கள்.

2. தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துகளுடன் சேரும் எழுத்துகள்

(வேற்றுநிலை மெய்ம்மயக்கம்)

(எ.கா.) சார்பு, வாழ்க்கை.

ர், ழ் ஆகிய மெய்கள் தன் எழுத்துகளுடன் சேர்ந்து வாரா.

பிற எழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும்.

3. தன்எழுத்து, பிற எழுத்து இரண்டுடனும் சேர்ந்து வரும் எழுத்துகளும் உள்ளன.

(எ.கா.) ற் – குற்றம், மேற்கு; ன் – அன்னம், அன்பு.

இப்படி, வேறு சில எழுத்துகளை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா ? முயற்சி செய்யுங்கள்.

## வகுப்பறைத்திறன்கள்

### 1. பேசும் திறன்

அ. ஏதேனும் ஒருபொருள் பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

- ☐ பிடித்தமான பறவை
- ☐ பிடித்தமான விலங்கு
- ☐ மலைப்பாம்பு
- ☐ காடு
- ☐ கடல்

ஆ. வினா எழுப்புக.

பின்வரும் தலைப்புகளை மையமாகக் கொண்டு வினாக்கள் எழுப்புக.

- ☐ பாம்பு
- ☐ மேகம்
- ☐ சூரியன்
- ☐ குருவி

(எ.கா.) பாம்பு

- ☐ பாம்பும் கீரியும் எதிரிகளா ?
- ☐ பாம்பைக் கண்டால் ஏன் அஞ்சுகிறோம் ?

### 2. எழுதும் திறன்

**I. ஓரிரு சொற்களில் விடை எழுதுக.**

அ. நாலடியார் கருத்துப்படி நன்மை செய்வோர் எதனைப் போன்றவர் ?

ஆ. தமிழ்நாட்டில் பறவைகள் புகலிடங்கள் எத்தனை உள்ளன ?

இ. மஞ்சள் சிட்டு எப்பகுதியில் வாழும் ?

ஈ. கூடுகட்டி வாழும் பாம்பு எது ?

**II. ஓரிரு வரிகளில் விடை தருக.**

அ. பாரதியார் கருத்துப்படி மேலோர் யார் ?

ஆ. மனிதர்களின் நல்ல நண்பன் எது ? ஏன் ?

இ. 'வலசை போதல்' என்றால் என்ன ?

ஈ. பாம்பு அடிக்கடி நாக்கை நீட்டுவது ஏன் ?

உ. பாம்புகளால் உழவர் பெறும் முதன்மையான நன்மை எது ?

**III. நான்கு வரிகளுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.**

அ. நாலடியார் சொல்லும் நட்பு

ஆ. கூந்தன்குளம் பறவைகள் புகலிடம்

இ. பாரதியின் கனவு

### 3. குழுக் கல்வி

மாணவர்கள் ஐந்துமுதல் ஏழுபேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்துகொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் ஒருபொருளைத் தேர்வு செய்தல் வேண்டும். குழுவில் பேசிய கருத்துகளைப் பகுத்தும் தொகுத்தும் வகுப்பில் கூறுதல் வேண்டும்.

1. நண்பர்கள் பலவிதம்
2. மனிதனின் தன்னலமும் சுற்றுச்சூழல் அழிவும்
3. பாம்பு நமக்குப் பகையா ?
4. நல்ல தமிழ்ச்சொற்களைக் கண்டுபிடித்துப் பேசுவோம்

### 4. படைப்புத் திறன்

பறவைகளின் பல நிலைகளை ஓவியமாக வரைய முயற்சி செய்யுங்கள்.

(எ.கா.) மரத்தில் பறவை, கூண்டுப் பறவை, தரையில் இரை கொத்தும் பறவை, பறக்கும் பறவை, முட்டைகளை அடைகாக்கும் பறவை. பாம்பும் மனிதனும் பேசிக்கொள்வதுபோல் ஒரு காட்சியை உருவாக்குங்கள். கவிதை எழுதுங்கள்.

மண்ணில் உங்களுக்கு வீடு

மரத்தில் எங்களுக்குக் கூடு

இது பறவை பாடும் பாட்டு. இதேபோல் பின்வரும் சொற்களை வரிகளின் இறுதியாக வைத்து இரண்டு வரியில் கவிதை எழுதுங்கள்.

1. ஊர், தேர் 2. அரும்பு, கரும்பு.

## வாழ்க்கைத்திறன்கள்

### 1. உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்

இலக்கியா, தன் பெற்றோருடன் உயிரியல் பூங்காவிற்குச் சென்றாள். தன்னருகில் துள்ளிவந்த மானைச் சிறுகல்லால் அடித்தாள்; மான் மருண்டு ஓடியது. விலங்குகளைப் பார்த்துக்கொண்டே குரங்குகள் இருக்குமிடத்திற்குச் சென்றவள், கீழே இருந்த குச்சியை எடுத்துக் குரங்கின்மீது வீசினாள்.

வேர்க்கடலையைத் தின்றுவிட்டுப் பறவைகள் பகுதியில் இருந்த மயில் கூண்டுக்குக்குள் தோலை வீசினாள்.

பாம்புகளைப் பார்க்கச் சென்ற இலக்கியா, பாம்புகள் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டிகளைத் தட்டிக்கொண்டே வந்தாள். திடீரென ஒரு பாம்பு படமெடுத்துச் சீறியது. அதனைக் கண்டு பயந்து அலறியபடி தாயைக் கட்டியணைத்தாள்.

பயிற்சி : கீழ்க்காணும் வினாக்களைப் படித்து விடையளிக்கவும்.

1. இலக்கியா, மானைக் கல்லால் அடித்தது முறையா ?
2. குரங்குகளைத் துன்புறுத்தலாமா ?
3. பூங்காவில் பறவைகள், விலங்குகளுக்குத் தின்பண்டங்களைத் தரலாமா ?
4. இலக்கியா, பாம்புகள் இருந்த பெட்டியைத் தட்டியது முறையா ?
5. பறவைகள், விலங்குகளிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ளுதல் வேண்டும் ?

## 2. சூழ்நிலையியல் சிந்தனை

பின்வரும் நிகழ்வுகளுக்கான காரணத்தைக் கண்டறிந்து எழுதுக.

அ. மனிதர்கள் யானையை வேட்டையாடக் காரணம் ____________

(வீரம், தோல், தந்தம்)

ஆ. உலகம் வெப்பமடையக் காரணம் ______________________

(வண்டிகளின் புகை, எரிமலைக்குழம்பு, வெயில்)

இ. ஆறுகள் மாசு அடையக் காரணம் ________________________________

(தொழிற்சாலைக் கழிவு, மழையின்மை, மணல் அள்ளுதல்)

ஈ. மழை குறையக் காரணம் ______________________

(காடுகள் அழிப்பு, மண் அரிப்பு, மரம் வளர்த்தல்)

### விடைகள்

இலக்கணமும் மொழித்திறனும்

ஈ. எண்களை எழுத்தால் எழுதுக.

அ. 12 – பன்னிரண்டு ஆ. 40 – நாற்பது இ. 50 – ஐம்பது

தன்பயிற்சி

அ. பதின்மூன்று ஆ. முப்பத்து மூன்று

இ. தொண்ணூற்றெட்டு ஈ. நூற்றெட்டு

வாழ்க்கைத்திறன்கள்

2. சூழ்நிலையியல் சிந்தனை

அ. தந்தம் ஆ. வண்டிகளின் புகை

இ. தொழிற்சாலைக் கழிவு ஈ. காடுகள் அழிப்பு

# நான்மணிக்கடிகை

மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதின் புகழ்சால் உணர்வு.

– விளம்பிநாகனார்

## பாடல்பொருள்

குடும்பத்தின் விளக்குப் பெண்ணாவாள். அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள், அவள் பெற்ற பண்பில் சிறந்த பிள்ளைகள். மனத்திற்கினிய அன்புமிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி. அக்கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால், அவர்களிடம் உள்ள நல்லெண்ணங்களே.

## சொல்பொருள்

| | | |
|---|---|---|
| மடவாள் | – | பெண் |
| தகைசால் | – | பண்பில் சிறந்த |
| மனக்கினிய | – | மனத்துக்கு இனிய |
| காதல் புதல்வர் | – | அன்பு மக்கள் |
| ஓதின் | – | எதுவென்று சொல்லும்போது |
| புகழ்சால் | – | புகழைத் தரும் |
| உணர்வு | – | நல்லெண்ணம் |

ஆசிரியர் குறிப்பு : நூலாசிரியரின் பெயர் விளம்பிநாகனார். விளம்பி என்பது ஊர்ப்பெயர்; நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்.

நூல் குறிப்பு : நான்மணிக்கடிகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கடிகை என்றால் அணிகலன் என்பது பொருள். நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்பது இதன்பொருள். ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக் கருத்துகளைக் கூறுகின்றது.

# ஆராரோ ஆரிரரோ

ஆராரோ ஆரிரரோ ஆராரோ
ஆரிரரோ கண்ணே கண்மணியே

ஆரடிச்சு நீ அழுதே!
அடிச்சாரைச் சொல்லி அழு
ஆராரோ ஆரிரரோ...



இந்தப் பாடலைக் கேட்காதவர்கள் யாரும் இருக்க முடியுமா? இதனைத் தாலாட்டுப் பாடல் என்கிறோம். குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாய் பாடும் பாட்டு இது.

பள்ளிக்கூடமே போகாத, எழுதப் படிக்கத் தெரியாத தாய்மார்களுக்கும் இந்தத் தாலாட்டுப் பாடல் தெரிகிறதே! அஃது எப்படி? அது மட்டுமின்றி, இந்தப் பாட்டை யாரும் எழுதிப் புத்தகமாகப் போட்டதும் இல்லை. பிறகு எப்படி எல்லாத் தாய்மார்களுக்கும் இப்பாடல் மனப்பாடமாகத் தெரிகிறது?

ஒருவர் பாடிக் கொண்டிருக்கும்போது கேட்டுக் கொண்டிருக்கும் இன்னொருவர் அப்படியே மனத்தில் வாங்கித் தானும் பாடிப்பாடிப் பழகிவிடுகிறார். இப்படித் தாளில் எழுதாத பாடல்தான், 'நாட்டுப்புறப் பாடல்' எனப்படுகிறது. எழுத்து வழியாக வராமல் பாடிப்பாடி வாய்வழியாகப் பரவுகிற பாட்டு நாட்டுப்புறப்பாட்டு. இதேபோல் எழுதப்படாத, எல்லாருக்கும் தெரிந்த கதைகளும் உண்டு. இவற்றை எல்லாம் "வாய்மொழி இலக்கியம்" எனக் கூறுவார்கள்.

முன்னர், இப்பாடல்களைக் கிராமியப் பாடல்கள் என்று கூறி வந்தார்கள். ஆனால், வாய்வழியாகப் பரவும் பாடல் சிற்றூர்களில் மட்டும்தான் உண்டா? நகரங்களிலும் தாய்மார்கள் பாடுவது இல்லையா? சென்னை போன்ற பெருநகரங்களில் மக்கள்பாடும் 'கானாப் பாடல்' கூட நாட்டுப்புறப் பாடல்தான். கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் பாடும் பாடலும் நாட்டுப்புறப்பாடல்தான்.

கொழுக்கட்டை கொழுக்கட்டை ஏன் வேகல?
அடுப்பு எரியல நான் வேகல.

அடுப்பே அடுப்பே ஏன் எரியல?
மழை பெய்தது நான் எரியல.

மழையே மழையே ஏன் பெய்தே?
புல்லு வளர நான் பெய்தேன்.

புல்லே புல்லே ஏன் வளர்ந்தே ?
மாடு தின்ன நான் வளர்ந்தேன்.

மாடே மாடே ஏன் தின்றாய் ?
மாட்டுக்காரன் அவிழ்த்துவிட்டான் நான் தின்றேன்.

மாட்டுக்காரா மாட்டுக்காரா ஏன் அவிழ்த்துவிட்டே ?
குழந்தை அழுதது நான் அவிழ்த்து விட்டேன்.

குழந்தை குழந்தை ஏன் அழுதே ?
எறும்பு கடிச்சது நான் அழுதேன்.

எறும்பே எறும்பே ஏன் கடிச்சே ?
என் புற்றிலே கால்வெச்சா, நான் சும்மா இருப்பேனா ?

என்று குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பெருங்குரலெடுத்துப் பாடும் விளையாட்டுப் பாடலும் நாட்டுப்புறப் பாடல்தான்.

இந்தப் பாடல்களை யார் எழுதினார்கள் என்று யாராலும் கூறமுடியாது. ஏனெனில், இப்பாடல்களை யாரும் எழுதவில்லை. மக்கள் தாமாகவே பாடவேண்டும் என்று தோன்றும்போது இப்பாடல்கள் பாடப்படுகின்றன.

குழந்தையைக் கொஞ்சவேண்டும் என்று தோன்றினால் தாலாட்டுப் பாட்டுத் தானாக வந்துவிடும். இறந்தவர்களைப் பார்த்ததும் அழுகை வந்துவிடும். அத்துடன், ஒரு துயரப் பாடலாக ஒப்பாரியும் வந்துவிடும். அப்படிப் பாடுகிறவர் ஏற்கெனவே தான் எங்கோ கேட்ட பாடல் வரிகளோடு தானும் சில வரிகளைச் சேர்த்துப் பாடிவிடுவார். இப்படியே நாட்டுப்புறப் பாடல் வளர்ந்து கொண்டே போகும்.

ஒருவர் பாடியதுபோல, அப்படியே இன்னொருவர் பாடுவது இல்லை. இது நாட்டுப்புறப் பாடல்களின் தனிச்சிறப்பு. நாட்டுப்புறப் பாடல்களைக் கீழ்க்காணும் வகைகளாகப் பிரிக்கலாம்.

தாலாட்டுப் பாடல்கள்
விளையாட்டுப் பாடல்கள்
தொழில் பாடல்கள்
சடங்குப் பாடல்கள்
கொண்டாட்டப் பாடல்கள்
வழிபாட்டுப் பாடல்கள்
ஒப்பாரிப் பாடல்கள்

பிறந்த குழந்தைக்குப் பாடுவது தாலாட்டுப் பாடல். கொஞ்சம் வளர்ந்த பிள்ளைகள் பாடுவது விளையாட்டுப் பாடல். களைப்பு நீங்க, வேலை செய்வோர் பாடுவது தொழில் பாடல். திருமணம் மற்றும் பிற நிகழ்வுகளில் பாடுவது சடங்குப் பாடல், கொண்டாட்டப் பாடல். சாமி கும்பிடுவோர் பாடுவது வழிபாட்டுப் பாடல். இறந்தோருக்குப் பாடுவது ஒப்பாரிப் பாடல்.

தமிழர் வாழ்வின் ஒவ்வொரு நிலைக்கும் இப்படிப் பாடல் உண்டு. எடுத்துக்காட்டுகளாகச் சில பாடல்களைப் பார்க்கலாம்.

கொழும்புல கூடாரம் – உங்க மாமா
கொத்தமல்லி வியாபாரம் (ஆராரோ ஆரிரரோ)

கொத்தமல்லி வித்தெடுத்து – உங்க மாமன்
கொலுசு பண்ணி வாராராம் (ஆராரோ ஆரிரரோ)

மதுரையிலே கூடாரம் – உங்க மாமா
மல்லியப்பூ வியாபாரம் (ஆராரோ ஆரிரரோ)

மல்லியப்பூ பூவெடுத்து – உங்க மாமா
மாலை பண்ணி வாராராம் – (ஆராரோ ஆரிரரோ)

இவ்வாறு தாலாட்டுகளில் தாய்மார்கள், தங்கள் அண்ணன் தம்பிகளின் பெருமைகளைப் பாடுவது வழக்கம்.

சாஞ்சாடம்மா சாஞ்சாடு
சாயக்கிளியே சாஞ்சாடு

குத்துவிளக்கே சாஞ்சாடு
கோவில் புறாவே சாஞ்சாடு

மானே மயிலே சாஞ்சாடு
மாடப்புறாவே சாஞ்சாடு...

இது குழந்தையாக இருக்கும்போது சாய்ந்தாடச் சொல்லும் விளையாட்டுப் பாடல்.

வெள்ளிப்பிடி அருவா
ஏ! விடலைப் பிள்ளை கை அருவா
சொல்லி யடிச்சருவா – இப்போ
சுழட்டுதடி நெல்கதிரெ...

என்று அறுவடை செய்யப் போகும் பெண்கள் பாடிக்கொண்டு செல்வார்கள். துணி வெளுக்கும் தொழில் செய்வோர்:

சோ... சோ...
அழுக்குத் துணியே

சோ... சோ...
அடிச்சுத் துவைச்சி...

சோ... சோ...
இறுக்கிப் பிழிஞ்சி

சோ... சோ...
காயப்போடு
சோ... சோ...

என்று வேலையின்போது களைப்புத் தெரியாமல் இருக்க இவ்வாறு பாடுகிறார்கள். ஒவ்வொரு தொழில் செய்வோருக்கும் தனித்தனியே பாட்டு உண்டு.



நாட்டுப்புறப் பாடல்களில் விழிப்புணர்வுப் பாடல்களும் உள்ளன.

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்கா
காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளக்காரன்

என்ற பாடல், நமது நாட்டு விடுதலைப் போராட்டக் காலத்தில் உருவான நாட்டுப்பாடல்.

உங்கள் ஊரில், உங்கள் தெருவில், உங்கள் வீட்டில் இப்படிப் பாடல்கள் தெரிந்த பாட்டிகள், தாத்தாக்கள், அத்தைகள், சித்திகள், பெரியம்மாக்கள் யாராவது இருப்பார்கள். அவர்களிடம் கேட்டுப் பாடல்களை எழுதிக் கொண்டு வந்து, அவர்கள் பாடியதுபோலவே வகுப்பில் பாடிக்காட்டுங்கள்.

நன்றாகப் பாடுபவரை வகுப்பில் உள்ள எல்லாரும் சேர்ந்து பாராட்டுங்கள்.

செயல்பாடு

"ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரே பூ பூத்துச்சாம்.

ரெண்டு குடம் தண்ணி ஊத்தி ரெண்டே பூ பூத்துச்சாம்".

இது மாதிரி உங்கள் ஊரில் உள்ள விளையாட்டுப் பாடல்களைக் கேட்டு எழுதிவந்து, வகுப்பில் விளையாடலாம்.

# வீரச்சிறுவன்

மக்கள் நெருக்கம் மிகுந்தது கொல்கத்தா நகரம். அந்நகரின் சாலையில் மக்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரு குதிரைவண்டி விரைவாக ஓடிக்கொண்டிருந்தது. வண்டியினுள் நடுத்தர வயதுடைய பெண்மணி ஒருத்தியின் மடியில் பச்சிளங்குழந்தை ஒன்று இருந்தது.

வண்டிக்காரனின் கட்டுப்பாட்டில் இருந்த குதிரை, திடீரென நாலுகால் பாய்ச்சலில் சிட்டாகப் பறக்கலாயிற்று. குதிரையை அடக்க இயலாத வண்டிக்காரன் தூக்கி எறியப்பட்டுக் கீழே விழுந்தான்.

வண்டியினுள் உட்கார்ந்திருந்த பெண்மணி பதறினாள். அவள், குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு அழுதாள். வண்டியின் மரச்சட்டம் ஒன்றனைப் பற்றியவாறு மூச்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

ஐயோ... என்று அலறியவாறு அவள், காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்! எனக் கூக்குரலிட்டாள்.

அவளின் குரலுக்கு அவ்வழியே சென்ற எவரும் செவி சாய்க்கவில்லை. அவர்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் தறிகெட்டு ஓடும் குதிரைக்கு அஞ்சி ஒதுங்கிக் கொண்டார்கள்.



அப்போது, ஏறத்தாழப் பதினைந்து வயதுள்ள சிறுவன் ஒருவன் அக் கூக்குரலைக் கேட்டான். கேட்டு, அவளையும் அவளின் குழந்தையையும் எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என எண்ணினான். துடிப்புமிக்க அச்சிறுவன், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப்போலப் பாய்ந்து சாலைக்கு வந்தான்.

அவன் குதிரைமீது தாவி ஏற முயன்றான். ஆனால், குதிரை துள்ளிக் குதித்து, முதுகை நெளித்து அவனைக் கீழே தள்ளிவிட்டுவிட்டு ஓடியது. மீண்டும் எழுந்த அவன், முன்போலவே குதிரைமீது ஏறி உட்கார முயன்றான்.

அந்தப் பொல்லாக் குதிரை, அவனை மீண்டும் மீண்டும் கீழே தள்ளிவிட்டது. இப்படிப் பலமுறை முயற்சி செய்தான் அச்சிறுவன். அவனுக்குக் கை, கால், முகமென உடல் முழுவதும் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டன.

அவற்றிலிருந்து இரத்தம் கசிந்தாலும், அதற்காக அவன் சிறிதும் மனம் வருந்தவில்லை. மீண்டும் மீண்டும் முயன்று குதிரைமீது ஏறினான். ஏறிய அச்சிறுவன், அதனை அடக்கித் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். வண்டியைச் சாலையோரமாக நிறுத்தினான். உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த அப்பெண்மணி, பெருமூச்சு விட்டுக்கொண்டு தப்பித்தோம் பிழைத்தோம் எனக் கீழே இறங்கினாள்.

அதுவரையில் சாலையோரம் ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த கூட்டம் விரைந்தோடி வந்து வண்டியைச் சூழ்ந்துகொண்டது. அனைவரும் அந்த வீரச்சிறுவனின் மனவுறுதியை வாயாரப் புகழ்ந்தனர்.

குதிரையை அடக்கிய அச்சிறுவன், எவருடைய புகழ்மொழிக்கும் மயங்கவில்லை. தன் உடலிலும் உடையிலும் ஒட்டியிருந்த புழுதியைத் தட்டிவிட்டான். தான் செய்தது அரும்பெருஞ்செயல் என்பதனைப் பற்றிச் சிறிதும் நினைக்கவில்லை. தான் செல்லவேண்டிய பாதையில் தன் நடையைத் தொடர்ந்தான்.

குழந்தைகளே ! உறுதிமிக்க அந்த வீரச்சிறுவன் யார் தெரியுமா ?

அவன் பெயர் நரேந்திரதத். பெயரை எங்கேயோ கேட்டதுபோல் இருக்கிறதா ? ஆம். பிற்காலத்தில் உலகம் புகழ உயர்ந்த சுவாமி விவேகானந்தரே அந்த வீரச்சிறுவன்.

நன்றி : ஜானகிமணாளன், அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள்

## இலக்கணமும் மொழித்திறனும்

### I. நாட்டுப்புறத் தமிழ் அறிவோம்

பின்வரும் பழமொழிகளைப் படியுங்கள்.

(இவற்றைச் சொலவடைகள் என மக்கள் சொல்வார்கள்.)

- கோழியக் கேட்டா ஆனம் காச்சுவாங்க... ( ஆனம் = குழம்பு )
- அளக்குற நாழிக்கு அகவிலை தெரியுமா ?

  (நாழி = தானியங்களை அளக்கும் படி; அகவிலை = தானியவிலை)
- திறந்த வீட்டுக்குத் திறவுகோல் எதுக்கு ? ( திறவுகோல் = சாவி )

ஆனம், அகவிலை, திறவுகோல் முதலிய சொற்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்ச் சிற்றூர்களில் இயல்பாகப் பேசப்பட்டவை. அவை இன்று மறைந்து வருகின்றன. நீங்கள் படித்த நாட்டுப்புறப் பாடலில் திரும்பத்திரும்ப வரும் ஒரு சொல்லைக் கவனித்தீர்களா ?

கொழும்பில கூடாரம் மதுரையில கூடாரம்

கூடாரம் இடுவது என்றால் தங்குவது என்று பொருள்.

நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகளைப் படித்தால், தமிழின் மிகப் பெரியதொரு சொற்களஞ்சியத்தை உருவாக்கலாம்.

### II. பிழையின்றித் தமிழ் எழுதுவோம் – 1

எல்லாரும் பேசும்போது, 'அவனைப் பார்த்தேன்', 'பாலைக் குடித்தேன்' என்று முறையாகப் பேசுகிறார்கள். ஆனால் எழுதும்போது,

"அவனை பார்த்தேன்", "பாலை குடித்தேன்" என்று தவறாக எழுதுகிறார்கள்.

இதனை ஒற்றுப்பிழை என்கிறோம். ஒற்று என்பது மெய்யெழுத்து.

பயிற்சி

ஒற்றெழுத்தைச் சேர்த்து எழுதுங்கள்.

பாடலை + சொன்னேன் = ______________________

கடவுளை + கண்டேன் = ______________________

பழத்தை + தின்றேன் = ______________________

கண்ணனுக்கு + கொடுத்தேன் = ______________________

மதுரைக்கு + செல்வோம் = ______________________

### பிழையின்றித் தமிழ் எழுதுவோம் – 2

செவ்வண்ணமிடப்பட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்தி எழுதுங்கள்.

அ. கிணரில் போட்டேன் ______________________

ஆ. சுவற்றில் வரைந்தேன் ____________________

இ. வயிர் பசிக்கிறது ____________________

தமிழில் ர, ற; ல, ழ, ள; ண, ந, ன ஆகிய எழுத்துகளை எழுதும்போது, பெரும்பாலோர் பிழையாக எழுதுகின்றனர். இவற்றை முறையாக நாம் ஒலிக்கப் பழகாததால், இந்தப் பிழை ஏற்படுகிறது.

ல, ள, ழ இம்மூன்றனையும் வேறுபாடு இல்லாமல், ஒரே மாதிரி ஒலிக்கிறோம். அதனால், எழுதும்போது பிழை ஏற்படுகிறது.

இதனை மயங்கொலிப் பிழை என்கிறோம்.

பயிற்சி

உரிய சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடரை நிரப்புங்கள்.

1. மல்லிகை ____________ வீசியது. (மனம், மணம்)
2. பூமியை ____________ வருவேன். (வலம், வளம்)
3. ____________ பதுங்கிப் பாயும். (புலி, புளி)
4. முகத்தில் ____________ முறுவல் வேண்டும். (புன், புண்)
5. நாய் ____________ நிமிராது. (வால், வாள்)

## III. தமிழின் அடிப்படைச் சொற்கள்

தமிழ்ச்சொற்கள் நான்கு வகைப்படும். அவை,

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

இவற்றுள் முதன்மையானவை பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்.

செல்வி வந்தாள் என்னும் சொற்றொடரில் செல்வி என்பது பெயர்ச்சொல்.

வந்தாள் என்பது வினைச்சொல். வினை என்றால் செயல் என்று பொருள்.

பயிற்சி : கீழ்க்காணும் சொற்றொடர்களில் பெயரையும் வினையையும் சுட்டுக.

| | | பெயர் | வினை |
|---|---|---|---|
| 1. | மரம் ஆடியது | ____________ | ____________ |
| 2. | இருவர் பாடினர் | ____________ | ____________ |
| 3. | செய்தி பரவும் | ____________ | ____________ |
| 4. | குமரன் வருகிறான் | ____________ | ____________ |

கீழ்க்காணும் சொற்றொடர்களில் பொருத்தமான பெயர்ச்சொல்லை இட்டு நிரப்புக.

1. ____________ தூங்கினான்.
2. ____________ பூத்தது.
3. ____________ மட்டைப்பந்து விளையாட்டில் வெற்றி பெற்றது.
4. ____________ அழுதாள்.

கீழ்க்காணும் சொற்றொடர்களில் பொருத்தமான வினைச்சொல்லை இட்டு நிரப்புக.

1. கூட்டம் _____________
2. ஆந்தை _____________
3. வின்செண்ட் பாடம் _____________
4. இசுமாயில் தண்ணீர் _____________

## வகுப்பறைத்திறன்கள்

1. பேசும் திறன்

I. ஏதேனும் ஒரு தலைப்புக் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

அ. பிடித்தமான நாட்டுப்புறப் பாடல்
ஆ. பிடித்தமான ஊர்
இ. தெரிந்த பழமொழி
ஈ. தெரிந்த விடுகதை
உ. பிடித்தமான திருவிழா

II. வினா எழுப்புவோம்.

அ. சர்க்கரை ஆ. பொங்கல் இ. கரும்பு

(எ.கா.) ஒரு கிலோ சர்க்கரையின் விலை என்ன ?

2. கருத்தாடல் திறன்

'வீரச்சிறுவன்' கற்பனைக் கதையா, உண்மைக் கதையா ?

3. எழுதும் திறன்

I. ஓரிரு சொற்களில் விடை தருக.

அ. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார் ?

_____________________________

ஆ. கொழும்பில் கூடாரம் போட்டவர் என்ன வாணிகம் செய்தார் ?

_____________________________

இ. சிற்றூர்களில் பாடும் பாடல் மட்டும்தான் நாட்டுப்புறப் பாடலா ?

_____________________________

ஈ. 'வீரச்சிறுவன்' என்னும் கதைக்கு வேறு என்ன பெயர் வைக்கலாம் ?

_____________________________

II. ஓரிரு வரிகளில் விடை தருக.

அ. நான்மணிக்கடிகை என்பதன் பொருள் என்ன ?
ஆ. எறும்பு குழந்தையை ஏன் கடித்தது ?
இ. நரேந்திரதத் குதிரையை எவ்வாறு அடக்கினான் ?

III. நான்கு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

அ. நாட்டுப்புறப் பாடல்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம் ?

ஆ. நான்கு மணிகளைப்போல விளங்கும் கருத்துகள் யாவை ?

## 4. குழுக் கல்வி

குழுக்களாகப் பிரிந்து நீங்கள் தொகுக்க வேண்டியவை.

1. விடுகதைகள்
2. பழமொழிகள் (சொலவடைகள்)
3. சிற்றூர்க் கதைகள்
4. கைமருத்துவக் குறிப்புகள்
5. ஊர்ப் பெயர்கள்
6. உங்கள் வீடுகளில் உள்ள நம்பிக்கைகள்

## 5. படைப்புத் திறன்

பின்வரும் விடுகதைகளுக்கு விடை காண்க.

அ. அள்ளமுடியும் ஆனால், கிள்ள முடியாது. அது என்ன ?

ஆ. பச்சைவீடு, சிவப்பு வாசல். அது என்ன ?

இ. உச்சிக் குடுமிக்காரன், கொள்ளி வச்சா வெடிப்பான். அவன் யார் ?

உங்களுக்குத் தெரிந்த வேறுசில விடுகதைகளைக் கூறுங்கள்.

## வாழ்க்கைத்திறன்கள்

வீரச்சிறுவனிடமிருந்து கற்றவை

அ. பயிற்சி: வாய்மொழியாக விடை கூறுக. (ஆம் அல்லது இல்லை)

அ. நரேந்திரதத் துணிச்சல் மிக்கவன்.

ஆ. குதிரை, வண்டிக்காரனின் கட்டுப்பாட்டை மீறியது.

இ. வண்டியில் இருந்த பெண்ணுக்குப் பலரும் உதவ முன்வந்தனர்.

ஈ) இறுதிவரை சிறுவனால் குதிரையை அடக்கமுடியவில்லை.

ஆ. பயிற்சி

சிறுவனின் முயற்சியில் என்னென்ன ஆளுமைப் பண்புகளை அறிய முடிகிறது ?
(மூன்றனைத் தேர்ந்தெடுக்க: செயலில் உறுதி, விடாமுயற்சி, வீரம், கவனம், துணிச்சல்)

______________________

______________________

______________________

இ. பயிற்சி

சிறுவனின் அனைத்துப் பண்புகளுக்கும் அடிப்படையாக இருந்த உணர்வு எது ?
(பிறருக்கு உதவுதல், தற்பெருமை, சாதனை)

______________________________________________

### ஈ) நான் என்ன செய்வேன் ? (தன் ஆளுமைப் பயிற்சி)

#### சூழ்நிலை – 1

நண்பனுக்கு ஒரு துன்பம். அவனைப் பார்க்க ஒரு கி.மீ. தொலைவு நடந்து செல்லுதல் வேண்டும். மழைமேகம் கருத்திருக்கிறது. வீட்டிலோ குடையும் இல்லை. நான் என்ன செய்வேன் ?

முடிவு

1. இன்னொரு நாள் போகலாம் என முடிவு எடுப்பேன்.
2. புறப்பட்டுப் போகலாம், மழை பெய்தால் திரும்பிவிடலாம்.
3. எப்பாடுபட்டும் நண்பனைச் சென்று பார்ப்பேன்.

#### சூழ்நிலை – 2

பள்ளியின் விளையாட்டுத்திடலில் விளையாடிக்கொண்டு இருந்தபோது, நண்பனுக்குக் காலில் பலத்த அடி. நான் என்ன செய்வேன் ?

முடிவு

1. ஆசிரியர் பார்த்துக் கொள்வார்; நான் என்ன செய்யமுடியும் ?
2. நான் விரைவாக வீட்டுக்குச் செல்லுதல் வேண்டும்; காலந்தாழ்ந்துசென்றால் வீட்டில் திட்டுவார்கள்.
3. மருத்துவமனைவரை நான் அவனுடன் செல்வேன்; கூடவே இருப்பேன்.

#### சூழ்நிலை – 3

எனக்குக் கடுமையான காய்ச்சல்; மருத்துவர் ஊசி போட்டார்; மருந்து கொடுத்தார்.

முடிவு

1. அழுவேன்; முனகிக்கொண்டே இருப்பேன்.
2. இதுதான் சாக்கு என்று வீட்டில் எல்லாருடனும் சண்டை போடுவேன்; அடம்பிடிப்பேன்.
3. என் உடல்நலமே எனக்கு இன்றியமையாதது; தயக்கமின்றி மருந்து உட்கொள்வேன்.

#### விடைகள்

இலக்கணமும் மொழித்திறனும்

பிழையின்றித் தமிழ் எழுதுவோம் – 2

அ. கிணற்றில் ஆ. சுவரில் இ. வயிறு

பயிற்சி

1. மணம் 2. வலம் 3. புலி 4. புன் 5. வால்

வகுப்பறைத்திறன்கள்

5. படைப்புத்திறன்: அ. தண்ணீர் ஆ. கிளி இ. பட்டாசு

# இசையமுது

மழையே மழையே வா வா – நல்ல
வானப் புனலே வா வா – இவ்
வையத் தமுதே வா வா

தகரப் பந்தல் தணதண வென்ன
தாழும் கூரை சளசள வென்ன
நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்
நன்றெங் கும்கண கணகண வென்ன (மழையே மழையே ...)

ஏரிகுளங்கள் வழியும்படி, நாடு
எங்கும் இன்பம் பொழியும்படி, பொடி
வாரித்தூவும் பூவும் காயும்
மரமும் தழையும் நனைந்திடும்படி (மழையே மழையே...)

தழையா வெப்பம் தழைக்கவும் மெய்
தாங்கா வெப்பம் நீங்கவும்
உழுவார் எல்லாம் மலைபோல் எருதை
ஓட்டிப் பொன்னேர் பூட்டவும் * (மழையே மழையே...)

– புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்



## சொல்பொருள்

வானப்புனல் – மழைநீர்; வையத்து அமுது – உலகின் அமுதம்; வையம் – உலகம்; தகரப்பந்தல் – தகரத்தால் அமைக்கப்பட்ட பந்தல்; பொடி – மகரந்தப் பொடி; தழை – செடி; தழையா வெப்பம் – பெருகும் வெப்பம்; குறையாத வெப்பம் எனவும் பொருள் கொள்ளலாம்; தழைக்கவும் – குறையவும்.

## ஆசிரியர் குறிப்பு

'புரட்சிக்கவிஞர்' எனவும், 'பாவேந்தர்' எனவும் புகழப்படுபவர் பாரதிதாசன். இவர்தம் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதைமீது கொண்ட காதலால், தம்முடைய பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு முதலியன இவர்தம் கவிதை நூல்கள். இவர் வாழ்ந்த காலம் 29. 04. 1891 முதல் 21. 04.1964வரை.

# பழமொழி நானூறு

## கல்வியின் சிறப்பு

ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை; அந்நாடு
வேற்றுநாடு ஆகா; தமவேயாம்; ஆயினால்
ஆற்றுணா வேண்டுவது இல்.

– முன்றுறை அரையனார்

### பாடல்பொருள்

போதிய நூல்களை நிறைவாகக் கற்றவர் அறிவுடையவர் ஆவார். அவருடைய புகழ் நான்கு திசைகளிலும் பரவும். அவருடைய புகழ் பரவாத நாடு இல்லை. அந்த நாடுகள் எல்லாம் வேற்று நாடுகள் இல்லை; தம்முடைய நாடுகளே ஆகும். எனவே, அந்நாடுகளுக்குச் செல்லும்போது வழிநடை உணவை, அவர் எடுத்துச் செல்ல வேண்டிய தேவை இல்லை.

### சொல்பொருள்

ஆற்றவும் – நிறைவாக; நாற்றிசை – நான்கு + திசை; தமவேயாம் – தம்முடைய நாடுகளே ஆகும்; ஆற்றுணா –ஆறு + உணா; ஆறு – வழி; உணா – உணவு. வழிநடை உணவு. இதனைக் 'கட்டுச்சோறு' என இக்காலத்தில் கூறுவர். எந்நாட்டிற்குச் சென்றாலும், அந்நாட்டில் கற்றோரை வரவேற்று உணவு அளிப்பர் என்பது பாடல் உணர்த்தும் கருத்து.

### ஆசிரியர் குறிப்பு

இந்நூலின் ஆசிரியர் முன்றுறை அரையனார். முன்றுறை என்பது ஊர்ப்பெயர். அரையன் என்னும் சொல், அரசனைக் குறிக்கும். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்ட அரசராக இருக்கலாம் அல்லது அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம்.

### நூல் குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு. நானூறு பாடல்களைக் கொண்ட நூல் இது. ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம்பெற்றுள்ளது. இப்பாடலில் வரும் பழமொழி, 'ஆற்றுணா வேண்டுவது இல்' என்பது. இதற்குக் 'கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா' என்பது பொருள்.

# மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதம்



நமது இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களுள் ஒருவர் ஜவகர்லால் நேரு. இவர், நம் நாடு விடுதலை பெற்றபின் முதல் முதன்மை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றார்.

அவருடைய அன்பு மகள்தான் இந்திராகாந்தி. 1922ஆம் ஆண்டுமுதல் 1964ஆம் ஆண்டுவரை 42 ஆண்டுகள் தம் மகளுக்குக் கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்தார்.

நேரு வெளிநாட்டுக்குச் சென்ற பொழுதும், இந்தியாவில் இருந்தபொழுதும் மகளுக்குக் கடிதங்கள் எழுதினார். சிறைச் சாலையில் அடைக்கப்பட்ட பொழுதும்கூட, அவர் கடிதம் எழுதுவதனை நிறுத்தவே இல்லை.

தாகூரின் விசுவபாரதி கல்லூரியில் இந்திராகாந்தி சேர்ந்தபோது, அவர் எழுதிய கடிதம் இது. விசுவபாரதி கல்லூரி மேற்கு வங்காளத்தில் சாந்திநிகேதன் என்னும் இடத்தில் உள்ளது.

(அக்கடிதத்திலிருந்து ஒருபகுதி மட்டும் இங்கே தரப்பட்டுள்ளது.)

அல்மோரா மாவட்டச் சிறைச்சாலை,
1935 பிப்ரவரி 22.

செல்லமகள் இந்து!

சிறைச்சாலையில் நான் நலமாக இருக்கிறேன். கிருபாளினியின் உதவியுடன் படிக்கவேண்டிய பாடங்களை நீ முடிவு செய்துவிட்டாய் போலும். மகிழ்ச்சி. இப்படிப் பேராசிரியர்களைத் தனிப்பட்டமுறையில் சந்தித்துக் கலந்துரையாடுவது நல்லது. வகுப்பில் உட்கார்ந்து பாடங்களைக் கேட்பதனைவிட, இந்த அணுகுமுறை நல்லது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நான் படிக்கும்போதும், அதுதான் நிலைமை. வகுப்பறையில் நடக்கும் உரையாடல்களுக்கு நாங்கள் பெரிய முக்கியத்துவம் கொடுக்கமாட்டோம்; ஆசிரியர்களைத் தனியாகச் சந்தித்து உரையாடுவோம்; அந்த உரையாடல் எங்கள் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன் உடையதாக இருந்தது.

நீ படிக்கும் சாந்திநிகேதனில் இத்தகைய நடைமுறை இருக்கிறதா என்பது தெரியவில்லை; இல்லாவிட்டால் என்ன? ஆசிரியர்களைத் தனியே சந்தித்து உரையாடும் பழக்கத்தை நீ கடைப்பிடி.

நீ வாசிப்பதற்காக அவ்வப்போது புத்தகங்களை நான் அனுப்பலாமா எனக் கேட்டிருந்தேன்; நீயும் அனுப்பச் சொல்லி எழுதி இருக்கிறாய். இப்போது எனக்குள் திகைப்பு என்னவென்றால், உனக்கு எப்படிப்பட்ட புத்தகங்களை அனுப்புவது என்பதுதான்.

புத்தகம் வாசிப்பதனைக் கடமையாக ஆக்குதல் கூடாது; கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படிச் செய்தால், புத்தக வாசிப்பு மகிழ்ச்சியைத் தராது. வெறுப்பே உண்டாகும். அதுமட்டும் அன்று; எந்தப் புத்தகத்தையும் வாசிக்க ஆசை வராது. முன்பு எல்லாம் நம்முடைய பாடப்புத்தகங்களும் தேர்வுகளும் இப்படி வெறுப்பு உண்டாக்கும் விளைவைத்தான் செய்தன. சேக்ஸ்பியர், மில்டன் முதலியோர் எவ்வளவு அற்புதமான ஆங்கிலப் படைப்பாளிகள்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான புத்தகம் பிடிக்கும். குழந்தையாய் இருக்கும்போது, ஒருவகையான புத்தகம் பிடிக்கும். இளைஞராய் இருக்கும்போது, ஒருவகையான புத்தகம் பிடிக்கும்; வயது ஆக ஆக விருப்பம் மாறும்.

உனக்கு என்ன புத்தகம் வாசிக்கப் பிடிக்கும் எனச் சொல்! உனக்குக் கவிதை வாசிக்கப் பிடிக்குமா? அல்லது வரலாறு, நாட்டு நடப்பு, பொருளாதாரம் முதலிய புத்தகங்கள் பிடிக்குமா? உன் ஈடுபாடு தெரிந்தபின் எந்தப் புத்தகம் வாசிக்கலாம் என்பது குறித்து, உனக்கு எழுதுவேன். உன்மீது புத்தகங்களைத் திணிக்க நான் விரும்பவில்லை.

சில புத்தகங்கள் பற்றிப் பொதுவாகப் பேசலாம். பிளேட்டோவின் புத்தகங்கள் சுவையானவை; சிந்தனையைத் தூண்டுபவை. கிரேக்க நாடகங்கள் நம் ஆர்வத்தைத் தூண்டுபவை. அவை சுருக்கமாகவும் இருக்கும்; வாசிக்க எளிதாகவும் இருக்கும். நாடகங்களைப் பற்றிப் பேசுகிறோம். அது சரி! நீ காளிதாசரின் சாகுந்தலம் நாடகத்தை வாசித்திருக்கிறாயா? அது வாசிக்க வேண்டிய நூல்.

சென்ற ஆண்டு டால்ஸ்டாயின் ‘போரும் அமைதியும்’ என்னும் நாவலை வாசிக்கப் போவதாகச் சொன்னாய். வாசித்துவிட்டாயா? உலகின் மிகச் சிறந்த நூல்களுள் அதுவும் ஒன்று. பெர்னாட்ஷாவின்

பல நூல்களை நீ வாசிக்கவில்லை. அவருடைய நூல்கள் வாசிக்கத் தகுந்தவை.

எனக்கு மிகவும் பிடித்தமானவர் பெட்ரண்ட் ரஸ்ஸல். அவருடைய ஆங்கிலம் அருமையானது. அறிவார்ந்த எழுத்து அவருடையது.

நாம் ஏன் புத்தகம் வாசித்தல் வேண்டும்? அறிவு பெறுவதற்காக, மகிழ்ச்சி அடைவதற்காக எனப் பல காரணங்களைச் சொல்லலாம். அவை உண்மைதாம். ஆனால், இதற்குமேலும் ஒரு காரணம் உண்டு. ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை. அதனைப் புரிந்துகொள்ளவும், முறையாக வாழவும் புத்தகப் படிப்பு இன்றியமையாதது.

தனியொரு மனிதனின் பட்டறிவு மிகவும் குறுகியது. புத்தகங்களில் மனிதர்களின் ஏராளமான பட்டறிவுச் சிந்தனைகளும் அடங்கி உள்ளன. அவற்றை வாசிக்கும்போது, நாம் வசிக்கும் சிறு மூலையிலிருந்து வெளியேறுகிறோம். மலைமீது ஏறிநின்று, இதுவரை பார்க்காத உலகக் காட்சிகளைப் பார்க்கும் உணர்வைப் பெறுகிறோம்.

அன்புமிக்க,
உன் அப்பா.



| | | |
|---|---|---|
| கேம்பிரிட்ஜ் | – | இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகம் |
| சேக்ஸ்பியர் | – | ஆங்கில நாடக ஆசிரியர் |
| மில்டன் | – | ஆங்கிலக் கவிஞர் |
| பிளேட்டோ | – | கிரேக்கச் சிந்தனையாளர் |
| காளிதாசர் | – | வடமொழி நாடக ஆசிரியர் |
| டால்ஸ்டாய் | – | இரஷ்ய நாட்டு எழுத்தாளர் |
| பெர்னாட்ஷா | – | ஆங்கில நாடக ஆசிரியர் |
| பெட்ரண்ட் ரஸ்ஸல் | – | சிந்தனையாளர்; கல்வியாளர் |
| அல்மோரா சிறை | – | உத்தராஞ்சல் மாநிலத்தில் உள்ளது |
| கிருபாளினி | – | விசுவபாரதியில் பணிபுரிந்த பேராசிரியர் |

# ஊர்த்திருவிழா – ஒரு கலைவிழா



திருவிழா என்றால், ஊரே அதிரும்படியான மேளச்சத்தம் கேட்கும். வாணவேடிக்கைகள், விதவிதமான ஆட்டங்கள் நடைபெறும். உங்கள் ஊர்த்திருவிழா விலும் இவையெல்லாம் உண்டு அல்லவா ?

அத்தகைய ஒரு திருவிழாவிற்கு ஓவியர் ஒருவர் சென்றிருந்தார். அவர் தீட்டிய வண்ணப்படத்தில், தாம் பார்த்த திருவிழாக் காட்சிகளை உயிரோட்டத்துடன் வரைந்தார். அந்தப் படம்தான் முன்பக்கத்தில் உள்ளது.

எவ்வளவு அழகாய் இருக்கிறது பார்த்தீர்களா ? கொஞ்சநேரம் படத்தைப் பார்த்துக்கொண்டே இருங்கள்... என்ன, பார்த்துவிட்டீர்களா ?

இப்போது வகுப்பறையிலுள்ள மாணவர்களாகிய நீங்கள் ஐந்து குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள். கீழுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு குழுவும் அவரவர் குழு உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டு எழுதித் தொகுத்தல் வேண்டும். வாருங்கள், கலந்துரையாடலாம்.

1. படத்தில் எத்தனைவிதமான காட்சிகளைக் காண முடிகிறது ?
2. மொத்தம் எத்தனை ஆட்டங்களைப் படத்தில் காண்கிறீர்கள் ?
3. படத்தின் இடப்பக்கத்தின்மேல் ஆணும் பெண்ணும் இசைக்கும் கருவியின் பெயர் என்ன ?
4. இடப்பக்கத்தின்கீழ் ஆடுகிற ஆட்டத்தின் பெயர் என்ன ?
5. சிலைக்கு முன்பாக ஆணும் பெண்ணும் ஆடுகிற ஆட்டத்தின் பெயர் என்ன ?
6. படத்தின் வலப்பக்கத்தின் கீழ்ப்பகுதியில் பெண்கள் என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள் ?
7. எத்தனை விதமான வண்ணங்கள் இப்படத்தில் இடம் பெற்றிருக்கின்றன ?
8. இப்படம் உங்களுக்குள் ஏற்படுத்திய எண்ணத்தை மூன்று வரிகளில் எழுதுங்கள்.
9. உங்கள் ஊரில் நடைபெறும் விழாக்களைப் பட்டியலிடுங்கள்.
10. உங்கள் ஊர்த்திருவிழாவில் வேறு என்னென்ன ஆட்டங்கள் நடைபெறும் ?

குழுக்களில் மேற்கண்ட வினாக்களுக்குக் கலந்துரையாடிக் கருத்துகளைத் தொகுக்கவும். ஒவ்வொரு குழுவிலிருந்தும் குழுத்தலைவர் முன்வந்து, தான் தொகுத்த செய்திகளை வகுப்பறையில் கூறவும். எந்தக் குழு சிறப்பாகக் கருத்துகளைத் தொகுத்து வழங்குகிறதோ, அந்தக்குழுவை அழைத்துக் கையொலி எழுப்பி, அனைவரும் பாராட்டுதல் வேண்டும்.

செயல்பாடு

உன் ஊரில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவைப்பற்றி, உன் எண்ண ஓட்டத்தைத் தொகுத்து எழுதுக.

## இலக்கணமும் மொழித்திறனும்

### 1. மொழிக்குள் வியப்பு

#### ஒருசொல் பலபொருள்

பாரதிதாசன் பாடலில் மூன்று இடங்களில், 'தழை' என்னும் சொல் இடம்பெற்றுள்ளது.

மரமும் தழையும் – என்னும் தொடரில் தழை என்பது, செடிகொடியைக் குறித்தது.

இங்குத் 'தழை' என்பது பெயர்ச்சொல்.

தழையா வெப்பம் தழைக்கவும் – என்னும் தொடரில் தழை என்பது வினைச்சொல்.

தழைத்தல் – என்பதற்குக் கூடுதல் எனவும், குறைதல் எனவும் பொருள் உண்டு.

(எ.கா.)

நாடு தழைக்க – நாடு வளர்க.

சேலையைத் தழையத் தழைய உடுத்தினாள்– சேலையைத் தாழப் படியுமாறு உடுத்தினாள் என்பது பொருள்.

இது வியப்பான செய்திதானே!

பழமொழி நானூறு செய்யுளைப் பாருங்கள்.

ஆற்றுணா – ஆறு + உணா

ஆறு என்பது வழியைக் குறிக்கிறது.

ஆறு என்னும் சொல்லுக்குத்தான்

எத்தனை பொருள்கள் ?



| | | |
|---|---|---|
| ஆறு | – | ஓர் எண் (6) |
| ஆறு | – | இயற்கையாக இருகரைகளுக்கு இடையில் நீர் ஓடும் பரப்பு |
| ஆறு | – | வழி |
| ஆறு | – | தணி |

#### பயிற்சி

உரிய பொருளைக் கண்டுபிடித்து எழுதுக.

பச்சைக்குழந்தை ____________________

பச்சைப்பயிர் ____________________

பச்சைப்பொய் ____________________

பச்சைத்தண்ணீர் ____________________

## 2. கணகண; தணதண

ஒலியை உணர்த்தும் சொற்கள் இரண்டு இரண்டாகவே சேர்ந்து வரும். அவ்வாறு வரும்பொழுது, அஃது ஒலிக்குறிப்பை வெளிப்படுத்தும். இதனைப் பிரித்தால் பொருள் தராது.

பாரதிதாசன் பாடலில் மழை பலவிதமான ஒலிகளை எழுப்புகிறது.

தணதண

கணகண

சளசள

இலக்கணத்தில் இதனை இரட்டைக்கிளவி என்பர்.

இரட்டை என்றால் இரண்டு; கிளவி என்றால் சொல்.

### பயிற்சி

உரிய இரட்டைக்கிளவிச் சொற்களை நிரப்புக.

அ. பட்டாசு எப்படி வெடித்தது ? ____________________

ஆ. குழந்தை எப்படி ஓடியது ? ____________________

இ. சுருக்கமாகப் பேசு; ____________________ என்று பேசாதே !

ஈ. வைரக்கல் ____________________ என்று மின்னியது.

## 3. பழமொழிச் செய்யுளில் வரும் பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அறிவுடையார் = ______________ அஃதுடையார் = ______________

நாடில்லை = ______________

ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு நினைவில் இருக்கிறது அல்லவா ?

| | | |
|---|---|---|
| ஒற்றைக்கொம்பு – குறில் | செடி | ( ச் + எ = செ ) |
| இரட்டைக்கொம்பு – நெடில் | வேல் | ( வ் + ஏ = வே ) |
| ஒற்றைக்கொம்பு + துணை எழுத்து – குறில் | பொருள் | ( ப் + ஒ = பொ ) |
| இரட்டைக்கொம்பு + துணை எழுத்து – நெடில் | தோடு | ( த் + ஓ = தோ ) |

### பயிற்சி

வண்ணத்தில் உள்ள சொற்களில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து திருத்தி எழுதுக.

1. செவல் கூவியது. ____________________
2. ஆணும் பேண்ணும் சமம். ____________________
3. ஏட்டிக்குப் பொட்டி பெசாதே. ____________________
4. அவன் எங்கெ சேன்றான். ____________________

## வகுப்பறைத்திறன்கள்

**1. பேசுக.**

அ. நேரு படித்த பல்கலைக்கழகத்தின் பெயர் என்ன ?

ஆ. பாடப்பகுதியாக அமைந்துள்ள கடிதத்தை நேரு எங்கிருந்து எழுதினார் ?

இ. இந்திராகாந்தி படித்த பல்கலைக்கழகம் எது ? அஃது எங்குள்ளது ?

**2. வினா எழுப்புக.**

பின்வரும் சொற்களை மையமாகக்கொண்டு வினாக்களை உருவாக்குக.

சிறை

புத்தகம்

வகுப்பறை

(எ.கா.) சிறை – சிறையில் கைதிகளுக்கு என்ன சாப்பாடு கொடுப்பார்கள் ?

**3. கருத்தாடல் செய்க.**

வீட்டிலும் பள்ளியிலும் படித்ததனைவிட நேரு மிகுதியாகப் படித்தது சிறைச் சாலையில். இதற்குக் காரணம் என்ன ?

**4. எழுதுக.**

I. ஓரிரு சொற்களில் விடை எழுதுக.

அ. நேரு விரும்பிப் படித்த நூல்கள் எந்த மொழியில் இருந்தன ?

(இந்தி, ஆங்கிலம், தமிழ்) ____________________

ஆ. நேரு மகளுக்கு எழுதிய கடிதத்தில் எதனைப் பற்றி அதிகம் கூறுகிறார் ?

(உணவு, உடல்நலம், நூல்கள்) ____________________

இ. உலகின் மிகச் சிறந்த நாவல்களில் ஒன்று என நேரு குறிப்பிடுவது எதனை ?

____________________

ஈ. சாகுந்தலம் என்னும் நாடகத்தின் ஆசிரியர் யார் ?

____________________

II. ஓரிரு தொடர்களில் விடை எழுதுக.

அ. வகுப்பறையில் கற்பதனைவிட எது சிறந்தது என்கிறார் நேரு ?

ஆ. ‘உலகம்’ என்னும் பொருளில் வரும் தமிழ்ச்சொற்கள் சிலவற்றைக் கண்டறிக.

இ. ‘மேகம்’ என்னும் பொருள் உணர்த்தும் தமிழ்ச்சொற்கள் சிலவற்றைக் கண்டறிக.

ஈ. அரசனை வேறு எந்தெந்தச் சொற்களால் குறிப்பிடலாம் ?

III. நான்கு வரிகளுக்கு மிகாமல் குறிப்பு எழுதுக.

அ. நேரு, தன் மகளிடம் படிக்கச் சொல்லிப் பரிந்துரைத்த நூல்கள் எவை ?

ஆ. நூல்களை நாம் ஏன் வாசித்தல் வேண்டும் ?

## 5. படைப்புத் திறன்

அ. குறிப்புகளை விரித்து நிகழ்ச்சியை எழுதுக.

தந்தை – மகன் – திருவிழா – செல்லல்;
கூட்டம் – மகன் – காணவில்லை; தந்தை – பதற்றம்;
பலூன்கடை – மிட்டாய்க்கடை – தேடல் – இல்லை;
தந்தை – கவலை; காவலர் – வருகை – விசாரித்தல்;
மகன் – இராட்டினம் – வேடிக்கை – கண்டுபிடிப்பு;
தந்தை – மகிழ்ச்சி – வீடு திரும்பல்.

ஆ. சின்னஞ்சிறு பாடல் எழுதுக.

‘வாசிப்போம்’ எனத் தொடங்கி ‘நேசிப்போம்’ என முடிக்க (அல்லது)
‘புத்தகம்’ எனத் தொடங்கிப் ‘போர்வாள்’ என முடிக்க.

# வாழ்க்கைத்திறன்கள்

## 1. நேருவிடம் கற்றவை

அ. பயிற்சி (வாய்மொழி விடை கூறுக.)

1. எதற்காக ஆங்கிலேயர் நேருவைச் சிறையில் அடைத்தனர் ?
2. சிறையில் வசதிகள் இருக்குமா ?
3. சிறையில் உறவினர்களும் உடன் இருப்பார்களா ?
4. சிறைச்சாலையில் நேருவின் நண்பனாக இருந்தது எது ?
5. சிறையில் வசதிகள் இல்லை என்பதற்காக நேரு புத்தகம் படிப்பதனை நிறுத்தினாரா ?

## ஆ. பயிற்சி

1. துன்பமான நேரத்தில் அறவே கைவிட வேண்டியது எது ?

   ______________________________

   (புத்தகம் வாசிப்பது, உடற்பயிற்சி செய்வது, தொலைக்காட்சி பார்ப்பது)

2. நீ பெரிதும் விரும்பும் இடம் எது ?

   ______________________________

   (வகுப்பறை, வீடு, விளையாட்டுத்திடல், திரை அரங்கு)

3. உன் வீட்டில் புத்தகம் வாசிக்கும் பழக்கம் உள்ளவர் யார் ?

   ______________________________

4. பாடப்புத்தகம் தவிர, நீ விரும்பி வாசிக்கும் வேறு புத்தகம்/செய்தித்தாள் பற்றி எழுதுக.

   ______________________________

## இ. பயிற்சி

1. நேருவின் கடிதத்தின்மூலம் நீ கற்ற வாழ்க்கைப் பண்பு எது ?

   பின்வரும் சொற்றொடரை நிரப்பினால் அது கிடைக்கும்.

   எவ்வளவு ____________ நேரத்திலும், புத்தகம் ____________ பழக்கத்தைக் ____________ கூடாது.

### விடைகள்

**இலக்கணமும் மொழித்திறனும்**

2. கணகண தணதண

**பயிற்சி**

அ. படபட ஆ. குடுகுடு இ. வளவள ஈ. பளபள

**வகுப்பறைத்திறன்கள் – 4. எழுதுக. ( II )**

ஆ. ஞாலம், நிலம், பூவுலகம். இ. முகில், எழிலி, கொண்டல், மஞ்சு.

ஈ. மன்னன், வேந்தன், கொற்றவன்.

**வாழ்க்கைத்திறன்கள்**

இ. பயிற்சி

1. எவ்வளவு துன்பமான நேரத்திலும், புத்தகம் படிக்கும் பழக்கத்தைக் கைவிடக் கூடாது.

# சித்தர் பாடல்

வைதோரைக் கூட வையாதே – இந்த
வைய முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே!
வெய்ய வினைகள் செய்யாதே – கல்லை
வீணில் பறவைகள் மீதில் எய்யாதே!

பாம்பினைப் பற்றி ஆட்டாதே – உன்றன்
பத்தினி மார்களைப் பழித்துக் காட்டாதே!
வேம்பினை உலகில் ஊட்டாதே – உன்றன்
வீறாப்பு தன்னை விளங்க நாட்டாதே!

போற்றும் சடங்கை நண்ணாதே – உன்னைப்
புகழ்ந்து பலரில் புகலல் ஒண்ணாதே!
சாற்றும்முன் வாழ்வை எண்ணாதே – பிறர்
தாழும் படிக்குநீ தாழ்வைப் பண்ணாதே!

கள்ள வேடம் புனையாதே – பல
கங்கையிலே உன்கடம் நனையாதே!
கொள்ளை கொள்ள நினையாதே – நட்புக்
கொண்டு பிரிந்துநீ கோள்முனையாதே!

– கடுவெளிச் சித்தர்

## பாடல்பொருள்

உன்னை வைதவரைக்கூட நீ வையாதே; இந்த உலகத்தில் எல்லாம் பொய்யாகப் போனாலும் நீ பொய் சொல்லாதே; பிறர்க்குத் துன்பம் தரும்செயல்களைச் செய்யாதே; கல்லெறிந்து பறவைகளைத் துன்புறுத்தாதே!

பாம்போடு விளையாடாதே! பெண்களைப் பழித்துப் பேசாதே! பிறரிடம் கசப்பான சொற்களைப் பேசாதே! உன் இறுமாப்பைப் பிறர்க்குக் காட்டாதே!

பிறர் கொண்டாடிச் செய்யும் சடங்குகளை நீயும் செய்யாதே! உன்னைப் புகழ்ந்து பேச, பிறர் வீடுகளுக்குச் செல்லாதே; உன் வாழ்வைப் போற்றி நீ பெரிதாக எண்ணாதே! பிறருக்கு இழிவை உண்டாக்கும் தாழ்வான செயல்களைச் செய்யாதே!

போலி வேடங்களைப் போடாதே! புண்ணிய ஆறுகளைத் தேடித்தேடிப் போய் முழுகாதே! யாருடைய பொருளையும் திருட நினைக்காதே! ஒருவனோடு நட்புக்கொண்டு பிறகு அவனைப் பிரிந்து, அவனைப் பற்றிப் பிறரிடம் கோள்மூட்டிப் பேசாதே!

## சொல்பொருள்

| | |
|---|---|
| வெய்யவினை | – துன்பம் தரும் செயல் |
| வேம்பு | – கசப்பான சொற்கள் |
| வீறாப்பு | – இறுமாப்பு |
| பலரில் | – பலர் + இல், பலருடைய வீடுகள் |
| புகலல் ஒண்ணாதே | – செல்லாதே |
| சாற்றும் | – புகழ்ச்சியாகப் பேசுவது |
| கடம் | – உடம்பு |

## பாடல் குறிப்பு

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள்.

பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணிச் சித்தர் என்பன எல்லாமே காரணப் பெயர்கள்.

நம் பாடப்பகுதிப் பாடலின் ஆசிரியர் கடுவெளிச் சித்தர்.

இவர், உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியையே கடவுளாக வழிபட்டவர்;

எளிய சொற்களில் அறிவுரைகளைக் கூறியவர்.

# இளமையில் பெரியார் கேட்ட வினா



இராமசாமி குறும்புக்காரச் சிறுவன். யார் எதனைச் சொன்னாலும் ஏன், எப்படி, எதற்கு என்று வினா கேட்பான். அவனுக்குப் புரியவைப்பது எளிதான செயலாக இல்லை. அமைதிப்படுத்துவது பெற்றோரான வேங்கடப்பருக்கும் – சின்னத்தாயம்மாளுக்கும் பெரும்பாடாக இருந்தது.

இராமசாமி துடுக்காகக் கேட்கிற வினாக்களால் எரிச்சல் அடைந்தோர் பலர்; 'கெட்டிக்காரச் சிறுவன்' என்று தட்டிக்கொடுத்தோர் சிலர். தானாகச் சிந்தித்துப் புரிந்துகொள்ள நினைக்கிறான் இராமசாமி; அதனால், தப்பு ஒன்றும் இல்லையே என்றும் சிலர் பாராட்டினர்.

இராமசாமிக்குப் பன்னிரண்டு அகவை. ஈரோடு அவனது ஊர். அங்கு இராமநாதன் என்பவரின் கடையில் இராமசாமி உட்கார்ந்திருந்தான். நடக்கிற எந்த ஒரு செயலுக்கும் மனிதனின் தலைவிதிதான் காரணம் என்று சொல்லிக்கொண்டே இருப்பவர் அந்த இராமநாதன்.

இராமநாதனின் தலைக்குமேல் தொங்கிக்கொண்டு இருந்த தராசுத்தட்டை, அவர் கவனிக்காத நேரம் பார்த்து மெல்லத் தட்டிவிட்டான் இராமசாமி. இராமநாதனின் தலையில் தட்டு 'மடாரென' வந்து விழுந்தது. "ஏன் தள்ளிவிட்டே ?" என்று இராமசாமியைச் சினத்துடன் விரட்டினார் கடைக்காரர். "தலைவிதிப்படிதான் எல்லாம் நடக்கிறது என்று சொன்னீர்கள் அல்லவா ? என்னை ஏன் விரட்டுகிறீர்கள் ?" என்று சொல்லியபடியே இராமசாமி ஓடி மறைந்தான்.

இராமசாமியின் பெற்றோர் அவன் பள்ளிக்குச் செல்லும்போது, நாள்தோறும் ஓர் அறிவுரையைச் சொல்லி அனுப்புவர். ‘‘பள்ளிக்குச் செல்லும் வழியில் உனக்கு நா வறட்சி ஏற்படும். அப்போது மற்ற மாணவர்கள் வீடுகளில் நீ போய் நீர் கேட்காதே. அவர்கள் கீழ்ச்சாதி மக்கள். அவர்கள் தொட்ட எதனையும் நாம் உண்ணவோ குடிக்கவோ கூடாது’’ என்பதுதான் அது.

இராமசாமிக்கு இது புரியவில்லை; பிடிக்கவும் இல்லை. நீர்தானே குடிக்கிறோம், யார் வீட்டில் குடித்தால் என்ன என்று அவனுக்குத் தோன்றியது.

ஒருநாள், இராமசாமிக்கு நீர்வேட்கை ஏற்பட்டது; வீடு கொஞ்சம் தொலைவில் இருந்தது. வீட்டிற்குச் செல்லும்வரை நீர் குடிக்காமல் இருக்க இயலாது.

அவனது வகுப்பு ஆசிரியர் வீடு, அவன் செல்லும் வழியில் இருந்தது. அங்குச் சென்று நீர் கேட்டான். அங்கிருந்த பெண் குவளையில் கொண்டுவந்து நீர் கொடுத்தாள்; இராமசாமியும் குடித்தான்.

அவன் குடித்த குவளையின்மீது நீர் தெளித்த பிறகே அப்பெண் அதனை வீட்டுக்குள் கொண்டு சென்றாள். இராமசாமிக்கு அவளின் செயல் புரியவில்லை.

வீட்டிற்கு வந்ததும் அம்மாவைக் கேட்டான். ‘‘அவர்கள் மேல்சாதிக்காரர்கள். நாம் தொட்ட பொருள்களைத் தூய்மை செய்துவிட்டுத்தான் மீண்டும் பயன்படுத்துவார்கள்’’ என்றார் இராமசாமியின் அம்மா. இராமசாமிக்கு அம்மா சொன்னது வியப்பை அளித்தது. அவனுடைய பெற்றோர் சிலரைக் கீழ்ச்சாதியினராக நினைக்கின்றனர்; வேறு சிலரோ அவனையும், அவனுடைய பெற்றோரையும் கீழ்ச்சாதியினராக நடத்துகின்றனர். மனிதர்கள் ஏன் இப்படி ஒருவரையொருவர் தாழ்வாக நினைக்கின்றனர் என்று இராமசாமி சிந்தித்தான்.

யார் யாரையெல்லாம் கீழ்ச்சாதிக்காரர்கள் என்று தன் வீட்டார் கருதுகிறார்களோ, அவர்கள் வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடுவது என்று இராமசாமி முடிவு செய்தான். அதன்படி எல்லாக் குழந்தைகளுடனும் விளையாடத் தொடங்கினான்.

அஃது, அவனுக்குப் பிடித்தும் இருந்தது; யாரும் யாரையும் தொடலாம்; யாரும் யார் வீட்டிலும் சாப்பிடலாம் என்பதனையும் உறுதிசெய்து கொண்டான்.

யார் எதனைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று தற்சிந்தனையுடன் இருந்த இராமசாமி, யார்? வினாமேல் வினாக் கேட்டு எல்லாரையும் சிந்திக்கச் செய்த அந்தச் சுட்டிப் பையன், யார்?

உங்கள் ஊரின் நடுவே பெரிய தாடியுடன், கண்ணாடி அணிந்த ஒரு தாத்தாவின் சிலையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சில இடங்களில் கைத்தடியைப் பிடித்தவாறும், வேறுசில இடங்களில் உட்கார்ந்து புத்தகம் படித்தவாறும் அவரது சிலை அமைக்கப்பட்டு இருக்கும்.

அந்தத் தாத்தாதான் இராமசாமி. தமிழகத்தின் மிகப்பெரிய சிந்தனையாளர் அவர்; ஏன், இந்தியாவின் மாபெரும் சிந்தனையாளரும்கூட. பெரியார் ஈ. வே. ரா. என்றும் அவரை அழைப்பார்கள்.

சிறுவன் இராமசாமி, பெரியார் இராமசாமியாக வளர்ந்து உயர்ந்த கதை மிகச் சுவையானது. அவர் வளர்ந்து பெரியவரான பிறகும் வினாக்கள் கேட்பதனை நிறுத்தவே இல்லை. மற்றவர்களையும் வினாக்கள் கேட்கப் பழக்கவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. அவர், தாம் வாழ்ந்த காலம் முழுவதும் அறிவுக்கே முதலிடம் கொடுத்தார். அறிவைப் பயன்படுத்தி எது சரி, எது தவறு என்று சிந்தித்துப் புரிந்துகொண்ட பின்னரே செயல்படவேண்டும் என்றவர் அவர்.

பல நூறு ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வரும் வழக்கமானாலும் சரி; அதனைச் செய்தால் என்னவாகும்; செய்யாவிட்டால் என்னவாகும் என்று சிந்தித்தே முடிவெடுக்க வேண்டும் என்றார் அவர்.

இதுபோன்ற அறிவார்ந்த செயல்களால் பெரியார் பலரையும் ஈர்த்தார்; அடிக்கடி கூட்டங்களை நடத்தினார்; சாதி உயர்வுதாழ்வுகளையும் மத வேறுபாட்டையும் அகற்ற வேண்டும் என்றார்; அதற்காக ஒரு சங்கமும் அமைத்தார்; அதற்குப் 'பகுத்தறிவாளர் சங்கம்' என்பது பெயர்.

இளமையிலே பெரியார், மகாத்மா காந்தியின் தொண்டரானார்; காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தார்; கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்; கள் இறக்குவதனைத் தடுப்பதற்காகத் தன்னுடைய தோப்பிலிருந்த தென்னை மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்தார். கதர் அணிய வேண்டும் என்று பரப்புரை செய்தார். அதுமட்டுமின்றி, தன் தோளில் கதர்த்துணிகளைச் சுமந்து விற்றார். பிறப்பினால் வரும் கீழ்ச்சாதி – மேல்சாதி என்னும் வேறுபாடுகளை அகற்றி, மக்கள் அனைவரும் மனிதச்சாதி என்னும் ஓரினமாக எண்ணவேண்டும் என்றார்.

பிறரை மதித்தல் வேண்டும், அது மரியாதை. தன்னைத்தானே மதிப்பதும், தன் மரியாதையைத் தக்கவைத்துக் கொள்ளுவதும் சுயமரியாதை. சிறு குழந்தையையும் 'வாங்க, போங்க...' என்று மரியாதையுடன் அழைத்துப் பேசுவது பெரியாரின் பண்பு. பெரியார் மரியாதையையும் – சுயமரியாதையையும் தம்மிரு கண்ணாகக் கருதினார்.

கேரளாவில் வைக்கம் என்னும் ஊரில் தாழ்த்தப்பட்ட மக்கள், கோவில் சுற்றுத்தெருவில் நடப்பதற்குத் தடை இருந்தது. அதனை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றதனால், 'வைக்கம் வீரர்' என்று அழைக்கப்பட்டார்.

"கீழ்ச்சாதி – மேல்சாதி வேற்றுமை, தீண்டாமைக் கொடுமைகள் அகல, எல்லாருக்கும் கல்வி தேவை; எல்லாரும் கல்வி பெறுதல் வேண்டும்" என்று பெரியார் கூறினார். இந்தக் கருத்துகள் இளைஞர்களை ஈர்த்தன. அதனால், சுயமரியாதை இயக்கம் வலுவடைந்தது.

"மனிதர்களை மனிதர்களாக மதிக்கவேண்டும் என்பதனை ஏற்கிறீர்கள். அதுபோல, மனிதர்களில் சரிபாதியாக உள்ள பெண்களையும் மதித்தல் வேண்டும். ஆண்கள் செய்யும் எல்லாவற்றையும் பெண்களும் செய்தல் வேண்டும்; அவர்களால் செய்யவும் இயலும். பெண்களுக்கு நகையோ அழகான உடையோ முக்கியம் இல்லை; அறிவும் சுயமரியாதையும்தான் மிக முக்கியம்."

இராமசாமி இவ்வாறு பேசியது பெண்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.


அவர்களும் துணிவு பெற்று மேடையேறிப் பேசினார்கள்.

தாய்மார்கள்தாம் இராமசாமிக்குப் ‘பெரியார்’ என்று பட்டம் வழங்கினார்கள்.

பெண்விடுதலைக்கு முதற்படியாகப் பெண்கள் எல்லாரும் கல்வி கற்கவேண்டும் என்பதனைப் பெரியார் வற்புறுத்தினார். பெண்கள் துணிவுடனும் நம்பிக்கையுடனும் விளங்குதல் வேண்டும் என்றார். மற்போர், குத்துச்சண்டை முதலிய விளையாட்டுகளையும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்றார். அரசுப்பணி, இராணுவம், காவல்துறை முதலியவற்றிலும் பெண்களைச் சேர்த்தல் வேண்டும் என்றார்.

குணத்திலும் அறிவிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே வேறுபாடு இல்லை; இருவரும் நிகரானவர்களே என்பதனை மீண்டும்மீண்டும் வற்புறுத்தினார். தம் தொண்ணூற்றைந்து அகவையிலும்கூடப் புதிய சிந்தனைகளை எடுத்துக் கூறினார்.

‘அறிவு என்பது வளர்ந்துகொண்டே இருக்கும்; எனவே, புதியனவற்றை ஏற்றல் வேண்டும்’ என்றார். நெடுநாள் வாழ்ந்தவரான பெரியார், நமது சமுதாயத்திற்குச் செய்த தொண்டுகள் எண்ணற்றவை. பெரியாரின் பெருமைக்குக் காரணம், தற்சிந்தனையும் சிந்தித்ததனைச் சொன்ன துணிச்சலும்தான். நாம், அவற்றை பெரியாரிடமிருந்து கற்றுக்கொள்வோம்; நம்மை மேலும் வளர்த்துக்கொள்வோம்!



பெரியாரின் கையொப்பம்




சிறப்புக் குறிப்புகள்

**17.09.1879**இல் பிறந்து, **24.12.1973**இல் மறைந்த பெரியார், தம் வாழ்நாளில் **8600** நாள், **13,12,000** கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்து, **10,700** கூட்டங்களில் **21,400** மணிநேரம் மக்களுக்காக உரையாற்றிச் சமுதாயத் தொண்டு ஆற்றினார்.

**1970**ஆம் ஆண்டு சமுதாயச் சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் அவையின் ‘யுனெஸ்கோ விருது’ பெரியாருக்கு வழங்கப்பட்டது.

நடுவண் அரசு **1978**ஆம் ஆண்டு பெரியாரின் உருவம் பொறித்த அஞ்சல்தலையை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

# தங்கமாம்பழமும் சூட்டுக்கோலும்

(நாடகம்)

## காட்சி – 1

| | | |
|---|---|---|
| இடம் | : | அரண்மனை |
| பாத்திரங்கள் | : | அரசர், அரசரின் நோயுற்ற தாய், அமைச்சர், வைத்தியர்கள், சேவகர்கள். |

அரசர் : (வருத்தத்துடன்) அரண்மனை வைத்தியரே... என்னை ஈன்ற அன்புத் தாயாரின் உடல்நிலை இப்போது எப்படி உள்ளது?

அரண்மனை வைத்தியர் : பொறுத்தருளுதல் வேண்டும். அரசே! நாடியைப் பிடித்துப் பார்த்ததில் தங்களின் தாயார் பிழைப்பது கடினம் என்று தெரிகிறது; இன்னும் சில நாளே இருப்பார். ஆகவே, அவர் விரும்பியதனைச் செய்து அவரை மகிழ்விக்கலாம்.

அரசர் : அப்படியா...!

(தாயாரின் அருகே செல்கிறார் அரசர்.)

தாயே! தங்கள் விருப்பத்தைச் சொல்லுங்கள். அதனை நிறைவேற்றக் காத்திருக்கிறேன்.

(அரசரின் தாயார் மெல்ல முனகியபடி ஏதோ சொல்கிறார். புரிந்துகொண்ட அரசர் ஆணையிடுகிறார்.)

அரசர் : அமைச்சரே! என் அன்னை, மாம்பழம் சாப்பிட விரும்புகிறார். இதுவே அவர்தம் விருப்பம். உடனே அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!

அமைச்சர் : பொறுத்தருளுதல் வேண்டும், அரசே! இது மாம்பழக்காலம் இல்லை.

அரசர் : எங்கிருந்தாலும் சரி, அண்டைநாடு சென்றாவது மாம்பழம் கொண்டு வாருங்கள். சேவகர்களே! உடனே புறப்படுங்கள்.

சேவகர்கள் : அப்படியே ஆகட்டும்... அரசே!

(சேவகர்கள் பல திசைகளிலும் சென்று அலைகிறார்கள். ஆனால், மாம்பழம் கொண்டு வருவதற்குள் அவருடைய தாயாரின் உயிர் பிரிந்துவிடுகிறது. அரசர் பெருங்கவலை கொள்கிறார்.)

## காட்சி – 2

இடம் : அரசவை

பாத்திரங்கள் : அரசர், அமைச்சர்கள், தெனாலிராமன்.



அரசர் : என் அன்னையின் இறுதி விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லையே என்கிற குற்ற உணர்ச்சி என்னை அரித்துக் கொல்கிறது. அவருடைய மனம் அமைதி அடையாமலே உயிர் பிரிந்துவிட்டதே!

அமைச்சர் : வருந்த வேண்டா, அரசே! அதற்குப் பரிகாரம் செய்யலாம். இந்தக் குற்ற உணர்ச்சியில் இருந்து நீங்கள் தப்பிக்க வழி இருக்கிறது, அரசே!

அரசர் : என்ன வழி, சொல்லுங்கள்!

அமைச்சர் : சொல்கிறேன், அரசே! நூற்றெட்டுத் துறவிகளுக்குத் தங்கத்தில் மாம்பழம் செய்து, தானமாகக் கொடுத்து விருந்து வைத்தால், உங்கள் தாயாரின் மனம் அமைதி அடையும்.

அரசர் : ஆகட்டும், அமைச்சரே! விரைவில் இது நடக்க ஏற்பாடு செய்யுங்கள்.



அமைச்சர் : அப்படியே ஆகட்டும், அரசே!

(பின்னர், தடபுடலான விருந்து நடக்கிறது. அனைவருக்கும் தங்கமாம்பழங்களை அரசர் வழங்குகிறார். அந்நேரத்தில் அரசவை விகடகவி தெனாலிராமன் அங்கு வருகிறார்.)

தெனாலிராமன் : (சிந்தித்தவாறு) அஃதெப்படி, இவர்களுக்குத் தங்கமாம்பழம் கொடுத்தால் அரசரின் இறந்துபோன தாயார் மனம் எப்படி அமைதி அடையும்? எவ்வளவு பொருள் செலவு? இது பொருத்தமற்ற செயலாக உள்ளதே! இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுகிறேன்.

(ஒரு முடிவோடு தெனாலிராமன் செல்கிறார்.)

## காட்சி – 3

இடம் : அரண்மனை

பாத்திரங்கள் : தங்கமாம்பழம் பெற்றவர்கள், தெனாலிராமன்.

தெனாலிராமன் : நண்பர்களே! சென்ற ஆண்டு என் தாயார் இறந்தது உங்களுக்குத் தெரியும். என் தாயின் இறுதி ஆசையை நிறைவேற்ற இயலவில்லை என்கிற குற்ற உணர்ச்சியில் இருக்கிறேன். இன்றுமாலை என் இல்லத்தில் பரிகார விழா நடைபெற உள்ளது. அனைவரும் தவிராமல் வருதல் வேண்டும்.

தங்கமாம்பழம் பெற்றவர்கள் : (தங்கமாம்பழத் திட்டம் நன்கு வேலை செய்கிறதே என எண்ணியபடி) இராமா! கவலை வேண்டா, நாங்கள் உறுதியாக வந்துவிடுகிறோம்.

## காட்சி – 4

இடம் : தெனாலிராமன் இல்லம்

பாத்திரங்கள் : தெனாலிராமன், தங்கமாம்பழம் பெற்றவர்கள்

(மாலை நேரம் – தெனாலிராமன் வீட்டில் நூற்றெட்டுப் பேரும் அறைக்குள் செல்கின்றனர். அனைவரையும் குனியச் செய்து முதுகில் பழுக்கக் காய்ச்சிய கம்பியால் தெனாலிராமன் சூடு போடுகிறார்.)

ஒருவர் : அய்யோ... எரியுதே!

மற்றொருவர் : அம்மா... சூடு தாங்க முடியவில்லையே!

(சூடுபட்டவர்கள் வலி பொறுக்காமல் அலறுகின்றனர். இச்செய்தி அரசவையை எட்டுகிறது.)

## காட்சி – 5

இடம் : தெனாலிராமன் இல்லம்

பாத்திரங்கள் : அரசர், தெனாலிராமன், சூடுபட்டவர்கள்.

அரசர் : தெனாலிராமா, ஒழுங்காகச் சொல். இவர்கள் முதுகில் சூடு வைத்தாயாமே! என்ன செயல் இது? ஏன் இப்படிச் செய்தாய்?

தெனாலிராமன் : அரசே, என் தாயார் வலிப்புநோய் வந்து காலமானார். வைத்தியர்கள் சூட்டுக்கோலைப் பழுக்கக் காய்ச்சி, அவருக்குச் சூடுபோட்டால் வலிப்புத் தீரும் என்றார்கள். ஆனால், சூட்டுக்கோல் சூடு ஏறுவதற்குள் தாயாரின் உயிர் பிரிந்துவிட்டது! தாயாருக்குச் செய்யாமல் விட்ட மருத்துவத்தை, நூற்றெட்டுத் துறவிகளுக்கும் செய்தால், என் தாயாரின் மனம் அமைதி அடையும் என்பதனால், இப்படிச் செய்தேன், அரசே!

அரசர் : பொருத்தமற்றுப் பேசுகிறாயே! இவர்களுக்குச் சூடுபோட்டால், இறந்துபோன உன் தாயாரின் மனம் எப்படி அமைதி அடையும்?

தெனாலிராமன் : இவர்களுக்குத் தங்கமாம்பழம் கொடுத்தால், மாம்பழம் சாப்பிடாமல் இறந்துவிட்ட தங்கள் தாயாரின் மனம் அமைதி அடைவதனைப் போலத்தான், இதுவும் அரசே!

(தெனாலிராமனின் கருத்து அரசரைச் சிந்திக்க வைத்தது. தம்முடைய தவற்றை அரசர் உணர்கிறார். அரசரின் முகத்தில் புன்முறுவல் பூக்கிறது.)

அரசர் : மூடநம்பிக்கையால், ஆராய்ந்து பார்க்காமல் நான் செய்த தவறான செயலை, உன் அறிவினால் தெளிய வைத்த இராமா, உன் அறிவை மெச்சுகிறேன், நீ வாழ்க!

(சூடுபட்டவர்கள் தலைகவிழ்ந்து நிற்றல்.)

–திரை–

## இலக்கணமும் மொழித்திறனும்

1. பிழையின்றித் தமிழ் எழுதுவோம்.

சாலையில் நீங்கள் பார்க்கும் பிழைகளைத் திருத்தி எழுதுக.

**II.** குறில் நெடில் பிழைகள்

அ. சாப்படு தாயார்.

இ. பள்ளிக்குடம் அருகில் உள்ளது.

ஆ. ஒன்று வங்கினால் ஒன்று இலவாசம்.

**III.** துணையெழுத்துப் பிழைகள் (ெ, ே, ை, ா)

அ. மருத்துவமன பாகும் வழி.

இ. இங்குப் பட்டுச் சால்லித் தரப்பாடும்.

ஆ. காவலன் நாகர்.

**IV.** மயங்கொலிப் பிழைகள்

அ. இரு சக்கர வண்டிகள் பலுது பார்க்கப்படும்.

ஆ. நால்தோறும் பகல் காட்சி உன்டு.

இ. வறந்தரு விநாயகர் கோயில்.

2. எண்களை எழுத்தால் எழுதிப் பழகுக.

17 ______________________ 20 ______________________

32 ______________________ 48 ______________________

51 ______________________

3. ‘உம்’ எதற்கு ?

இராமன் சீதை இலக்குவன் காடு சென்றனர் என்பதனை, இராமனும் சீதையும் இலக்குவனும் காடு சென்றனர் என்றுதான் எழுதுவோம். ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள், பறவைகள், விலங்குகள், பொருள்கள் சேர்ந்து வரும்போது ‘உம்’ சேர்த்து எழுதுகிறோம்.

பயிற்சி (உம் சேர்த்து எழுதுக.)

1. விலங்குப் பூங்காவில் சிங்கம் புலி கரடி இருந்தன.
2. சுக்கு மிளகு திப்பிலி நல்ல மருந்துப் பொருள்கள்.
3. வீடு பள்ளிக்கூடம் பக்கத்தில் இருக்கின்றன.

## வகுப்பறைத்திறன்கள்

### 1. பேசுக.

அ. ஈ.வே.ரா. என்பதன் விரிவு என்ன ?

ஆ. பகுத்தறிவாளர் சங்கத்தைப் பெரியார் அமைத்ததன் நோக்கம் என்ன ?

இ. தங்கமாம்பழம் கொடுத்த அரசர் தற்சிந்தனை உடையவரா, பிறர்சொல் கேட்பவரா ?

ஈ. தெனாலிராமன் கதைகளைப் படிக்க உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா ?

### 2. வினா எழுப்புக.

பின்வரும் தலைப்புகள் தொடர்பாக உனக்குத் தோன்றும் வினாக்களைக் கேட்க.

அ. வீரம் ஆ. ஏற்றஇறக்கம் இ. மூடநம்பிக்கை

(எ.கா.) எது வீரம் ?

### 3. கருத்தாடல் செய்க.

அ. தெனாலிராமன் தங்கமாம்பழம் வாங்கியவர்களுக்குச் சூடுபோட்டது முறையா ?

ஆ. இராமசாமிக்குப் 'பெரியார்' என்று தாய்மார்கள் பட்டம் கொடுத்துப் பாராட்டியது ஏன் ?

### 4. எழுதுக.

**I. ஓரிரு சொற்களில் விடை தருக.**

அ. கடம் என்னும் சொல்லின் பொருள் என்ன ?

ஆ. பெரியார் தோற்றுவித்த இயக்கத்தின் பெயர் என்ன ?

இ. கேரளத்தில் நடந்த போராட்டத்தில் பெரியாருக்குக் கிடைத்த சிறப்புப் பட்டம் என்ன ?

**II. ஓரிரு தொடர்களில் விடை தருக.**

அ. கல்லெறிந்து துன்புறுத்தக் கூடாதது எது ?

ஆ. கையில் எடுத்து விளையாடக் கூடாதது எது ?

இ. எவற்றைத் தம்மிரு கண்ணாகப் பெரியார் கருதுகிறார் ?

**III. நான்கு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

அ. கடுவெளிச் சித்தர் கூறும் அறிவுரைகளில் சிறப்பான மூன்றனைக் கூறுக.

ஆ. பெரியாரும் பெண்விடுதலையும்.

### 5. படைப்புத்திறன்

தெனாலிராமன் கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக் காட்டுக.

## வாழ்க்கைத்திறன்கள்

### 1. ஏற்றுக்கொண்டாரா, மறுத்தாரா ? (வாய்மொழியாக விடை கூறுக.)

அ. எல்லாம் தலைவிதி என்று சொன்னதனைப் பெரியார் ஏற்றுக்கொண்டாரா, மறுத்தாரா ?

ஆ. மேல்சாதி, கீழ்ச்சாதி என்று பிரித்ததனைப் பெரியார் ஏற்றுக்கொண்டாரா, மறுத்தாரா ?

இ. தீண்டாமை என்னும் நெடுங்காலப் பழக்கத்தைப் பெரியார் ஏற்றுக்கொண்டாரா, மறுத்தாரா ?

ஈ. ஆண்கள் அதிகாரம் செய்வதனையும் பெண்கள் அடங்கிக் கிடப்பதனையும் பெரியார் ஏற்றுக்கொண்டாரா, மறுத்தாரா ?

எல்லா வினாக்களுக்கும் விடை, ‘மறுத்தார்’ என்பதுதானே! அப்படியானால், பெரியாரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட திறன் மறுத்தல் திறன் (Refusal Skill) ஆகும்.

### குறிப்பு

- மறுத்தல் என்பது செருக்கு இல்லை.
- மறுத்தல் என்பது பணியாமை அன்று.
- தவறான கருத்துகளை மறுத்தால்தான் நாம் வளரமுடியும்.
- துணிச்சலின் அடையாளம் தவறானவற்றை மறுப்பது.
- மூடநம்பிக்கைகளை மறுப்பது முன்னேற்றம்.
- மறுப்பது – பெண்ணுக்குப் பாதுகாப்பு.
- மறுத்தல் அரைகுறையாக இருந்து பயன் இல்லை; உறுதியாக இருத்தல் வேண்டும்.

### பயிற்சி

#### எது உறுதியான மறுப்பு ?

#### மாணவர்களுக்கு

#### அ. சூழ்நிலை

உடன்பயிலும் மாணவர் சிலர் சேர்ந்து, உனக்குப் பிடிக்காத பழக்கம் ஒன்றனைச் செய்ய அழைக்கிறார்கள். அப்பழக்கமோ, உனக்கு இல்லை. எவ்வாறு மறுப்பாய் ?

#### மறுப்பு

1. அப்பாவுக்குத் தெரிந்தால் திட்டுவார்.
2. எனக்கு அச்சமாக இருக்கிறது.
3. முடியாது! இஃது எனக்குப் பிடிக்காது.

### ஆ. சூழ்நிலை

உன் நண்பன் ஒருவன் வேறு சாதிக்காரன். அவனோடு சேரக்கூடாது என்கிறார், உன்அப்பா. அவர் எண்ணத்தை எவ்வாறு மறுப்பாய்?

மறுப்பு

1. நண்பர்களிடம் நான் சாதி பார்க்கமாட்டேன்.
2. நான் சேரவில்லை. அவன்தான் வந்து என்னுடன் சேர்கிறான்.
3. தேர்வுவரையில் சேர்ந்து இருப்போம் அப்பா! அப்புறம், அவனைச் சேர்க்கமாட்டேன்.

### இ. சூழ்நிலை

பக்கத்துத் தெரு நண்பன், உங்கள் தெருவுக்கு வந்து விளையாடுகிறான். அவனை விளையாட்டில் சேர்க்கக்கூடாது என்கிறார்கள் உன் தெரு நண்பர்கள். அதனை எவ்வாறு மறுப்பாய்?

மறுப்பு

1. பாவம், அவன் அப்பாவி!
2. இன்று ஒருநாள் மட்டும் விளையாடிவிட்டுப் போகட்டும்.
3. அவனும் என்னுடைய நண்பன். அவனோடு சேர்ந்துதான் விளையாடுவேன்.

### விடைகள்

இலக்கணமும் மொழித்திறனும்

2. எண்களை எழுத்தால் எழுதிப் பழகுக.

பதினேழு

இருபது

முப்பத்திரண்டு

நாற்பத்தெட்டு

ஐம்பத்தொன்று

## புறநானூறு

நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ;
அவலாகு ஒன்றோ; மிசையாகு ஒன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே! *

– ஔவையார்

### பொருள்

நிலமே! நீ நாடாக இருந்தால் என்ன? காடாக இருந்தால் என்ன? பள்ளமாக இருந்தால் என்ன? மேடாக இருந்தால் என்ன? எங்கே ஆண்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அங்கு நீயும் நல்லதாக இருக்கிறாய், நிலமே, நீ வாழ்க!

### சொல்பொருள்

ஒன்றோ – தொடரும் சொல். நாடாகு ஒன்றோ – நாடாக இருந்தால் என்ன அல்லது ... எனத் தொடரும். அவல் – பள்ளம்; மிசை – மேடு; ஆடவர் – ஆண்கள்; இங்கு மனிதர்களைப் பொதுவாகக் குறித்தது. நல்லை – நல்லதாக இருக்கிறாய்.

### நூல் குறிப்பு

புறநானூறு = புறம் + நான்கு + நூறு. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. இந்நூல், புலவர் பலர் இயற்றிய பாடல்களின் தொகுப்பு. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சங்க நூல்களாம். சங்க இலக்கியம் ஈராயிரம் ஆண்டுகள் பழைமை உடையது. தமிழர்களின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் நூலாகப் புறநானூறு திகழ்கிறது.

### ஆசிரியர் குறிப்பு

ஔவையார் சங்கப் புலவர்; அதியமானின் நண்பர். அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர். சங்க காலத்தில் பெண் கவிஞர் பலர் இருந்தனர். அவர்களுள் மிகுதியான பாடல்கள் பாடியவர் ஔவையார். சங்கப்பாடல் பாடிய ஔவையாரும், ஆத்திசூடி பாடிய ஔவையாரும் ஒருவர் அல்லர்; வேறு வேறானவர்.

# திண்ணையை இடித்துத் தெருவாக்கு!

உட்கார் நண்பா, நலந்தானா? – நீ
ஒதுங்கி வாழ்வது சரிதானா?
சுட்டு விரல்நீ சுருங்குவதா? – உன்
சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா?

'புல்லாய்ப் பிறந்தேன் நானென்று' – நீ
புலம்ப வேண்டாம்; நெல்கூட
புல்லின் இனத்தைச் சேர்ந்ததுதான் – அது
பூமியின் பசியைப் போக்கவில்லை?

'கடலில் நான்ஒரு துளி'யென்று – நீ
கரைந்து போவதில் பயனென்ன?
'கடலில் நான்ஒரு முத்தெ'ன்று – நீ
காட்டு; உந்தன் தலைதூக்கு!

வந்தது யாருக்கும் தெரியாது – நீ
வாழ்ந்ததை உலகம் அறியாது;
சந்ததி கூட மறந்துவிடும் – உன்
சரித்திரம் யாருக்கு நினைவுவரும்?

திண்ணை தானா உன்தேசம்? – உன்
தெருவொன் றேயா உன்னுலகம்,
திண்ணையை இடித்துத் தெருவாக்கு – உன்
தெருவை மேலும் விரிவாக்கு!

எத்தனை உயரம் இமயமலை! – அதில்
இன்னொரு சிகரம் உனதுதலை!
எத்தனை ஞானியர் பிறந்ததரை – நீ
இவர்களை விஞ்சிட என்னதடை?

பூமிப் பந்து என்னவிலை? – உன்
புகழைத் தந்து வாங்கும்விலை!
நாமிப் பொழுதே புறப்படுவோம் – வா
நல்லதை எண்ணிச் செயல்படுவோம்!

– தாராபாரதி



ஆசிரியர் குறிப்பு: கவிஞர் தாராபாரதி எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுவதில் வல்லவர். ஆசிரியராகப் பணியாற்றிய இவர், தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, தாராபாரதி கவிதைகள் முதலியன இவர்தம் நூல்களுள் சில. இவர் வாழ்ந்த காலம் 26.02.1947முதல் 13.05.2000வரை.

# தேசியம் காத்த செம்மல்



## பசும்பொன் முத்துராமலிங்கர்

பாரத நாடு பழம்பெரும் நாடு. இந்நாடு அயலவர் ஆட்சிக்கு அடிமைப் பட்டது. அடிமைத்தளை நீங்குவதற்குக் கண்ணீரும் செந்நீரும் சிந்தினர் பலர்.

தமிழகத்தில் சுப்பிரமணிய சிவா, வ.வே.சுப்பிரமணியம், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம், வாஞ்சிநாதன், திருப்பூர்க் குமரன் முதலியோர் விடுதலைக்குப் பாடுபட்டனர். இவர்களுள் ஒருவர் பசும்பொன் முத்துராமலிங்கர்.

## பிறப்பும் வளர்ப்பும்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் 1908ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாள் பிறந்தவர் முத்துராமலிங்கர். இவருடைய தந்தையார் உக்கிர பாண்டியனார், தாயார் இந்திராணி அம்மையார். இவர் அன்னையை இளமையிலே இழந்தார். தாயோடு அறுசுவை உண்டி போயிற்று. எனினும், முத்துராமலிங்கருக்கு இசுலாமியப் பெண்மணி ஒருவர் தாயாகிப் பாலூட்டி வளர்த்தார். பாட்டியாரின் அன்பணைப்பில் இவர் வளர்ந்தார். பாட்டியின் வீட்டில் வளர்ந்த நாள்களில் இவருக்குக் கற்பித்த ஆசிரியர் குறைவற வாசித்தான் என்பவர் ஆவார்.

## பள்ளிக்கல்வி

முத்துராமலிங்கர் தம் தொடக்கக் கல்வியைக் கமுதியில் உள்ள தொடக்கப்

பள்ளியில் கிறித்தவப் பாதிரியார்களிடம் பெற்றார்; பசுமலை உயர்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் பயின்றார். பின்னர், இவர் ஐக்கியக் கிறித்தவப் பள்ளியில் படித்தார்; இராமநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்தார். இவர் இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது, அந்நகரில் பிளேக் நோய் பரவியது; அதனால், இவருடைய கல்வியும் நின்றது.

## பல்துறை அறிவு

பள்ளிப்படிப்பு நின்றாலும் கேள்வியறிவையும் பட்டறிவையும் மிகுதியாகப் பெற்றார் இவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வல்லமை பெற்றார்; அம்மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றார்; சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகியனவற்றைக் கற்றறிந்தார்; இளமையிலேயே அரசியலில் ஆர்வங்கொண்டார்.

## பொதுத்தொண்டில் நாட்டம்

முத்துராமலிங்கர், இளமை முதற்கொண்டே பொதுத்தொண்டில் ஈடுபாடு காட்டினார். இவர் முப்பத்திரண்டு சிற்றூர்களில் தமக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை உழுத தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து மகிழ்ந்தார்.

இவர் நிலக்கிழார் ஒழிப்பிலும், ஆலய நுழைவுப் போராட்டத்திலும் முன்னின்ற வீரர் ஆவார்; சமபந்தி முறைக்கும் ஊக்கமளித்த பெருமகனாவார். இவர் காலத்தில் ஆங்கில அரசு, குற்றப் பரம்பரைச் சட்டம் இயற்றி மக்களுள் சிலரை ஒதுக்கி வைத்திருந்தது; அவ்வினத்தின் துயர் களைய அரும்பாடுபட்டார்; அவர்களுடைய வாழ்க்கை உயர்வுக்காகப் போராடினார்; அதனால், குற்றப் பரம்பரையிலிருந்து அவர்களை விடுதலை பெறச் செய்தார்.

தாழ்த்தப்பட்டவர்க்கென இவர் பல தொண்டுகளைச் செய்துள்ளார். இவர், "சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங் கொடுமை; ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைத்தானே தவிரச் சாதியையும் நிறத்தையும் அல்ல; சாதியும் நிறமும் அரசியலுக்கும் இல்லை; ஆன்மிகத்திற்கும் இல்லை" எனச் சாதியைப் பற்றிக் கூறியுள்ளார்.

## நாட்டுப்பற்று

முத்துராமலிங்கரின் இளமைப்பருவத்தில் இந்தியா, ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவர், தம் நாடு விடுதலை பெறவேண்டுமெனத் தணியா வேட்கை கொண்டிருந்தார்.

வங்கச் சிங்கமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைத் தம் அரசியல் வழிகாட்டியாகக் கொண்டார்; தமிழகத்தின் சிங்கமானார். இவருடைய பேச்சிலும் மூச்சிலும் விடுதலை உணர்வே மிளிர்ந்தது.

விடுதலைப்போர் கடுமையாக இருந்த நாள்களில் ஆங்கில அரசு, வடஇந்தியாவில் திலகருக்கும் தென்னிந்தியாவில் முத்துராமலிங்கருக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது. மக்களிடையே விடுதலை வேட்கையினை ஊட்டியவர் இவர். 'தேசியம் காத்த செம்மல்' எனத் திரு. வி. கலியாண சுந்தரனார் இவரைப் பாராட்டியுள்ளார்.

இவர் பங்குபெற்ற விடுதலைப் போராட்டங்கள் பல. 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்; கண்ணீரால் காத்தோம்' என்பது பாரதி வாக்கு. இதனை மெய்ப்பிக்குமாறு, இவர் பல இன்னல்களை ஏற்று விடுதலைக்கு உழைத்தார். தாம் ஈடுபடும் விடுதலைப் போராட்டப் பணிகளுக்கு இல்லறவாழ்வு இடையூறாகும் எனக் கருதினார். எனவே, திருமண வாழ்வினைத் தவிர்த்தார்.

## அரசியல் வாழ்க்கை

தம் அரசியல் வாழ்க்கையிலும் முத்துராமலிங்கர் மேன்மை பெற்றிருந்தார். தேர்தலில் போட்டியிட்ட ஐந்துமுறையும் வெற்றிவாகையே சூடினார். **1937, 1946, 1952, 1957, 1962** ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள் இவர் பெற்றிருந்த மக்கட்செல்வாக்கைக் காட்டின. தொண்டு செய்வதற்கே இவர், தம் தொகுதிக்குச் சென்றுள்ளார்; தேர்தல் விளம்பரத்திற்குச் சென்றார் இலர்.

## பலரும் போற்றும் பண்பாளர்

தெய்வீகம், தேசியம் ஆகிய இரண்டையும் இரு கண்ணாகப் போற்றியவர் பசும்பொன்னார். இவர், 'வீரம் இல்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்' என எடுத்துரைத்தவர். இவர் சமயச் சான்றோராகவும் கருதப்பட்டார். வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்த சமய மேதை எனப் பலவாறாகப் பாராட்டப் பெற்றவர். இவர் அனைத்து மதத்தினரிடத்திலும் அன்பும் பரிவும் காட்டினார்.

விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக, சத்தியசீலராக, முருகபக்தராக, ஆன்மிகப் புத்திரராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக, நீதிவழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, இந்தியத் தாயின் நன்மகனாக வாழ்ந்தவர் முத்துராமலிங்கர்.

சமயம், சமுதாயம் பற்றிய இவருடைய சிந்தனைகள் மனிதகுலத்திற்கு வழிகாட்டுவன. இறப்பு என்பது எவ்வகையிலும் வரலாம். இதனையே இவர், "பனைமரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு" எனக் கூறியுள்ளார். மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிடுகிறார்.

## மறைவு

ஐம்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இப்பெருமகனார், 1963ஆம் ஆண்டு அக்டோபர் முப்பதாம் நாளில் இயற்கை எய்தினார். அதனால், இவர் பிறந்த நாள் அனைவர் நினைவிலும் நிற்கும் நாளாயிற்று.

## நினைவுச்சின்னம்

தமிழ்நாடு அரசு, இப்பெருமகனாரைப் போற்றும்வகையில் சென்னை மாநகரில் இவருடைய உருவச்சிலையினை நிறுவியுள்ளது. அச்சிலை நிறுவப்பட்டுள்ள சாலைக்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கரின் வாழ்க்கை வரலாறு, நாட்டுப்பற்றினையும் மத நல்லிணக்கத்தையும் மனிதநேயத்தினையும் உணர்த்துவதாய் விளங்குகிறது.




### சிறப்புக் குறிப்புகள்

முத்துராமலிங்கரின் விருப்பத்திற்கு இணங்க 06. 09. 1939இல் மதுரைக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வருகை தந்தார்.

நடுவண் அரசு 1995இல் முத்துராமலிங்கருடைய அஞ்சல்தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

முத்துராமலிங்கர், தம் சொத்துகள் முழுவதையும் 17 பாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தை மட்டும் தனக்கு வைத்துக்கொண்டு மீதி 16 பாகங்களையும் 16 பேருக்கு இனாம் சாசனமாக எழுதி வைத்தார்.

# எது பெரிய உண்மை ?



அஃது ஒரு சிற்றூர்; ஒரு காலத்தில் செழிப்பாக இருந்தது. இன்று, நிலைமை மாறிப்போய்க் கிடக்கிறது; பஞ்சத்தில் வறண்டு கிடக்கிறது. அந்தச் சிற்றூரின் கோடியில் ஒரு குடிசை.

யாரோ வாழ்ந்துவிட்டுப் போன குடிசை அது. இப்போது அந்தக் குடிசை, இருவருக்கு அடைக்கலம் தந்துள்ளது. அவ்விருவரில் ஒருவர் பார்வை அற்றவர்; மற்றவர் கால் இல்லாதவர். அவர்களுக்குப் பிழைக்க வழி எதுவுமில்லை. மாலையில் கடைத்தெரு மூடும்போது அவர்கள் செல்வார்கள். மிஞ்சிய காய், கனி, உணவுப் பொருள்களை மக்கள் அவர்களுக்குத் தருவார்கள். அதனை உணவாக்கி, அவர்கள் உண்டு வாழ்ந்தனர்.

ஆனால், பஞ்சம் வந்தபிறகு, கடைத்தெரு பெரும்பாலும் அடைபட்டே கிடக்கிறது. எப்போதாவது திறந்திருந்தாலும் இந்த இருவருக்கும் எதுவும் கிடைப்பதில்லை. எனவே, இருவரும் பெரும்பாலும் பட்டினி கிடந்தனர்.

தொடர்ந்து ஐந்துநாள் எதுவும் கிடைக்காமல் பட்டினியில் இருந்தபோது, இருவரும் ஒரு முடிவுக்கு வந்தனர்.

அவ்விருவரும் தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எதனையும் செய்யத் துணிந்தனர். கண் தெரியாதவரால் எவ்வளவு தொலைவு தட்டுத்தடுமாறிப் போகமுடியும்? கால் இல்லாதவரால் ஊர்ந்து எவ்வளவு தொலைவுவரை போகமுடியும்? பக்கத்திலிருந்த வயல்கள் எல்லாம் வறண்டு கிடந்தன.

தொலைவில் இருந்தது ஊர்த்தலைவரின் தோட்டம். அவருக்கென்று தனிப்பட்ட தண்ணீர் வசதி! தோட்டம், பஞ்சத்திலும் செழித்திருந்தது. அங்கே செல்வதென்று முடிவு செய்தார்கள்.

கால் இல்லாதவரைக் கண் இழந்தவர் சுமந்து செல்லுதல் வேண்டும். கால் இல்லாதவர் வழிகாட்டவும் கண் இழந்தவர் நடத்தலும் வேண்டும். இஃது அவர்களின் ஏற்பாடு.

வழிகாட்டுவது எளியது; ஆனால், அதன்படி நடப்பது கடினம். கண் இழந்தவர் மூச்சு வாங்க நடந்தார். எப்படியோ ஊர்த்தலைவர் தோட்டத்துக்கு வந்துவிட்டனர்.

ஊருக்குள் யாரும் நெருங்க அஞ்சும் தோட்டம் அது; பிடிபட்டால், அடி உதை உறுதி!

தோட்டத்தில் பழங்களும் காய்கறிகளும் குவிந்து கிடந்தன. கால் இல்லாதவரை வரப்பிலேயே இறக்கிவிட்டு, கண் இழந்தவர் தட்டுத்தடுமாறிப் போய்க் கைக்கு அகப்பட்டதனை எடுத்து வந்தார்.

பார்வை அற்றவர், கால் இல்லாதவரைச் சுமந்துகொண்டு குடிசைக்குத் திரும்பினார்; எடுத்து வந்தவை இரண்டு மூன்று நாளுக்குப் போதும்.

நெடுநாளுக்குப் பிறகு, அன்றுதான் அவர்கள் வயிறார உண்டு உறங்கினார்கள். காலையில் எழும்போதே பெருங்கூச்சல் அவ்விருவருக்கும் கேட்டது.

ஊர் முச்சந்தியில் நின்று, தலைவர் கத்திக்கொண்டு இருந்தார், ''யாரடா, என் தோட்டத்தில் இறங்கித் திருடினவன்?''

ஊரே கைகட்டிப் பயந்து நடுங்கியது. என்ன நடக்குமோ? என்று அஞ்சியது.

யாரும் திருட்டை ஒப்புக்கொள்ள முன் வராததனால், ஊர்த்தலைவர், 'நீதி தேவதை'யின் கோவிலுக்குப் போய் மண்டியிட்டு வேண்டி, 'நீதி தேவதை'யை ஊருக்குள் அழைத்து வந்தார்.

ஒவ்வொருவரும் 'நீதி தேவதை'யின்முன் வந்து உண்மையைச் சொல்லுதல் வேண்டும். திருடியவரைத் தேவதை கண்டுபிடித்துவிடும்; பொய் சொன்னாலும் கண்டுபிடித்துவிடும்; தவறு செய்தவரின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடும்.

ஊர் மக்கள் ஒவ்வொருவராக வந்து, 'தான் திருடவில்லை' என்று வாக்குமூலம் அளித்தனர். யாரையும் 'நீதி தேவதை' கொல்லவில்லை.

இனியிருப்போர் பார்வையற்றவரும் கால் இல்லாதவரும் மட்டும்தான். முதலில் யாருக்கும் அவர்களின் நினைவு வரவில்லை; சட்டென்று நினைவுவர, ஊர்த்தலைவர் கத்தினார்.

“அந்த ரெண்டு பயல்களையும் இழுத்துட்டு வாங்கடா!”

இருவரும் தட்டுத்தடுமாறி வந்தனர். ஊர் மக்களுக்குக் கண் கலங்கியது.

நீதி தேவதையின்முன், முதலில் கண் இழந்தவர் நின்று சொன்னார்: ‘தேவதையே! நான் பிறவிக்குருடன்; எதனையும் கண்கொண்டு பார்க்க முடியாதவன். தலைவர் தோட்டத்தையும் நான் பார்த்தது இல்லை” என்றார். தேவதை அவரை எதுவும் செய்யவில்லை.

அடுத்துக் கால் இல்லாதவர் வந்தார். “அம்மா! நான் பிறவியிலேயே முடவன்; நடக்க மாட்டாதவன்; தலைவர் தோட்டத்தில் என் கால் படவே இல்லை” என்றார். கால் இல்லாதவரையும் தேவதை எதுவும் செய்யவில்லை. அப்படியானால், திருடியது யார்?

ஊர் மக்களுக்கு வியப்பு! நீதி தேவதை, கோவிலைவிட்டு வெளியே வந்தபின், குற்றவாளியைத் தண்டிக்காமல் திரும்பிப் போகுமா?

அப்போது, எதிர்பாராத நிகழ்வு ஒன்று நடந்தது. கண்ணுக்குத் தெரியாத இரு கைகள் ஊர்த்தலைவரின் கழுத்தை நெரித்தன.

ஊர்த்தலைவர் சுருண்டு விழுந்து இறந்தார்.

அப்படியானால், ஊர்த்தலைவர்தான் திருடரா? இதென்ன வியப்பு!

ஆனாலும், எல்லார்க்கும் உள்ளுக்குள் மகிழ்ச்சி!

ஊர் மக்கள் நீதி தேவதையை நெருங்கி, “ஊர்த்தலைவரைக் கொன்றது ஏன்?” என்று கேட்டனர்.

நீதி தேவதையின் குரல் உறுதியாய் எதிரொலித்தது.

“சிறிய உண்மையைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. உண்மைகளிலேயே பெரிய உண்மையைத்தான் நான் தேடுவேன். திருடர்களைவிடத் திருடத் தூண்டியவர்களையே நான் தண்டிப்பேன். ஊர் மக்கள் பட்டினி கிடக்கும்போது, மொத்த உணவுப் பொருள்களையும் குவித்து வைத்திருப்பவன்தானே பெரிய திருடன். ஆகவே, குற்றவாளியைத் தண்டித்தேன்.”

“ஆமாம். அதுவும் சரிதான்...” என்றது மக்கள் கூட்டம்.

(நாட்டுப்புறக் கதை)

## இலக்கணமும் மொழித்திறனும்

### I. ஒவ்வோர் எழுத்துக்கும் ஒரு பணி

"யார் இதனை உடைத்தது ?"

"இவன்"

–இந்த உரையாடல் நம் வீட்டுக்குள் அடிக்கடி நடக்கிறது.

அவன், அவள், அவர், இவன், இவள், இவர், அது, இது, அவை, இவை என்னும் சொற்கள், குறிப்பிட்ட மனிதரையோ பொருளையோ சுட்டிக்காட்ட உதவுகின்றன. இப்படிச் சுட்டிச்சொல்ல உதவும் எழுத்துகள் இரண்டு. அவை அ, இ.

இவற்றைச் சுட்டெழுத்துகள் என்கிறோம். பழங்காலத்தில் 'உ' என்பதும் சுட்டெழுத்துதான். 'உ' எழுத்து, பல பணிகளைச் செய்தது.

உதுக்காண் என்றால், 'சற்றுத் தொலைவில் பார்' என்பது பொருள்.

உப்பக்கம் என்றால், 'முதுகுப்பக்கம்' என்பது பொருள்.

உம்பர் என்றால், 'மேலே' என்பது பொருள்.

இப்பொழுது, சுட்டிச்சொல்ல நாம் 'உ' எழுத்தைப் பயன்படுத்துவது இல்லை.

அவன், இவன், அது, இது எனச் சுட்டுவது ஒருமுறை.

அப்பையன்

இப்பெண்

இவ்வீடு

என்றும் சுட்டுவோம். என்ன வேறுபாடு ? அவன், அவள் என்ற சுட்டுச்சொற்கள் ஆணா, பெண்ணா என்பதனையும் சுட்டிச் சொல்லிவிடுகின்றன.

அ, இ சுட்டெழுத்துகள் தனியே நின்று சுட்டும்போது, ஆண் பெண் அனைவரையும் பொதுவாகச் சுட்டுகின்றன.

இன்று அது, இது, அந்த, இந்த, அங்கு, இங்கு என்னும் சுட்டுச்சொற்களே பெருவழக்காகிவிட்டன.

அந்தப்பக்கம்

இந்தவீடு

பயிற்சி

வினாக்களுக்குச் சுட்டுச்சொற்கள் இட்டு, விடை எழுதுக.

எது உன் வீடு ?

__________ என் வீடு.

யார் உன் அண்ணன் ?

__________ என் அண்ணன்.

உன் பள்ளிக்கூடம் எங்கு உள்ளது ?

என் பள்ளிக்கூடம் __________ பக்கம் உள்ளது.

## II. எ, யா, ஆ, ஓ, ஏ.

அவன் செய்தான்.

அவனா செய்தான்.

இரண்டு தொடர்களுக்கும் என்ன வேறுபாடு ?

முதல் தொடர், ஒரு செய்தி மட்டுமே.

இரண்டாவது தொடர் ஒரு வினாவை எழுப்புகிறது.

செய்தியை வினா ஆக்கிய எழுத்து எது ?

ஆ

நாம் ஏராளமாய் வினாக்களைக் கேட்க 'ஆ' உதவுகிறது.

நீயா ? நானா ?

இன்று பள்ளியா ? விடுமுறையா ?

வினா எழுப்புவதற்கு வேறுசில எழுத்துகளும் உள்ளன.

அவை: எ, ஏ, யா, ஓ.

- விடை என்ன ?
- ஏன் வந்தாய் ?
- யார் அங்கே ?
- நீயோ செய்தாய் ?

## III. 'ஏ' எழுத்துக்கு இன்னுமொரு பணி

'ஏ' எழுத்து, வினா கேட்க மட்டும் பயன்படுவது இல்லை. அழுத்தம் கொடுத்துச் சொல்லவும் பயன்படுகிறது.

அவன் செய்தான்.

அவனே செய்தான்.

இரண்டாவது சொற்றொடரில் அழுத்தம் ஏற்படக் காரணமானது, 'ஏ'.

சீதையே சிறந்தவள்.

உணவே மருந்து.

இப்பொழுது, 'ஏ'க்கு மாற்றாகத் 'தான்'பயன்படுத்தும் வழக்கமும் இருக்கிறது.

அவன்தான் முதலில் வருவான்.

சீதைதான் சிறந்தவள்.

### பயிற்சி

**1. பின்வரும் சொற்றொடர்களை வினாச் சொற்றொடர்களாக மாற்றுக.**

அ. பாண்டியன் நல்லவன்.

ஆ. அப்துல்லா வீட்டுக்கு வந்துவிட்டார்.

இ. கடல் பெரியது.

**2. பொருத்தமான வினாச்சொற்களை எழுதுக.**

அ. என் வினாவுக்கு விடை ________ ?

ஆ. சுற்றுலாவுக்குப் பெயர் கொடுத்திருப்பவர்கள் ________ ?

இ. உனக்குப் பிடித்த பொருள் ________ ?

## IV. அகராமுதலி காணும் பயிற்சி

அகரமுதலியைப் பார்த்து எழுத்துகளின் வரிசையை நாம் அறிதல் வேண்டும். 'அ'வில் தொடங்கும் தமிழ் உயிரெழுத்துகளின் வரிசை உங்களுக்குத் தெரியும் அல்லவா? அப்படியானால், கீழ்க்காணும் சொற்களை வரிசைப்படுத்தி எழுதுக.

ஏழை, உலகம், ஔவை, அன்பு, எருது, ஆசை, ஓவியம், ஈட்டி, இளைஞன், ஒன்று, ஊக்கம், ஐம்பது.

| | |
|---|---|
| 1. அன்பு | 7. ________ |
| 2. ________ | 8. ________ |
| 3. ________ | 9. ________ |
| 4. ________ | 10. ________ |
| 5. ________ | 11. ________ |
| 6. ________ | 12. ________ |

## வகுப்பறைத்திறன்கள்

**1. பேசுக.**

தாராபாரதி கவிதையில் வரும்சொற்கள் இவை. இவற்றுள் ஒன்று குறித்து நும் கருத்தை ஐந்து மணித்துளி பேசுக.

அ. சுயபலம் ஆ. தலைதூக்கு

இ. திண்ணை ஈ. தெரு

உ. சிகரம்

**2. கருத்தாடல் செய்க.**

பார்வை அற்றவரும் கால் இல்லாதவரும் தேவதையிடம் சொன்னது உண்மையா ? பொய்யா ?

**3. எழுதுக.**

**I. ஓரிரு சொற்களில் விடை எழுதுக.**

அ. ஔவையார் பாடலில் 'அவல்' என்பதன் பொருள் என்ன ?

ஆ. ஔவையார் பாடல் இடம்பெற்ற நூலின் பெயர் என்ன ?

இ. மூன்று சுட்டெழுத்துகளில் இன்று நாம் பயன்படுத்தாத சுட்டெழுத்து எது ?

ஈ. சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து எது ?

உ. அழைத்தால் நீதி தேவதை வரும் என்பது நம்பிக்கையா ? உண்மையா ?

ஊ. முத்துராமலிங்கர் பிறந்த ஊர் எது ?

**II. ஓரிரு தொடர்களில் விடை எழுதுக.**

அ. எங்கு நிலம் நல்லதாக இருக்கும் ?

ஆ. பூமிப்பந்தின் விலை என்ன ?

இ. பெரிய திருடன் யார் ? ஏன் ?

**III. நான்கு வரிகளுக்கு மிகாமல் குறிப்பு எழுதுக.**

அ. ஔவையாரின் பாடல் கருத்து.

ஆ. தாராபாரதி கவிதையில் உனக்குப் பிடித்த கருத்துகள்.

இ. குற்றப் பரம்பரைச் சட்டமும் முத்துராமலிங்கரின் போராட்டமும்.

## 4. எழுத்து விளையாட்டுகள்

அ. ஆசிரியர் ஓர் எழுத்தைச் சொல்லுதல் வேண்டும்.

(எ.கா.) 'க' என ஆசிரியர் சொன்னதும் உடனே மாணவர்கள் 'க' வில் தொடங்கும் சொல் ஒன்றனைத் தங்கள் ஏட்டில் எழுதுதல் வேண்டும். (எ.கா.) கப்பல்.

ஒரே சொல்லை இருவரோ இரண்டுக்கும் மேற்பட்டவரோ எழுதியிருந்தால், அவர்கள் விளையாட்டிலிருந்து வெளியேறுதல் வேண்டும்.

யாரும் எழுதாத சொல்லை எழுதியவர்கள் விளையாட்டில் தொடரலாம்.

அடுத்து, ஆசிரியர் வேறு ஓர் எழுத்தைச் சொல்லுதல் வேண்டும்.

இறுதியில், வெற்றி பெறுபவரைக் கண்டுபிடிக்கலாம்.

எழுதும் சொற்கள் பெயர்ச்சொற்களாக இருத்தல் வேண்டும்.

(சிந்தித்துப் புதுப்புதுச் சொற்களை எழுதும் மாணவர்களை ஆசிரியர்கள் இவ்விளையாட்டில் அடையாளம் காணலாம்.)

ஆ. மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்தல் வேண்டும்.

குழுக்களில் மூவருக்குமேல் இருத்தல் கூடாது.

குழுக்களுக்கு அ, த, ப என்பதுபோல் எழுத்தால் பெயரிடுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ஆசிரியர் ஒரு குழுவுக்கு 'அ' என்ற எழுத்தைச் சொன்னதும், அந்தக் குழு உறுப்பினர்கள் தங்கள் குழுவின் 'அ' எழுத்தில் தொடங்கும் சொற்களை ஒரு நிமிடத்திற்குள் விரைவாகச் சொல்லுதல் வேண்டும்.

இதேபோல் ஒவ்வொரு குழுவும் சொல்லுதல் வேண்டும்.

மூன்று சுற்றுகள் வரை விளையாட்டைத் தொடருதல் வேண்டும்.

எந்தக் குழு மிகுதியான சொற்களைக் கூறியதோ அந்தக்குழு வெற்றிபெற்ற குழுவாகக் கருதப்படும்.

I. பெயர்ச்சொற்களைத்தான் கூறுதல் வேண்டும்.

II. கூறிய சொல்லை மீண்டும் கூறுதல் கூடாது.

III. அ குழு என்றால், 'அ' வில் தொடங்கும் சொற்களை மட்டுமே சொல்லுதல் வேண்டும்.

அ குழு ஆசை எனக் கூறினால் தவறு.

த குழு தாவரம் எனக் கூறினால் தவறு.

## வாழ்க்கைத்திறன்கள்

தாராபாரதியின் கவிதையில் வெளிப்பட்ட கருத்து, ‘தன்னம்பிக்கை கொள்’ என்பது. தன்னம்பிக்கை கொள்வதன் முதல்படி, ‘தன்னை அறிவது’ ஆகும். உன்னை நீ அறிந்துள்ளாயா ?

### பயிற்சி – 1

உன் திறமைகளைப் பட்டியல் இடுக.

எனக்குத் தெரியும்.

(எ.கா.) மிதிவண்டி ஓட்டத் தெரியும், அழகாக எழுதத் தெரியும்... இன்னபிற.

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________
6. ______________________________
7. ______________________________
8. ______________________________
9. ______________________________
10. ______________________________

(உன்னிடம் உள்ள சிறுசிறு திறமைகளையும் தவிராமல் குறிப்பிடுதல் வேண்டும். தேவையெனில், தனித்தாளைப் பயன்படுத்தலாம்.)

### பயிற்சி – 2

நீ கற்றுக்கொள்ள விரும்பும் திறன்களைப் பட்டியலிடுக.

நான் விரும்புகிறேன்.

(எ.கா.) மேடைப்பேச்சு, கணினி, நடிப்பு...

1. ______________________________
2. ______________________________

3. ____________________________

4. ____________________________

5. ____________________________

6. ____________________________

### பயிற்சி – 3

**உன்னிடம் உள்ள குறைகளாக நீ கருதுவதனைப் பட்டியலிடுக.**

நான் திருந்த நினைக்கிறேன்.

(எ.கா.) சட்டெனச் சினம்கொள்வது, அழுவது, ஆங்கிலம் பேசத் தயங்குவது....

1. ____________________________

2. ____________________________

3. ____________________________

4. ____________________________

5. ____________________________

6. ____________________________

### பயிற்சி – 4

**உன் எதிர்காலக் கனவுகள் என்னென்ன ? பட்டியலிடுக.**

நான் கனவு காண்கிறேன்.

(எ.கா.) சென்னையில் வேலை செய்தல் வேண்டும், அம்மாவுக்கு நகைகள் வாங்கித் தருதல் வேண்டும், மகிழுந்து வாங்குதல் வேண்டும்... என்பன போல.

1. ____________________________

2. ____________________________

3. ____________________________

4. ____________________________

5. ____________________________

# திருக்குறள்

## இனியவை கூறல்

(இனிமை பயக்கும் சொற்களைப் பேசுதல்)

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

பொருள்: அன்பு கலந்து வஞ்சனை இல்லாத மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

சொல்பொருள்: ஈரம் – அன்பு; அளைஇ – கலந்து; படிறு – வஞ்சம்; செம்பொருள் – மெய்ப்பொருள்.

2. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

பொருள்: உள்ளம் விரும்பி ஒருவருக்குக் கொடுத்து உதவுவது நல்லது; முகம் மலர்ந்து ஒருவரைப் பார்த்து இனிய சொற்களைக் கூறுதல் அதனைவிடவும் நல்லது.

சொல்பொருள்: அகன் – அகம், உள்ளம்; அமர் – விருப்பம்; அமர்ந்து – விரும்பி; முகன் – முகம்; இன்சொல் – இனியசொல்; இன்சொலன் – இனிய சொற்களைப் பேசுபவன்.

3. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினிதே அறம். *

பொருள்: முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்த இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

சொல்பொருள்: அமர்ந்து – விரும்பி; அகத்தான் ஆம் – உள்ளம் கலந்து; இன்சொலினிதே – இனிய சொற்களைப் பேசுதலே.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

பொருள்: எல்லாரிடமும் இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசுவோரிடம், துன்பம் தரும் வறுமை அணுகாது.

சொல்பொருள்: துன்புறூஉம் – துன்பம் தரும்; துவ்வாமை – வறுமை; யார் மாட்டும் – எல்லாரிடமும்; இன்புறூஉம் – இன்பம் தரும்.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. *

பொருள்: பணிவு உடையவனாகவும் இன்சொல் பேசுபவனாகவும் விளங்குவதே ஒருவனுக்கு உண்மையான அணிகலன் ஆகும். உடல் அழகுக்காக அணியும் பிற எல்லாம் உண்மையான அணிகலன்கள் ஆகா.

சொல்பொருள்: ஒருவற்கு – ஒருவனுக்கு; அணி – அழகுக்காக அணியும் நகைகள்.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். *

பொருள்: பிறர்க்கு நன்மையானவற்றை விரும்பி இனிமை உடைய சொற்களைச் சொன்னால், பாவங்கள் தேய்ந்து குறையும்; அறம் வளர்ந்து பெருகும்.

சொல்பொருள்: அல்லவை – பாவம்; நாடி – விரும்பி.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பொருள்: பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து, நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள், வழங்குவோனுக்கும் இன்பம் தந்து நன்மை பயக்கும்.

சொல்பொருள்: நயன்ஈன்று – நல்ல பயன்களைத் தந்து; நன்றி – நன்மை; பயக்கும் – கொடுக்கும்; தலைப்பிரியாச் சொல் – நீங்காத சொற்கள்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். *

பொருள்: பிறர்க்குத் துன்பம் விளைக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுபிறவிக்கும் இப்பிறவிக்கும் வழங்குவோனுக்கு இன்பம் தரும்.

சொல்பொருள்: சிறுமை – துன்பம்; மறுமை – மறுபிறவி; இம்மை – இப்பிறவி.

9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பொருள்: இனிய சொற்கள் இன்பம் உண்டாக்குவதனைக் கண்டபின்னும், ஒருவன் கடுஞ்சொற்களைப் பேசுவது ஏனோ ?

சொல்பொருள்: இனிதீன்றல் – இனிது + ஈன்றல்; ஈன்றல் – தருதல், உண்டாக்குதல்; வன்சொல் – கடுஞ்சொல்; எவன்கொலோ – ஏனோ ?

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. *

பொருள்: இன்பம் தரும் இனிய சொற்கள் இருக்கும்போது, துன்பம் தரும் கடுஞ்சொற்களைப் பேசுவது, கனிகள் இருக்கும்போது காய்களை விரும்பி உண்பதனைப் போன்றது.

சொல்பொருள்: கவர்தல் – நுகர்தல்; அற்று – அதுபோன்றது. (முன்பு படித்தது நினைவில் இருக்கிறதா ? ‘வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்து அற்று’.)

# செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் – அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி (செய்யும்...)

பயிரை வளர்த்தால் பலனாகும் – அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் – இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குல மானமுண்டு
வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம் (செய்யும்...)

காயும் ஒருநாள் கனியாகும் – நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் – நம்
கனவும் நினைவும் நிலையாகும் – உடல்
வாடினாலும் பசி மீறினாலும் – வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம். (செய்யும்...)

– பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்



ஆசிரியர் குறிப்பு

'மக்கள் கவிஞர்' என அழைக்கப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கவிதைகளை இயற்றியவர்; திரையிசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். உழைக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடைமைச் சிந்தனைகளையும் தம்முடைய பாடல்கள்வழிப் பரவலாக்கினார். பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் ஊரில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் **13.04.1930**முதல் **08.10. 1959** வரை.



# கல்லிலே கலைவண்ணம்

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். இது கல்லில் செதுக்கிய சிற்பம். உற்றுநோக்கினால்,இந்தச்சிற்பத்தில்உள்ளவியப்புறுஉருவங்கள்வெளிப்படும். ம்ம்... தெரிகிறதா ? எங்கே சொல்லுங்கள் பார்ப்போம். இடப்பக்கத்திலிருந்து பார்த்தால், காளையின் உருவம் தெரிகிறது. வலப்பக்கத்திலிருந்து பார்த்தால், யானையின் உருவம் தெரிகிறது.

நன்றாகச் சொன்னீர்கள். எவ்வளவு அருமையாக இருக்கிறது ? கலைஞர்கள் இதுபோன்று பல சிற்பங்களைச் செதுக்கியிருக்கிறார்கள். அவை எங்கே இருக்கின்றன என்றுதானே கேட்கிறீர்கள் ! வாருங்கள்... சொல்கிறேன்.

காவிரி பாயும் சோழவள நாடு. அது கலைகளின் விளைநிலம். வியக்கவைக்கும் கட்டடக்கலையும் சிற்பக்கலையும் கொழிக்கும் ஊர் கும்பகோணம். இவ்வூரின் தென்புறம் அரிசிலாறு * பாய்கிறது. இதன் தென்கரையில் தாராசுரம் என்னும் ஊர் அமைந்துள்ளது. இங்கேதான் ஐராவதீசுவரர் கோவில் உள்ளது. இது ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இரண்டாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது.

நூறு கோவில்களுக்குச் சென்று கண்ட சிற்பங்களின் பேரழகைப் பார்த்து மகிழ்ந்த அனுபவத்தை இந்த ஒரே கோவில் நமக்குத் தருகிறது. இவ்வளாகத்தில் எங்கும் சிற்பமயம். இக்கோவில் சிற்பங்கள் நம்மைச் சுண்டியிழுக்கும்.

* இக்காலத்தில் அரசலாறு என வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு சிற்பத்திலும் ஒரு கதையோ காவியமோ பொதிந்திருக்கிறது. முப்புரம் எரித்தவன் (திரிபுராந்தகன்) கதை ஒரு சிற்பம்; யானையைக் கொன்று அதன் தோலைத் தன்மீது உடுத்திக்கொள்ளும் யானை உரி போர்த்தவர் (கஜசம்ஹார மூர்த்தி) கதை இன்னொரு சிற்பம்; அடிமுடி தேடவைக்கும் அண்ணாமலையார் (லிங்கோத்பவர்) கதை மற்றொரு சிற்பம். இப்படிக் கதைபொதிந்த சிற்பங்கள் பல உள்ளன.

இராமாயண, மகாபாரதக் கதைகள், இரதி மன்மதன் கதைகள், சிவபுராணக் கதைகள் என எண்ணில் அடங்காத கதைகள் நம்மை ஈர்க்கின்றன. அவற்றுடன் பரதநாட்டிய அடவுகளும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

அன்னம் பாலிக்கும் அற்புத அன்னபூரணி, இன்றைய கண்தானத்துக்கு அன்றே எடுத்துக் காட்டாக அமைந்த கண்ணப்பர், பறவை, விலங்கு, மனிதன் எனக் கலவையாய் அமைந்த ஓருடல் சிற்பங்கள் என, இக்கோவில் சிற்பங்கள் தமிழகச் சிற்பக்கலைச் சிறப்புக்கு ஒரு சோற்றுப்பதமாய் விளங்குகின்றன.

ஒவ்வொரு தூணின் நான்கு பட்டைகளிலும் அமைந்த சிற்றோவியங்கள் அரிதும் அழகுமாய் ஆனவை. கோவிலின் நுழைவாயிலில் அமைந்த ஏழு கருங்கற் படிகள் ‘சரிகமபதநி’ என்னும் ஏழு நாதப்படிகளாக வடிக்கப்பட்டுள்ளன. சோழ மண்டலத்துக்குள் நுழைந்தாலே, எங்கும் இசையொலி, ‘தாம்தரிகிட தீம்தரிகிட’ என்னும் மத்தள லய ஒலி, வீணையின் மீட்டொலி, புல்லாங்குழலின் கான ஒலி, நாகசுர நல்லொலி... என இசைமழையில் நனையும் அனுபவம் நமக்குக் கிடைக்கிறது.

தாராசுரம் கோவிலின் கூம்பிய விமானத் தோற்றமும், அதற்குக் கீழே இருபுறமும் யானைகளும் குதிரைகளும் பூட்டிய இரதம்போல் அமைந்த மண்டபமும் வான்வெளி இரகசியத்தைக் காட்டுவதாகக் கார்ல் சேகன் (Carl Sagon) என்ற வானவியல் அறிஞர் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.



சங்கீதக் கருங்கற்படிகள்



ஓருடல் சிற்பங்கள்

அதிபத்தர்,அமர்நீதியார்,இயற்பகையார்,இசைஞானியார்,எறிபத்தர்,ஏனாதிநாயனார் முதலிய அறுபத்துமூன்று நாயன்மார்களின் கதைகளைக் கூறும் கல்வெட்டு எழுத்துத் தலைப்புகளுடன் கூடிய புடைப்புச் சிற்பங்கள் கண்ணுக்குப் பெருவிருந்தாக உள்ளன.

தஞ்சை அரண்மனைக்குச் சொந்தமானது இக்கோவில். அழகு வாய்ந்த இதன் பழைமையைத் தற்போது மத்தியத் தொல்பொருள் துறையினர் பாதுகாத்து வருகின்றனர். இதனை மரபு அடையாளச் சின்னமாக யுனெஸ்கோ (UNESCO) அமைப்பு அறிவித்துள்ளது. ஒற்றைவரியில் இதனைக் 'கலைகளின் புகலிடம்' எனலாம்.

### செயல்பாடு – 1

கோடைக்காலத்தில் குளங்களோ கண்மாய்களோ ஆறுகளோ நீர் வற்றிய நிலையில் களிமண் எடுத்துப் பொம்மைகள் செய்யும் செயல் மகிழ்ச்சியானது. இந்த மகிழ்ச்சி உங்களுக்கு ஏற்பட்டது உண்டா? மரப்பாச்சிப் பொம்மைகளின் இடத்தை இன்று நெகிழிப் (Plastic) பொம்மைகள் பிடித்துக்கொண்டன. அட்டைகள், நெட்டிகள் (தெர்மகூல்), தீப்பெட்டிகள், மரக்கட்டைகள், களிமண், பயன்பாடற்ற காகிதத்தில் செய்யப்பட்ட காகிதக்கூழ் ஆகியவற்றால் அழகிய உருவங்கள் செய்து பார்க்கலாம்; கண்களுக்கு விருந்து அளிக்கலாம்; படைப்பாக்கத்தை வளர்க்கலாம்.



### செயல்பாடு – 2

பழங்காலச் சிற்பக்கலைகளைப் பற்றிக் களப்பயணம் சென்று அறிந்துகொள்ளும் ஆவல் உண்டா? திருவாரூர், தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், மதுரை, திருவரங்கம், மாமல்லபுரம் முதலிய ஊர்களில் உள்ள அரண்மனைகள், வரலாற்று ஆய்வகங்கள், அருங்காட்சியகங்கள், தொல்பொருள்துறைக் காப்பாட்சியகங்கள் ஆகியவற்றைக் காணப் பயணம் மேற்கொள்ளலாம். இதேபோல் திருமயம், தரங்கம்பாடி, செஞ்சி, தீபங்குடி(சமணர் கோவில்) ஆகிய ஊர்களுக்கும், பௌத்தத் தலங்களுக்கும் பயணம் செய்யலாமே! கிறித்தவ, இசுலாமியக் கட்டடக் கலைகள் ஆகியன குறித்து அறியவும் பயணம் தொடரலாமே!

# சாதனைப் பெண்மணி மேரிகியூரி



கியூரி அம்மையார் போலந்து நாட்டில் 1867ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய பெற்றோருக்கு ஐந்து குழந்தைகள். இவரே அவர்களுள் இளையவர்.

இவர்தம் தந்தை ஓர் அறிவியல் ஆசிரியர். ஆனாலும் குடும்பத்தில் வறுமை. தமக்கை மருத்துவக் கல்வி பயில விரும்பினார். ஆனால், போதிய வசதி இல்லை. இளையவள் மேரி, குழந்தைகளுக்குச் சிறப்புப் பாடம் சொல்லிக் கொடுத்தார்; செவிலிபோல் பணிவிடைகள் செய்தார். அதன்மூலம் பொருள் ஈட்டித் தம் தமக்கை கல்வி பயில உதவினார்.

மேரி, அறிவியல் கல்வி கற்க விரும்பினார். ஆனால், பெண்ணுக்கு அறிவியல் கல்வி தேவை இல்லை. சமையல் கலையே போதும் எனக் கல்லூரி நிருவாகம் கூறியது. அதனை ஏற்க மேரி மறுத்தார்.

மேரி, பிரான்சு நாடு சென்று, கல்லூரியில் சேர்ந்தார். தம் வாழ்வின் இலக்கான அறிவியல் கல்வியைப் பயின்றார். தன்னுடைய வறுமையை யாரும் அறியாவண்ணம் கல்லூரி நாள்களைக் கழித்தார். ஒருமுறை மூன்று நாள் உணவு உட்கொள்ளாததனால் மயக்கம் அடைந்து கீழே விழுந்தார். அவரை ஆய்வு செய்த மருத்துவர் நல்ல உணவும் ஓய்வும் தரவேண்டும் எனக் கூறியபோது, உடன்பயிலும் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்து, பலவகையிலும் உதவினர்.

அறிவியல் மேதை பியூரிகியூரியை, மேரி திருமணம் செய்துகொண்டார். அவருடன் சேர்ந்து அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். மணவாழ்க்கையில் மனநிறைவுடன் ஒருபெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். ஆனால், ஒருவாரம் மட்டுமே ஓய்வெடுத்துக்கொண்டு தம்முடைய அறிவியல் ஆராய்ச்சிப் பணிக்குத் திரும்பினார்.

தம்முடைய வருவாயில் பெரும்பகுதியை ஆராய்ச்சிக்குச் செலவிட்டதனால், வீட்டுவேலைகளைக் கணவன்–மனைவி இருவருமே சேர்ந்து செய்தனர்; எளிமையாகவே வாழ்ந்தனர்.

இடைவிடாது செய்த ஆராய்ச்சியின் பயனாகக் கணவன்–மனைவிஇருவரும் முதலில் பொலோனியம் என்னும் தனிமப்பொருளைக் கண்டுபிடித்தனர். அதன் பிறகு, இரண்டு ஆண்டுகள் இடைவிடாது ஆராய்ச்சி செய்து ரேடியம் என்னும் தனிமப் பொருளைக் கண்டுபிடித்தனர். இவ்விரண்டு அரிய கண்டுபிடிப்புகளுக்காக மேரிகியூரிக்கும், அவர் கணவரான பியூரிகியூரிக்கும் 1903ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ரேடியத்தின் உதவியால் மனித குலத்திற்குக் கேடு விளைவிக்கும் புற்றுநோய் மற்றும் பலவகைத் தோல்நோய்களைக் குணமாக்கலாம் எனக் கண்டறிந்தனர்.



அம்மையார், தம்முடைய உடல்நலத்தைப் பணயம் வைத்துக் கண்டுபிடித்த ரேடியத்தைத் தனியார் நிறுவனம் ஒன்று 50 இலட்சம் டாலர்களுக்கு விலைக்கு வாங்க முன்வந்தது. ஆனால், தம்முடைய கண்டுபிடிப்பை அறிவியல் உலகத்திற்குக் கொடையாக வழங்கினார் கியூரி.

அவருடைய கணவர் எதிர்பாராதவிதமாக விபத்தில் இறந்தபிறகு, பிரெஞ்சு அரசு, அம்மையாருக்கும் அவருடைய பெண் குழந்தைகள் இருவருக்கும் பொருளுதவி அளிக்க முன்வந்தது. ஆனாலும் மேரி, அதனை ஏற்க மறுத்தார்.

அதன்பிறகு, அவருடைய கணவர் ஆற்றிய பேராசிரியர் பணி அவருக்கு அளிக்கப்பட்டது. அப்பணியை அவர் சிறப்பாகச் செய்தார். அவர் மேன்மேலும் ஆராய்ச்சிகள் பல செய்து ரேடியத்தின் அணு எடையைக் கண்டுபிடித்தார். அவருக்கு இரண்டாவது முறையாக 1911 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அதன்பிறகு, அவர் பல நாட்டினராலும் அழைக்கப்பட்டுப் பாராட்டப்பட்டார்; பல பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றார்.

செயற்கரிய செய்த கியூரி அம்மையார் 1934ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

கியூரி அம்மையாருக்குப்பின், அவர் மகள் ஐரினும் மருமகன் ஜோலியட் கியூரியும் தொடர்ந்து அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் செயற்கைக் கதிர்வீச்சுப் பற்றிய வேதியியல் ஆராய்ச்சிக்காக 1935ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று நோபல் பரிசு பெற்ற இச்சாதனை இன்றுவரை எந்தக் குடும்பத்தினராலும் முறியடிக்கப்படவில்லை.

**செயல்பாடு**

பொலோனியம், ரேடியம், அணுஎடை, செயற்கைக் கதிர்வீச்சு முதலிய அறிவியல் செய்திகள் குறித்து, அறிவியல் ஆசிரியரிடம் கேட்டு அறிந்துகொள்க.

# இலக்கணமும் மொழித்திறனும்

## 1. செய்யுள் மொழி

எவன் கொலோ ?

திருக்குறளில் இடம்பெறும் இச்சொற்கள் தரும் பொருள் என்ன ? ஏனோ ? என்ன பயன்கருதியோ ? என்பது பொருள். செய்யுளில் ஓசைக்காகவும் அழுத்தம் தருவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் – கொல்.

இது பெரும்பாலும் ஐயப்பொருளில் வரும்.

ஒரு பெண்ணைப் பார்த்து, 'மான் கொல் ? மயில் கொல் ?' என்றால், இவள் மானோ மயிலோ எனக் கூறுவதாகப் பொருள்.

இது செய்யுள் வழக்கு.

## 2. அளபெடை

உப்பு... உப்பு... என்று யாராவது உப்பு விற்கிறார்களா ?

உப்பூஉஉஉ... என்று கூவுவார்கள். அல்லது உப்போஒஒஒ.... உப்பு என்பார்கள். இதேபோல் மாஅஅஅம்பழம் என்று கூவி விற்கிறார்கள். இவ்வாறு நீட்டி ஒலிப்பதனை அளபெடை என்பர் இலக்கணத்தார்.

உப்பூஉஉஉ – என்பது உயிர் அளபெடை. ஏனென்றால், உ என்னும் உயிர் எழுத்து நீண்டு ஒலித்தது.

பொய்ய்ய்... என்பது ஒற்றளபெடை. ஏனென்றால், ய் என்னும் மெய் எழுத்து (ஒற்றெழுத்து) நீண்டு ஒலித்தது.

உங்கள் பேச்சிலிருந்து நீங்களும் சில எடுத்துக்காட்டுகள் தரலாமே !

## 3. பிழையும் திருத்தமும்

கீழே காணப்படுபவை பிழையான சொற்றொடர்கள்.

அ. சிங்கம் வந்தான்.

ஆ. இராமன் அழுதாள்.

இ. பறவைகள் பாடியது.

ஈ. அவன் வந்தேன்.

ஏனெனில், இச்சொற்றொடர்களில் உள்ள வினைச்சொற்கள் பிழையானவை.

எப்படி இருந்தால் முறையாக இருக்கும் ?

அ. வந்தது ஆ. அழுதான் இ. பாடின ஈ. வந்தான்

பிழைகள் நேராமல் இருக்க நாம் திணை, பால், எண், இடம் பற்றி அறிதல் வேண்டும்.

## 4. திணை

உயர்திணை, அஃறிணை எனத் திணை இருவகைப்படும்.

மனிதர் உயர்திணை ஆவர்.

மனிதர் அல்லாத உயிருள்ளவையும் உயிரற்றவையும் அஃறிணை ஆகும். பெயர்ச்சொற்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் எனப் பிரிக்கிறோம். வீரன், அம்மா, நடிகன், கண்ணகி – உயர்திணைப் பெயர்கள். பூ, மரம், பூனை, குருவி – அஃறிணைப் பெயர்கள்.

பயிற்சி

கீழுள்ள பத்தியில் வண்ணமிடப்பட்ட சொற்களில் உயர்திணைப் பெயர்ச்சொற்களையும் அஃறிணைப் பெயர்ச்சொற்களையும் எடுத்து எழுதுக.

“அரசன் வேட்டையாடுவதற்குக் காடு சென்றான். அவனுடன் வீரர்களும் சென்றார்கள்; பணியாளர்கள் சிலரும் சென்றார்கள். காட்டில் மான்கள் ஓடின; மலைப்பாம்பு ஊர்ந்தது. திடீரென்று காற்று கடுமையாக வீசியது; மரங்கள் முறிந்தன. அதனைப் பார்த்துக் குரங்குகள் அச்சம் கொண்டன; ஆந்தைகள் அலறின. அரண்மனையில் அரசி கவலையுடன் இருந்தாள். அமைச்சர், தளபதி ஆகியோரும் கவலையுடன் இருந்தனர்.

## 5. பால்

திணை என்பது பெரும் பிரிவு. அஃது உயர்திணை, அஃறிணை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

பால் என்பது மற்றொருவகைப் பிரிவு. பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் ஐந்து பால்களாகப் பிரிக்கிறோம்.

அவை:

| | | |
|---|---|---|
| ஆண்பால் | – | அவன், அண்ணன் |
| பெண்பால் | – | அவள், அரசி |
| பலர்பால் | – | அவர்கள், இளைஞர்கள் |
| ஒன்றன்பால் | – | அது, குதிரை |
| பலவின்பால் | – | அவை, மாடுகள் |

ஆண்பால் பெயர்ச்சொல் ஆண்பால் வினைமுடிவையே பெறும்.

அவன் வந்தான்.

(பெயர்) (வினை)

அவன் வந்தாள் என்றோ, அவன் வந்தார் என்றோ எழுதுவது பிழையாகும்.

இதேபோல்தான், பிற பால் சொற்களையும் எழுதுதல் வேண்டும்.

| பெயர் | – | வினை |
|---|---|---|
| அவள் | – | வந்தாள் |
| அவர்கள் | – | வந்தார்கள் |
| அது | – | வந்தது |
| அவை | – | வந்தன |

பயிற்சி

பின்வரும் உரைப்பகுதியில் உள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டிப் பிழைதிருத்தி எழுதுக.

“தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தது. பறிப்பதற்குக் கமலா வந்தாள். கூடவே இராணியும் வேணியும் வந்தாள். அப்போது தோட்டத்தில் ஒரு பாம்பு ஓடின. கமலா கத்தினான். இராணி மட்டும் பயமின்றிப் பாம்பை நெருங்கினார்கள்.”

## 6. அகரமுதலியைப் பார்ப்போம்

அகரமுதலியில் உயிரெழுத்து பெறும் வரிசையை அறிந்தோம்.

உயிரெழுத்து வரிசை : அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

இப்பொழுது மெய்யெழுத்து வரிசைபற்றி அறிவோம். முதலில் மெய்யெழுத்துகளை எழுதுவோம்.

மெய்யெழுத்து வரிசை : க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க் | ங் | ய் |
| ச் | ஞ் | ர் |
| ட் | ண் | ல் |
| த் | ந் | வ் |
| ப் | ம் | ழ் |
| ற் | ன் | ள் |

பதினெட்டு மெய்யெழுத்துகளும் அகரமுதலி வரிசையில் இவ்வாறு வந்துள்ளன.

வல்லெழுத்தைத் தொடர்ந்து அதன் இனமான மெல்லெழுத்து வருவது நோக்கத்தக்கது. அடுத்து, இடையின எழுத்துகள் வருகின்றன.

ற், ன் மட்டும் இறுதியில் வருகின்றன.

அப்படியானால், அகரமுதலியில் அக்காள் என்னும் சொல் முதலில் வருமா ? அண்ணன் என்னும் சொல் முதலில் வருமா ? மெய்யெழுத்து வரிசையைப் பாருங்கள்.

அக்காள்தான் முதலில் வரும்.

அம்மா, அப்பா, அண்ணி, அங்காடி, அன்னம் என்னும் சொற்களை அகரமுதலி வரிசையில் எழுதுவதானால் அங்காடி, அண்ணி, அப்பா, அம்மா, அன்னம் என்றுதான் எழுதுதல் வேண்டும்.

பயிற்சி

நீங்களும் முயற்சி செய்யலாம்.

அகரமுதலி வரிசையில் எழுதுக.

ஆமை, ஆசிரியர், ஆண்டு, ஆடு, ஆத்திரம், ஆயிரம், ஆவணி, ஆலை, ஆறு, ஆர்வம்.

## வகுப்பறைத்திறன்கள்

**1. பேசுக.**

பட்டுக்கோட்டையார் பாடலில் இடம்பெற்ற சொற்களை மையமாக வைத்து ஐந்து மணித்துளி பேசுக.

அ. வேர்வை ஆ. வருங்காலம் இ. சாமி ஈ. பூமி

**2. வினா எழுப்புக.**

பின்வரும் பொருள்களை மையமாக வைத்து, உனக்குத் தோன்றும் வினாக்களை எழுப்புக.

அ. பணிவு ஆ. கடுஞ்சொல் இ. கனவு ஈ. கல்

**3. கலந்துரையாடுக.**

அ. இனிய சொல் பேசுவோரிடம் வறுமை அணுகாது – உண்மையா ?

ஆ. செய்யும் தொழிலே தெய்வம் – இந்தக் கொள்கை முறையானதா ?

**4. எழுதுக.**

**I. ஓரிரு சொற்களில் விடை எழுதுக.**

அ. எந்த ஆற்றின் தென்கரையில் தாராசுரம் உள்ளது ?

ஆ. ஐராவதீசுவரர் கோவிலைக் கட்டியவர் யார் ?

இ. கியூரி அம்மையார் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

ஈ. கியூரி அம்மையார், தம் கணவருடன் சேர்ந்து முதலில் கண்டுபிடித்த பொருளின் பெயர் என்ன ?

உ. கியூரி அம்மையார் குடும்பம் எத்தனை நோபல் பரிசு பெற்றது ?

ஊ. துவ்வாமை என்னும் சொல்லின் பொருள் யாது ?

எ. எப்போது அறம் பெருகும் ?

**II. ஓரிரு தொடர்களில் விடை எழுதுக.**

அ. உள்ளம் விரும்பிக் கொடுப்பதனைவிட சிறந்தது எது ?

ஆ. தாராசுரம் கோவிலின் விமானமும் மண்டபமும் எதனைக் காட்டுவதாகக் ‘கார்ல் சேகன்’ கூறுகிறார் ?

இ. ரேடியத்தின் உதவியால் மனிதகுலத்திற்குக் கிடைத்த பயன் என்ன ?

ஈ. ஒருவருக்கு உண்மையான அணிகலன்களாகத் திகழ்வன எவை ?

III. நான்கு வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

அ. ஏன் இன்சொல் பேசுதல் வேண்டும்?

ஆ. கியூரி அம்மையாரின் சாதனை.

IV. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

தலைப்பு : உடல்நலம் காப்போம்.

1. உடல் தூய்மைப் பழக்கங்கள்
   - அ. சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் கை, வாய் கழுவுதல்.
   - ஆ. காலையும் இரவும் பல் துலக்குதல்.
   - இ. நகம் வெட்டுதல்.
   - ஈ. நாள்தோறும் குளித்தல்.
   - உ. அழுக்கற்ற உடை உடுத்துதல்.
2. உணவுப் பழக்கங்கள்
   - அ. பல்லைக் கெடுக்கும் பொருள்களைத் தவிர்த்தல்.
   - ஆ. கீரை, காய்கறிகளை நாள்தோறும் உணவில் சேர்த்துக்கொள்ளல்.
   - இ. ஈ மொய்த்த, தூசி படிந்த பொருள்கள் வாங்குவதனைத் தவிர்த்தல்.
3. விளையாட்டு
   - அ. மாலையில் நாள்தோறும் விளையாடுதல்.
   - ஆ. நடத்தல், மிதிவண்டி ஓட்டுதல்.
   - இ. வெகுநேரம் தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதனைத் தவிர்த்தல்.

## வாழ்க்கைத்திறன்கள்

### 1. பேச்சுத்திறன் (இனியவை கூறல்)

வெற்றிக்கு அடிப்படையானது பேச்சுத்திறன். பேச்சுத்திறன் பல வழிகளில் வெளிப்படும். இனிமையாகப் பேசுவது ஒருவழி. இனிய பேச்சு – நமக்கும் வெற்றி தரும்; பிறருக்கும் வெற்றி தரும்.

அ. பின்வரும் சொற்களில் பிறரை முகம் மலர வைக்கும் சொற்களைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. ஆகா! | 4. நன்றி | 7. சகிக்கவில்லை |
| 2. அட, ச்சே! | 5. நன்று | 8. அருமை |
| 3. ஓ! | 6. சுமார் | 9. மோசம் |

ஆ. நாற்காலிமீது ஏறிநின்று கீழே குதித்துக்காட்டும் சிறுவன், அப்பாவிடம் எதிர்பார்க்கும் பேச்சு எது?

அ. டேய், எச்சரிக்கை! ஆ. அருமை அருமை!

ஆ. நாற்காலியை உடைத்துவிடாதே!

இ. அடுத்து எப்போது பார்க்கலாம் என்று உறவினர் கேட்கிறார். யார் பேசுவது இனிய பேச்சு ?

அ. பிழைச்சுக் கிடந்தால் பார்க்கலாம் !

ஆ. நாம நினைக்கிறது எங்கே நடக்குது ?

இ. கட்டாயம் சீக்கிரம் சந்திப்போம்.

ஈ. இனிய பேச்சுக்கும் பாசாங்குப் பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. இனியது எது ? பாசாங்கு எது ? கண்டறிக.

அ. உன் பேச்சு சிறப்பாக இருந்தது.

ஆ. உன்னைப்போலப் பேசுவதற்கு உலகத்தில் ஆளே இல்லை.

இ. போட்டியில் நீ வெற்றி பெறுவாய்.

ஈ. உன்னோடு போட்டி போட்டால் இமயமலையே தூள்தூள் ஆகும்.

## 2. எழுதுக.

இரண்டு ரூபாய்க்கு ஒருபொருள் வாங்குதல் வேண்டும். கடைக்காரரிடம் இருபது ரூபாய்த்தாளை நீட்டுகிறாய். கடைக்காரர் முகம் சுளித்துச் சில்லறை இல்லையா எனக் கேட்கிறார். கடைக்காரரின் மனத்தை மாற்றும் இனிய விடை எது ?

## 3. இரசித்தல்

சிற்பங்களைப் பார்த்து இரசித்தீர்களா ?

படைப்பது ஒரு கலை.

இரசிப்பது மற்றொரு கலை.

இரசிக்கத் தெரிந்தவர்கள் மகிழ்ச்சி மிக்கவர்களாக இருக்கிறார்கள். திரைப்படங்களையும், திரைப்படப் பாடல்களையும் இரசிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அது மட்டுமா ? இசை, ஓவியம், சிற்பம் என இரசிப்பதற்குப் பல கலைகள் இருக்கின்றன. வானவில், விண்மீன், முழுநிலவு எனப் பல இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன.

அ. எத்தனைமுறை பார்த்தாலும் உனக்குச் சலிக்காத இயற்கைக்காட்சி எது ? அதுபற்றி மூன்று வரிகள் எழுதுக.

ஆ. சின்னஞ்சிறு குன்றில் அல்லது மலையில் ஏறிப் பரந்த காட்சிகளைக் கண்ட அனுபவம் உண்டா ? இருந்தால், அது குறித்து மூன்று வரிகள் எழுதுக.


இ. நம் பாடப்பகுதியில் உள்ள சிற்பக்காட்சிகளில் உன்னைக் கவர்ந்த சிற்பக்காட்சி எது ? ஏன் ?

# தனிப்பாடல்

* கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா ?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித் தானா ?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியில்தான் பண்ணி னானே. 1

வணக்கம்வரும் சிலநேரம் குமர கண்ட
வலிப்புவரும் சிலநேரம் வலியச் செய்யக்
கணக்குவரும் சிலநேரம் வேட்டை நாய்போல்
கடிக்கவரும் சிலநேரம் கயவர்க் கெல்லாம்
இணக்கவரும் படிதமிழைப் பாடிப் பாடி
எத்தனைநாள் திரிந்துதிரிந்து உழல்வேன் ஐயா !
குணக்கடலே அருட்கடலே அசுர ரான
குரைகடலை வென்றபரங் குன்று ளானே ! 2 *

– இராமச்சந்திரக் கவிராயர்



### பாடல் 1 – பொருள்

கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிக்க இறைவன் சொல்லித் தரவில்லையே! பொன்பொருள் கொடுத்து என்னைக் காக்கவும் இல்லையே! இதற்காக யாரைக் குற்றம் சொல்லி என்ன பயன்? எங்கும், எல்லாரிடமும் பல்லைக்காட்டிப் பிழைக்குமாறு இறைவன் என்னைப் படைத்துவிட்டானே!

### சொல்பொருள்

| | | |
|---|---|---|
| இரட்சித்தானா? | – | காப்பாற்றினானா? |
| அல்லைத்தான் | – | அதுவும் அல்லாமல் |
| ஆரைத்தான் | – | யாரைத்தான் |
| பதுமத்தான் | – | தாமரையில் உள்ள பிரமன் |
| புவி | – | உலகம் |

### பாடல் 2 – பொருள்

பாட்டுப் பாடிப் பரிசு வாங்கப் பணம் படைத்தவர்களைப் பார்க்கப் போகும்போது, சில நேரம் அவர்கள் வணக்கம் சொல்லி வரவேற்கிறார்கள். சிலநேரம் என்னைக் கண்டதும் அவர்களுக்குக் குமரகண்ட வலிப்பு வருகிறது. முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள். சில நேரம், என்னை ஏறிட்டும் பார்க்காமல் வேண்டுமென்றே கணக்குப் புத்தகத்தைப் புரட்டுகிறார்கள். சிலநேரம் நாய்களைப்போலக் கடிக்க வருகிறார்கள். இப்படிப்பட்ட கயவர்களிடம் தமிழைப் பாடிப்பாடிப் பரிசு வாங்க இன்னும் எத்தனை நாள், நான் திரிந்து அலைவேன்? ஒலிக்கும் கடலாக இருந்த அரக்கர்களை வென்றவனே! திருப்பரங் குன்றத்தில் விளங்கும் முருகா! கூறு.

### சொல்பொருள்

| | | |
|---|---|---|
| குமரகண்ட வலிப்பு | – | ஒருவகை வலிப்புநோய் |
| இணக்கவரும்படி | – | அவர்கள் மனம் கனியும்படி |
| குணக்கடலே! அருட்கடலே! | – | முருகனை இவ்வாறு அழைக்கிறார் |
| குரைகடல் | – | ஒலிக்கும் கடல்; அசுரர்கள் கடல் வடிவில் வந்தார்கள் என்பது கதை |
| பரங்குன்றுளான் | – | திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன் |

### நூல்குறிப்பு

புலவர் பலர், அவ்வப்போது பாடிய பல பாடல்கள் தொகுக்கப்படாமல் இருந்தன. அவற்றைத் 'தனிப்பாடல் திரட்டு' என்னும் பெயரில் தொகுத்துள்ளனர். பெரும்பாலான பாடல்கள் இருநூறுமுதல் முந்நூறு ஆண்டுகளுக்குள் பாடப்பட்டவை. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்களைப் பாடியவர் இராமச்சந்திரக்கவிராயர்; துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர் இவர்.

# அந்தக் காலம் இந்தக் காலம்

நெனச்சதை எல்லாம் எழுதி வச்சது
அந்தக் காலம் – எதையும்
நேரில் பார்த்தே நிச்சயிப்பது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்

மழைவரும் என்றே மந்திரம் செபிச்சது
அந்தக் காலம் – அது... அந்தக் காலம்
மழையைப் பொழிய வைக்கவே எந்திரம் வந்தது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்.

இழிகுலம் என்றே இனத்தை வெறுத்தது
அந்தக் காலம் – மக்களை
இணைத்து அணைக்க முயற்சி பண்ணுவது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்

திரோபதை தன்னைத் துயில் உரிஞ்சது
அந்தக் காலம் பெண்ணைத்
தொட்டுப் பாத்தா சுட்டுப்புடுவான்
இந்தக் காலம் ஆமா.. இந்தக் காலம்

சாஸ்திரம் படிப்பது அந்தக் காலம்
சரித்திரம் படிப்பது இந்தக் காலம்
கோத்திரம் பார்ப்பது அந்தக் காலம்
குணத்தைப் பார்ப்பது இந்தக் காலம்

பக்தி முக்கியம் அந்தக் காலம்
படிப்பு முக்கியம் இந்தக் காலம்
கத்தி தீட்டுவது அந்தக் காலம்
புத்தி தீட்டுவது இந்தக் காலம்

பெண்ணைப் பேயெனப் பேசி அணைச்சது
அந்தக் காலம் – வாழ்வின்
கண்ணில் ஒன்றாய் எண்ணி நடப்பது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்.

– உடுமலை நாராயணகவி



ஆசிரியர் குறிப்பு : உடுமலை நாராயணகவி தமிழ்த் திரைப்படப்பாடல் ஆசிரியரும் நாடக எழுத்தாளரும் ஆவார். பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியவர். ‘பகுத்தறிவுக் கவிராயர்’ எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். இவர் வாழ்ந்தகாலம் **25. 09. 1899**முதல் **23. 05. 1981** வரை.

# தயக்கம் இன்றித் தமிழிலேயே பேசுவோம்

## வீடு

“மலர்...”

அப்பா அழைத்தார்.

“என்னப்பா ?” என்றாள் மலர். மலர், ஆறாம் வகுப்புப் படிக்கிறாள்.

“போஸ்ட் ஆபீஸ் வரைக்கும் கொஞ்சம் போயிட்டு வர்றியா ?” என்றார் அப்பா.

மலர், அவரை முறைத்தாள்.

“‘அஞ்சல் நிலையம்’னு சொல்லத் தெரியாதா உங்களுக்கு ?” என்று கேட்டாள்.

“தெரியும்மா. ஆனா, சொல்லத் தயக்கமா இருக்கு. யாரும் சிரிப்பார்களோன்னு பயமா இருக்கு” என்றார் அப்பா.

“இதற்குப் பேரு தாழ்வுமனப்பான்மையின்னு எங்க ஆசிரியர் சொன்னார்” என வெடுக்கெனச் சொன்னாள், மலர்.

“போஸ்ட் ஆபீஸே பழகிப் போச்சு” என்றார் அப்பா, மறுபடியும்.

“பழக்கத்தில் இருந்து விடுபடணும். நாமென்ன அடிமையான்னு எங்க ஆசிரியர் கேட்கிறார்!” எனக் கருத்தாடலைத் தொடர்ந்தாள் மலர்.

“படிப்படியா மாற்றிக் கொள்கிறேன். சரியா ?” என்றார் அப்பா.

**தெரியும். ஆனால், பேசமாட்டோம். ஏன் ?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டிவி | – | தொலைக்காட்சி | டெலிபோன் | – | தொலைபேசி |
| ரேடியோ | – | வானொலி | ஃபேன் | – | மின்விசிறி |
| டிபன் | – | சிற்றுண்டி | சேர் | – | நாற்காலி |
| டீ | – | தேநீர் | லைட் | – | விளக்கு |
| கரண்ட் | – | மின்சாரம் | தம்ளர் | – | குவளை |

## வீதி

(அப்பாவும் மகளும் பேசிக்கொண்டே நடக்கிறார்கள்.)

அப்பா : மலர்... விரைவா வா! பஸ்ஸைப் பிடிக்கணும்.

மலர் : அப்பா! நீங்க சொன்னது மறந்து போச்சா?

அப்பா : என்ன சொன்னேன்?

மலர் : உங்களுக்குப் பத்து வயசு இருக்கும்போதே மதுரையில், 'பெரியார் பேருந்து நிலையம்'னு பெயர்ப் பலகையில் படிச்சேன்னு சொன்னீங்க. இப்ப உங்களுக்கு வயசு நாற்பது.

அப்பா : நீ சொல்வது சரிதான். முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பேருந்துன்னு சொன்னா யாருக்கும் புரியாது. ஆனால், இப்ப எல்லாருக்கும் புரியுது.அதனால், 'பேருந்து'ன்னே சொல்லலாம்!

மலர் : டிரெயினை 'இரயில் வண்டி'ன்னு சொல்வது, சரிதானேப்பா!

அப்பா : தொடக்கத்தில் புகைவண்டின்னு சொன்னோம். வண்டிகள் கரியால் ஓடிய காலம் அது. புகையைக் கக்கிக்கொண்டு ஓடும். இன்றைக்கும் அப்படிச் சொல்வதில் தப்பில்லை.'புகைவண்டி'ன்னுசொல்லும்போது, அதன் வரலாறும் நினைவுக்கு வரும். இரயிலைத் 'தொடர்வண்டி' எனச் சொல்லும் வழக்கமும் இருக்கிறது. போட்டோவைப் 'புகைப்படம்' என்றுதானே சொல்கிறோம்!

மலர் : அப்பா! பேருந்து வந்தாச்சு.

தெரியும். ஆனால், பேசமாட்டோம். ஏன்?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சைக்கிள் | – | மிதிவண்டி | ரோடு | – | சாலை |
| பிளாட்பாரம் | – | நடைமேடை | பிளைட் | – | வானூர்தி |
| ஆபீஸ் | – | அலுவலகம் | பேங்க் | – | வங்கி |
| சினிமா | – | திரைப்படம் | தியேட்டர் | – | திரையரங்கு |
| டைப்ரைட்டர் | – | தட்டச்சுப்பொறி | ஆஸ்பத்திரி | – | மருத்துவமனை |

## வகுப்பறை

“மலர்!”

ஆசிரியர் கூப்பிட்டார். மலர் எழுந்தாள்.

“போர்டை அழி” என்றார்.

“கரும்பலகையைத்தானே!” என்றாள் மலர் அடக்கமாக.

“அடடா! நானே மறந்துவிட்டேன். நாக்கில் களிம்புபோல ஒட்டிக்கிடக்குப் பழகிப்போன சொல்!” என்றார் ஆசிரியர்.

“களிம்பு எப்படிப் போகும்?” எனக் கேட்டாள், மலர்.

“எல்லாரும் உணர்ந்து பேசப் பேசக் களிம்பு கரையும்” என்றார், ஆசிரியர்.

அடுத்த நாள்...

(வருகைப் பதிவின்போது வேறொரு கருத்தாடல் நடந்தது.)

ஆசிரியர் பெயர் வாசித்தார் :

“ஆர். அகிலா... எஸ். அறிவு... எம். இனியன்... என். மலர்”

வாசித்து முடித்ததும் மலர் எழுந்து கேட்டாள்.

மலர் : பெயரின் முன்னெழுத்தை (இனிஷியல்) ஆங்கிலத்திலும் பெயரைத் தமிழிலும் இருமொழி கலந்து எழுதுகிறோமே, இது முறையா?

ஆசிரியர் : முறையற்றதுதான்! மொழி குறித்து நமக்குள்ள அக்கறையின்மைதான் இதற்குக் காரணம். ஏதேனும் ஒரு மொழியில்தான் பெயரையும் முன்னெழுத்தையும் எழுதுதல் வேண்டும். இந்த மாற்றத்தை நமது வகுப்பறையில் இருந்தே தொடங்கலாம். இனிமேல், பெயரையும் முன்னெழுத்தையும் தமிழிலேயே எழுதுவது என நாம் உறுதிகொள்வோம்.

மாணவர்கள் : உறுதிமொழி எடுத்துக்கொள்வோம்!

அடுத்த நாள் வருகைப் பதிவு இப்படி நடந்தது...

“இரா. அகிலா... சு. அறிவு... மா. இனியன்... நா. மலர்”

(வகுப்பறையில் கொண்டாட்டம்)

**தெரியும். ஆனால், பேசமாட்டோம். ஏன்?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கம்ப்யூட்டர் | – | கணினி | இண்டர்நெட் | – | இணையம் |
| காலேஜ் | – | கல்லூரி | ஸ்கூல் | – | பள்ளி |
| யுனிவர்சிட்டி | – | பல்கலைக்கழகம் | சயின்ஸ் | – | அறிவியல் |
| டெலஸ்கோப் | – | தொலைநோக்கி | மைக்ராஸ்கோப் | – | நுண்ணோக்கி |
| தெர்மாமீட்டர் | – | வெப்பமானி | நம்பர் | – | எண் |

## மீண்டும் வீடு

மலர் : அப்பா ! பழக்கம் மாறுமா ? மாற்றம் வருமா ?

அப்பா : மாறும். என் அப்பா காலத்தில், ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டால், 'நமஸ்காரம்' எனச் சொல்வார்கள். இன்று அழகாகத் தமிழில், 'வணக்கம்' சொல்கிறார்கள். தொலைபேசியை எடுத்ததும் வணக்கம் சொல்கிறார்கள். ஸ்ரீராமன், ஸ்ரீமதி என எழுதும் வழக்கம் பெரும்பாலும் போய்விட்டது. திரு., திருமதி என்றுதான் எழுதுகிறோம். 'சர்வகலாசாலை'யைப் பல்கலைக்கழகம் என்றும், கவர்னரை, 'ஆளுநர்' என்றும் சொல்வது நடைமுறை ஆகிவிட்டது. 'ஸ்வீட் ஸ்டால்' இப்போது 'இனிப்பகம்' ஆகிவிட்டது. 'டியூப் லைட் வாடகைக்குக் கிடைக்கும்' என்னும் பெயர்ப்பலகை, 'குழல் விளக்கு கிடைக்கும்' என மாறி இருக்கிறது.

மலர் : பிறமொழிச்சொற்கள் பல இவ்வாறு மாறவில்லையே, ஏன் ?

அப்பா : மக்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அது மிகவும் இன்றியமையாதது பேருந்துக்குக் கிடைத்த ஆதரவு,'மகிழுந்து'க்குக் (கார்) கிடைக்கவில்லை. தேநீருக்குக் (டீ) கிடைத்த ஆதரவு குளம்பி நீருக்குக் (காபி) கிடைக்கவில்லை. சைக்கிளை 'ஈருருளி' என அறிமுகப்படுத்த அறிஞர் சிலர் விரும்பினர். மக்கள் நாக்கில் ஈருருளி ஒட்டவில்லை. மிதிவண்டி ஒட்டியது. 'மிதிவண்டி நிலையம்' என்னும் பெயர்ப் பலகைகளைச் சிற்றூர்களில் இயல்பாகக் காண முடிகிறது. அறிஞர்கள் மொழிபெயர்த்துத் தருவனவற்றை மக்களும் ஏற்றுக் கொள்ளுதல்வேண்டும்.

மலர் : தமிழ்ச்சொற்களை உருவாக்கும் முயற்சி தொடர்கிறதா ?

அப்பா : ஆமா ! அதில் என்ன ஐயம் ? நெகிழி (பிளாஸ்டிக்), ஊடகம் (மீடியா) எனக் கலைச்சொற்கள் அழகான தமிழில் வந்தபடி உள்ளன. வெற்றியும் பெறுகின்றன. உண்மையான முயற்சி வெற்றி பெறாமல் போகுமா... ?

### முதலில் வியப்பு... பின்னர்ப் படைப்பு

முதன்முதலாகப் பேருந்து, சாலைகளில் ஓடியபோது தமிழன் மலைத்துப் போய்ப் பாடினான்.

மோட்டாரு வண்டியாம்
முன்பக்கம் எந்திரமாம்
மாடில்லாம ஓடுதடி
மாய வெள்ளைக்காரன் வண்டி.

இன்று தமிழனுக்குப் பேருந்தை இயக்கவும் தெரியும்; உருவாக்கவும் தெரியும். புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கருவிகளுக்கும் இயந்திரங்களுக்கும் இணையான தமிழ்ச் சொற்களைப் படைக்கும் முயற்சியும் ஒரு பக்கம் நடக்கிறது.

இந்த முயற்சிக்கு நாமும் ஒத்துழைப்போம். நாளும் தமிழ் வளர்ப்போம்.

# நாடும் நகரமும்

## நாடு

நாடு என்னும் சொல் ஆதியில் மக்கள் வாழும் நிலத்தைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டது. அந்தமுறையில் தமிழர் வாழ்ந்த நாடு தமிழ்நாடு எனப் பெயர் பெற்றது. மூவேந்தர்களின் ஆட்சிக்கு உட்பட்ட தமிழ்நாட்டின் பகுதிகள் அவரவர் பெயராலேயே சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று அழைக்கப்பட்டன. இப்பெயர்கள் மிகத் தொன்மை வாய்ந்த தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நாளடைவில் முந்நாடுகளின் உட்பிரிவுகளும் 'நாடு' என அழைக்கப்பட்டன. கொங்குநாடு, தொண்டைநாடு முதலியன இதற்குச் சான்றாகும்.

சிறுபான்மையாகச் சில தனி ஊர்களும் நாடென்று பெயர் பெற்று வழங்குதல் உண்டு. முன்னாளில் முரப்புநாடு என்பது பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளுள் ஒன்று. இப்பொழுது, அப்பெயர் பொருநையாற்றின் கரையிலுள்ள ஒரு சிற்றூரின் பெயராக நிலவுகின்றது. அதற்கு எதிரே ஆற்றின் மறுகரையில் உள்ள மற்றொரு சிற்றூர் வல்லநாடு என்னும் பெயர் உடையது. இங்ஙனம், நாடு என்னும் சொல் ஊரைக் குறிக்கும் முறையினைச் சோழ நாட்டிலும் காணலாம்.

மாயவரத்திற்கு அணித்தாக உள்ள ஓரூர் கொரநாடு என வழங்கப்படுகிறது. கூறைநாடு என்பதே கொரநாடு என மருவிற்று. பட்டுக்கோட்டை வட்டத்தில் கானாடும், மதுராந்தக வட்டத்தில் தொன்னாடும் உள்ளன.

நாடு என்னும் சொல்லின் பொருள் வழக்காற்றில் நலிவுற்ற தன்மையை இவ்வூர்ப் பெயர்கள் உணர்த்துகின்றன.

## நகரம்

சிறந்த ஊர்கள், நகரம் என்னும் பெயரால் வழங்கும். நாட்டின் தலைமைசான்ற நகரம் தலைநகரம் எனப்படும். முன்னாளில் ஊர் என்றும், பட்டி என்றும் வழங்கிய சில இடங்கள், பிற்காலத்தில் சிறப்புற்று நகரங்கள் ஆயின.

ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார் பிறந்த இடம் குருகூர் என்னும் பழம்பெயரைத் துறந்து, ஆழ்வார்திருநகரியாகத் திகழ்கின்றது. பாண்டி நாட்டிலுள்ள விருதுப்பட்டி, வாணிகத்தால் மேம்பட்டு இன்று விருதுநகராக விளங்குகின்றது. இக்காலத்தில் தோன்றும் புத்தூர்களும் நகரம் என்னும் பெயரையே பெரிதும் நாடுவனவாகத் தெரிகின்றன.

சென்னையின் பகுதியான தியாகராய நகரமும், காந்தி நகரமும், சிதம்பரத்திற்கு அண்மையில் அமைந்து இருக்கும் அண்ணாமலை நகரமும், தஞ்சையில் தோன்றியுள்ள கணபதி நகரமும் இதற்குச் சான்றுகள் ஆகும்.

### சென்னை

இக்காலத்தில் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கும் நகரம் சென்னை மாநகரம். முந்நூறு ஆண்டுகட்கு முன்னே சென்னை ஒரு பட்டினமாகக் காணப்படவில்லை. கடற்கரையில் துறைமுகம் இல்லை; கோட்டையும் இல்லை. பெரும்பாலும் மேடு பள்ளமாகக் கிடந்தது அவ்விடம்.

சென்னையின் பகுதிகளாக இன்று விளங்கும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் கடற்கரைச் சிற்றூர்களாக அந்நாளில் காட்சி அளித்தன.

மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சுரம் என்னும் சிவாலயம் மிகப் பழைமை வாய்ந்தது. திருஞானசம்பந்தர் அதனைப் பாடியுள்ளார்.

திருமயிலைக்கு அருகே உள்ள திருவல்லிக்கேணி, முதல் ஆழ்வார்களால் பாடப் பெற்றது. அவ்வூரின் பெயர் அல்லிக்கேணி என்பதாகும். அல்லிக்கேணி என்பது அல்லிக்குளம். அல்லி மலர்கள் அழகுற மலர்ந்து கண்ணினைக் கவர்ந்த கேணியின் அருகே எழுந்த ஊர் அல்லிக்கேணி எனப் பெயர் பெற்றது. அங்கே பெருமாள், கோவில் கொண்டமையால் திரு என்னும் அடைமொழி பெற்றுத் திருவல்லிக்கேணி ஆயிற்று.

திருவல்லிக்கேணிக்கு வடக்கே மேடும் பள்ளமுமாகப் பல இடங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று நரிமேடு.

**செயல்பாடு – 1**

### கேட்டு அறிக.

உங்கள் ஊருக்கு அருகில் நாடு என முடியும் ஊர்ப்பெயர்கள் உள்ளனவா ? உங்கள் வீட்டில் பெரியவர்களிடம் நாடு என்பதான ஊர்ப்பெயர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

**செயல்பாடு – 2**

### உங்களுக்குத் தெரியுமா ?

தொழில்களால் சிறப்படையும் ஊர்கள் பேட்டை எனப்பெறும். சேலத்திற்கு அருகில் செவ்வாய்க்கிழமைகளில் சந்தை நடைபெறும் ஓர் ஊர், செவ்வாய்ப்பேட்டை எனப்படுகிறது. பேட்டை என்னும் பெயரில் அமைந்த வேறு ஊர்களைத் தெரிந்துகொள்ளவும்.

**செயல்பாடு – 3**

### அறிந்துகொள்ளலாம்.

உங்கள் ஊர் மற்றும் அருகில் உள்ள சில ஊர்ப்பெயர்களுக்கான காரணங்களை அறிந்துகொள்ள முயற்சி செய்யலாம். நூலகத்தில் இது தொடர்பான நூல்களைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

**செயல்பாடு – 4**

### வரைபடம் பார்த்து எழுதுக.

தமிழக வரைபடத்தில் நகர் என்னும் பெயர் பெற்ற ஊர்களைக் கண்டுபிடித்து எழுதவும்.

இன்று மண்ணடி என வழங்கும் இடம் ஒரு மேட்டின் அருகில் பெரும்பள்ளமாக அந்நாளில் காணப்பட்டது.

நன்றி : ரா.பி.சேதுப்பிள்ளை, ‘ஊரும் பேரும்’

### புரம்

‘புரம்’ என்னும் சொல், சிறந்த ஊர்களைக் குறிப்பதாகும். ஆதியில் காஞ்சி எனப் பெயர் பெற்ற ஊர் பின்னர், ‘புரம்’ என்பது சேர்ந்து காஞ்சிபுரம் ஆயிற்று. பல்லவபுரம் (பல்லாவரம்), கங்கைகொண்ட சோழபுரம், தருமபுரம் முதலியவை மேலும் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

### பட்டினம்

கடற்கரையில் உருவாகும் நகரங்கள் ‘பட்டினம்’ எனப் பெயர் பெறும். காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம், சதுரங்கப்பட்டினம் ஆகியவை ‘பட்டினம்’ எனப் பெயர் பெற்ற ஊர்கள் ஆகும்.

### பாக்கம்

கடற்கரைச் சிற்றூர்கள் ‘பாக்கம்’ எனப் பெயர் பெறும். பட்டினப்பாக்கம், கோடம்பாக்கம், மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேப்பாக்கம் இப்படிப் ‘பாக்கம்’ பெயர் பெற்ற ஊர்களைக் குறிப்பிடலாம்.

### புலம்

‘புலம்’ என்னும் சொல் நிலத்தைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, மாம்புலம், தாமரைப்புலம், குரவைப்புலம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

### குப்பம்

நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள், ‘குப்பம்’ என்னும் பெயரால் வழங்கப்பெறும். காட்டுக்குப்பம், நொச்சிக்குப்பம், மஞ்சக்குப்பம், மந்தாரக்குப்பம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

# இலக்கணமும் மொழித்திறனும்

## 1. மாத்திரை

இலக்கணத்தில் மாத்திரை என்பது எழுத்துகளின் ஒலியின் அளவைக் குறிக்கும் சொல். மாத்திரை என்பது சிறிய ஒலியளவு.

கண் சிமிட்டும் நேரம் அல்லது விரல் சொடுக்கும் நேரம் மாத்திரையின் கால அளவாகும்.

தமிழ் எழுத்துகளுக்கான மாத்திரை அளவைத் தெரிந்துகொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| மெய்யெழுத்து | – | அரை மாத்திரை |
| உயிரெழுத்து (குறில்) | – | ஒரு மாத்திரை |
| உயிரெழுத்து (நெடில்) | – | இரு மாத்திரை |
| உயிர்மெய் (குறில்) | – | ஒரு மாத்திரை |
| உயிர்மெய் (நெடில்) | – | இரு மாத்திரை |

இந்த அளவைத் தாண்டும் ஒலியளவை அளபெடை என்கிறோம்.

முன் பாடத்தில் நாம் அளபெடை பற்றிப் படித்து அறிந்தோம்.

## 2. எண்

ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும்.

ஒன்றனைக் குறிப்பது ஒருமை; ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

| | | |
|---|---|---|
| பூ | – | ஒருமை |
| பூக்கள் | – | பன்மை |
| மாணவன் | – | ஒருமை |
| மாணவர் | – | பன்மை |

பெயர் ஒருமையில் இருந்தால், வினைமுடிபும் ஒருமையிலேயே இருத்தல் வேண்டும்.

(எ.கா.) திருடன் பிடிபட்டான்.

பெயர் பன்மையில் இருந்தால், வினைமுடிபும் பன்மையிலேயே இருத்தல் வேண்டும்.

(எ.கா.) திருடர் பிடிபட்டனர்.

## 3. இடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்றாகும்.

நான், அவன் வீட்டுக்குப் போனேன். நீ ஏன் வரவில்லை ?

இச்சொற்றொடரில்,

நான் – தன்மை, நீ – முன்னிலை, அவன் (அவள், அது) – படர்க்கை.

பன்மையில் வரும்போது நாங்கள் – தன்மை.

நீங்கள் – முன்னிலை, அவர்கள், அவை – படர்க்கை.

தன்மை என்பது தன்னைக் குறிப்பது.

முன்னிலை என்பது முன்னால் இருப்பவரைக் குறிப்பது.

படர்க்கை என்பது தன்மை, முன்னிலை அல்லாத மற்றவரைக் குறிப்பது.

ஒவ்வோர் இடமும் அதற்கேற்ப வினைமுடிபைப் பெறுதல் வேண்டும்.

பயிற்சி

தன்மைக்குரிய வினைமுற்றுகள் தரப்பட்டுள்ளன. முன்னிலை, படர்க்கைக்கு உரிய வினைமுற்றுகளை எழுதி நிரப்புக.

I. நான் சென்றேன்.

நீ ____________ அவன் ____________

II. நாங்கள் உண்டோம்.

நீங்கள் ____________ அவர்கள் ____________

III. நான் விழுந்தேன்.

நீ ____________ அவள் ____________

## 4. அகரவரிசையை அறிந்துகொள்வோம்.

உயிர்மெய் எழுத்து வரிசையைப் பார்ப்போம்.

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என உயிர்மெய்யெழுத்து வரிசை வரும்.

சிறுவன், சாப்பாடு, செய்தி, சலிப்பு, சோளம் என்னும் சொற்கள் அகரவரிசையில் சலிப்பு, சாப்பாடு, சிறுவன், செய்தி,சோளம் என்னும் வரிசையில் வரும்.

'த' வரிசைச் சொற்கள் சில கீழே உள்ளன. அவற்றை அகரவரிசையில் எழுதுக.

திண்ணை, தங்கம், துணை, தோழன், தெரு, தாழ்ப்பாள், தூண், தீ, தொழில்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## 5. கடிதம் எழுதுதல் (தனிப்பட்ட கடிதம்)

### கடிதத்தில் இடம்பெற வேண்டியவை

கடிதம் எழுதுவோரின் முழு முகவரி

கடிதம் எழுதும் நாள்

தெரிவிக்க வேண்டிய செய்தி

கடித உறையில் கடிதம் பெறுபவரின் முழு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

### மாதிரிக் கடிதம்

(வெளியூரில் உள்ள நண்பனுக்கு/ தோழிக்கு எழுதும் கடிதம்)

6/2அ, நொரப்பங்காடு,
அழகாபுரம் பெரிய புதூர்,
சேலம் – 636 016.
20. 10. 2011

அருமைத்தோழி சாவித்திரிக்கு,

நான் இங்கு நலம். நீ நலமா ? உன் பெற்றோர் நலமா ? நீ ஊருக்குச் சென்றதிலிருந்து இங்கு எனக்குப் பொழுதே போகவில்லை. நான், நம் தோழிகள் கயல்விழி, கலா, சாந்தா, அனிதா, காயத்திரி, சோனியா, ஜெனிபர், ஷமீம், அமிதா, இரமாதேவி, சுமதி, சங்கீதா எல்லாரும் உன் வரவுக்காகக் காத்திருக்கிறோம். நாளை முழுமதி நாள். நீ வந்தால் மகிழ்ச்சியாக விளையாடலாம்.

அன்புடன்,
இரமணி

(கையொப்பம்)

உறைமேல் முகவரி

பெறுநர்

செல்வி மா. சாவித்திரி,
நாகோஜிப்பட்டி,
நரியனூர் – 636 458,
மேட்டூர் மாவட்டம்.

### பயிற்சி

உன் நண்பன்/தோழி சில நாளாகப் பள்ளிக்கு வரவில்லை. பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டு வேலைக்கு அனுப்பப்பட்ட செய்தி வருகிறது. மீண்டும் பள்ளிக்கு வருமாறு உன் நண்பனுக்கு/தோழிக்கு ஒரு கடிதம் வரைக.

## வகுப்பறைத்திறன்கள்

**1. வினா எழுப்புக.**

பொருள்

அ. பயம்

ஆ. தயக்கம்

இ. பழக்கம்

ஈ. தாழ்வு மனப்பான்மை

உ. மாற்றம்

**2. கருத்தாடல் செய்க.**

அ. எழுதும்போது பயன்படுத்தும் தமிழ்ச்சொற்களைப் பேசும்போது பயன்படுத்துவதனால் வரும் தயக்கங்கள் என்னென்ன ?

ஆ. இந்தக் காலத்தில் நடந்துள்ள மாற்றங்கள் என்னென்ன ?

**3. குழுக் கல்வி**

சிறு குழுக்களாகப் பிரிந்து உங்கள் ஊரில் உள்ள தெருப்பெயர்களைத் தொகுக்க. ஊரைச் சுற்றியுள்ள சிற்றூர்களின் பெயர்களையும் தொகுக்க. உங்களுக்குத் தெரிந்த பெயர்க் காரணங்களைக் கூறுக.

**4. எழுதுக.**

**I. ஓரிரு சொற்களில் விடை தருக.**

அ. பிளாஸ்டிக் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் எது ?

ஆ. பிளாட்பாரம் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் எது ?

இ. விருதுநகரின் முந்தைய பெயர் என்ன ?

ஈ. பாக்கம் என்னும் பெயருடைய சிற்றூர்கள் எதன் அருகில் உள்ளன ?

உ. அந்தக் காலத்தில் எது முக்கியம் ? இந்தக் காலத்தில் எது முக்கியம் ?

**II. ஓரிரு தொடர்களில் விடை எழுதுக.**

அ. புலவரைப் பார்த்ததும் செல்வர்களுக்குச் சில நேரங்களில் வரும் நோய் எது ?

ஆ. தம்மை என்ன பண்ணுமாறு பதுமத்தான் படைத்துவிட்டான் என்று புலவர் வருந்துகிறார் ?

இ. டிரெயினை என்னென்ன பெயரில் நாம் கூறுகிறோம் ?

ஈ. நாடு என்னும் சொல் ஊரைக் குறிக்குமாறு அமைந்த ஊர்ப்பெயர்கள் சிலவற்றைக் கூறுக.

## III. நான்கு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

அ. செல்வர்கள் புலவர்களிடம் நடந்துகொள்ளும்முறை.

ஆ. முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தைய சென்னை.

## 5. குறிப்புகளை விரிவுசெய்து ஒருபக்க அளவில் கட்டுரை வரைக.

தலைப்பு : என் ஊர்

குறிப்பு

அ. என்னுடைய ஊரின் பெயர்

ஆ. பெயர்க்காரணம்

இ. மக்கள்தொகை

ஈ. வீடுகளின் வகைகள் – குடிசை, ஓடு, கட்டடம்

உ. தெருக்களின் எண்ணிக்கையும் அவற்றின் பெயரும்

ஊ. பள்ளிகளின் எண்ணிக்கை

எ. மருத்துவமனைகள்

ஏ. பேருந்துநிலையம்

ஐ. திரை அரங்கு

ஒ. நூலகம்

ஓ. நடைபெறும் திருவிழாக்கள்

ஔ. ஊரில் எனக்குப் பிடித்தவை

## 6. வீட்டுப் பயிற்சி

1. வீட்டில் உள்ள பெரியவர்களிடம் காலம் செல்லச் செல்ல ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும், அறிவியல் துணைக்கருவிகளின் பயன்பாட்டையும் கேட்டு எழுதவும்.

2. உங்கள் தாய், தந்தை, தாத்தா, பாட்டி ஆகியோரோடு உட்கார்ந்து தமிழ்நாட்டில் ‘பட்டு’ என முடியும் ஊர்ப்பெயர்களைத் தொகுத்து, மறுநாள் வகுப்பில் படிக்கவும்.

## வாழ்க்கைத்திறன்கள்

மலரிடம் இருந்தது முன்முயற்சி. முன்முயற்சி உள்ளவர்கள் பிறர் ஏளனம் செய்வார்களே என நினைத்துத் தயங்குவது இல்லை. பிறர் நம்முடன் வருகிறார்களா எனப் பார்ப்பதும் இல்லை. முதல் ஆளாக நடந்தாலும் கவலையோ அச்சமோ இல்லாமல் நடக்கிறார்கள். தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களிடம் முன்முயற்சி இருக்காது.

நீங்கள் எப்படி நடந்துகொள்வீர்கள் ?

1. உறவினர் வீட்டு விழாவுக்குச் செல்கிறீர்கள். யாரும் உங்களுடன் கலகலப்பாகப் பழகவில்லை. என்ன செய்வீர்கள் ?

   அ. உடனே என் முகம் வாடிவிடும்.

   ஆ. விரைவில் வீட்டுக்குச் செல்ல நினைப்பு வரும்.

   இ. நானே வலியச் சென்று கலகலப்பாகப் பேசுவேன்.

2. வகுப்பறையில் மகிழ்ச்சியான ஒருநாள். ஆசிரியர் ‘நீ ஒரு பாட்டுப் பாடு!’ என உங்களைப் பார்த்துக் கேட்கிறார். நீங்கள் என்ன செய்வீர்கள் ?

   அ. எனக்குப் பாட வராது என்பேன்.

   ஆ. எதுவும் பேசாமல் எழுந்து தலையைக் குனிந்தபடி நிற்பேன்.

   இ. எனக்குத் தெரிந்த பாடலில் இரண்டு வரியோ நான்கு வரியோ பாடுவேன்.

3. உங்கள் தோற்றத்தையோ உங்கள் உடையையோ உங்கள் படிப்பையோ யாராவது உங்கள் முதுகுக்குப் பின்னால் ஏளனமாகச் சிரித்தால்,

   அ. கண்ணீர் வரும்.

   ஆ. மனத்துக்குள் திட்டுவேன்.

   இ. ஏளனம் அதிகமானால் எதிர்த்துக் கேட்பேன்.

4. இதுவரை நீங்கள் கற்றுக்கொள்ளாத ஒரு பயிற்சி: ‘கற்றுக்கொள்கிறாயா ? சேர்த்து விடுகிறேன்’ என அப்பா கேட்கிறார். என்ன சொல்வீர்கள் ?

   அ. வேண்டா, என்னால் முடியாது என்பேன்.

   ஆ. அஃது எனக்கு ஒத்துவராது என்பேன்.

   இ. கற்றுக்கொள்ள ஆர்வமாய் ஒத்துக்கொள்வேன்.

எல்லா வினாக்களுக்கும் ‘இ’ தான் விடை என்பது உங்களுக்குத் தெரியும். கருத்தினை வெளிப்படுத்தவும் முறையான செயலைச் செய்யவும் நீங்கள் ஒருபோதும் தயங்குதல் கூடாது.

# குற்றாலக் குறவஞ்சி

## குற்றால மலையின் வளம்

* வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே! 1 *

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூல்உளைச் சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற் றாலர் தென் ஆரிய நாடே! 2

– திரிகூட ராசப்பக் கவிராயர்

### பாடல்–1, பொருள்

வளைந்த இளம்பிறையைத் தன் சடையில் அணிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் மலை குற்றாலமலை. அதுதான் எங்கள் மலை. இந்த மலையில் ஆண் குரங்குகள் பெண் குரங்குகளுக்குப் பழங்களைப் பறித்துக்கொண்டு வந்து தரும். உண்ணும்போது பெண் குரங்குகள் பழங்களைத் தவறவிட்டு விடும். அவை சிந்தும் பழங்களைக் கேட்டுத் தேவர்கள் கெஞ்சி நிற்பார்கள். உயர்ந்த எங்கள் மலையில் உள்ள கானவர்கள் வானத்தில் இருக்கும் தேவர்களைக் கண்சிமிட்டி அழைப்பார்கள்.

சித்தர்கள், இறப்பை நீக்கும் மூலிகைகளை எங்கள் மலையில் வளர்த்து வருவார்கள். அருவியின் அலை உயர்ந்து எழும்பி வானத்தையே தொடும். அந்த அலைநீரில் கதிரவனின் தேரில் பூட்டிய குதிரைகளின் கால்களும் தேரின் சக்கரங்களும் வழுக்கிவிழும்.

### பாடல்–2, பொருள்

குற்றாலநாதராகிய சிவபெருமான் வாழும் நாடு எங்கள் நாடு. எங்கள் நாட்டில் மக்கள் அஞ்சி ஓடிப்போவது இல்லை; வெள்ளம்தான் ஓடும். மக்கள் இங்கு ஒடுங்கி இருப்பதில்லை; தவம் செய்வோரின் உள்ளம்தான் ஒடுங்கி இருக்கும். மக்கள் இங்கு நோய், வறுமையால் வாடுவது இல்லை; பெண்களின் மெல்லிடை மட்டுமே வாடும். மக்கள் இங்கு வருந்துவது இல்லை; முத்துகளை ஈனும் சங்குகள் மட்டுமே வருந்துகின்றன. இங்குப் பயன் அற்றவை என எவையும் தூக்கிப் போடப்படுவது இல்லை; விதைகள் மட்டுமே மண்ணில் போடப்படுகின்றன. மக்கள் இங்கே துன்பத்தில் புலம்புவது இல்லை; குழந்தைகள் காலில் அணியும் கிண்கிணிகளே புலம்பல் ஒலி எழுப்புகின்றன. மக்கள் இங்கே செல்வங்களைத் தேடி அலைவதில்லை; அறம், பெருமை இரண்டை மட்டுமே மக்கள் இங்குத் தேடுவார்கள். இவ்வாறு குறத்தி, தன் மலைவளமும் நாட்டுவளமும் குறித்துக் கூறுகிறாள்.

### சொல்பொருள்

1. வானரங்கள் – இச்சொல், பொதுவாகக் குரங்குகளைக் குறிக்கும். இங்கு ஆண் குரங்குகளைக் குறித்தது; மந்தி – பெண் குரங்கு; வான்கவிகள் – தேவர்கள்; கமனசித்தர் – வான்வழியே நினைத்த இடத்துக்குச் செல்லும் சித்தர்கள்; காயசித்தி – மனிதனின் இறப்பை நீக்கிக் காக்கும் மூலிகை; பரிக்கால் – குதிரைக்கால்; கூனல் – வளைந்த; வேணி – சடை.
2. மின்னார் – பெண்கள்; மருங்கு – இடை; சூல்உளை – கருவைத்தாங்கும் துன்பம்.

நூல்குறிப்பு : இந்நூலின் முழுப்பெயர் திருக்குற்றாலக் குறவஞ்சி. ஆசிரியர் திரிகூட ராசப்பக்கவிராயர் ஆவார். குறவஞ்சி என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது இந்நூல். ஓசைநயமிக்க பாடல்கள் இந்நூலில் நிறைந்து காணப்படுகின்றன.

# மரமும் பழைய குடையும்

பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குத் தாங்காது
மிஞ்ச அதனுள் வெயில்ஒழுகும் – தஞ்சம்என்றோர்
வேட்டதுஅருள் முத்துசுவா மித்துரைரா சேந்திராகேள்!
கோட்டுமரம் பீற்றல் குடை.

– அழகிய சொக்கநாதப் புலவர்

## பாடல்பொருள்

அடைக்கலம் என்று வந்து அடைந்தவர் விரும்பியதனை அளிக்கும் மன்னனே! (முத்துசாமித்துரை) கேட்பாயாக!

கிளைகளை உடைய மரம், இளம் காய்களை உடையதாக இருக்கும்; மிக்க மழை பெய்தால் தாங்காது விழும்; அதனிடையே அமைந்த இடைவெளி வழியாக வெயில் வரும்.

பழைய குடையானது, கிழிந்திருக்கும்; பெருமழையைத் தாங்காது; துளைகள் வழியாக வெயில் உள்ளே செல்லும். எனவே, இத்தகைய காரணங்களால், பீற்றல் குடை, மரத்துக்கு ஒப்பானதாகும்.

சொல்பொருள்: கோட்டு மரம் – கிளைகளை உடைய மரம்; பீற்றல் குடை – பிய்ந்த குடை.

## ஆசிரியர் குறிப்பு

அழகிய சொக்கநாதப் புலவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தச்சநல்லூரில் பிறந்தவர். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தனிப்பாடல்களை இயற்றியவர். இவர்தம் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

## நூல்குறிப்பு

தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ள சிலேடைப்பாடல் ஒன்று பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது.

ஒரு சொல்லோ தொடரோ இருபொருள் தருமாறு பாடுவது சிலேடை எனப்படும். இதனை, ‘இரட்டுறமொழிதல்’ எனவும் கூறுவர். இரண்டு + உற + மொழிதல் – இரட்டுறமொழிதல். இருபொருள்படப் பாடுவது.

(எ.கா.) ஆறு

ஆறு என்பது நீர் ஓடுகின்ற ஆற்றைக் குறிக்கும்.

எண் ஆறனையும் (6) குறிக்கும்.

செல்லும் வழியையும் குறிக்கும்.

# எது பண்பாடு ?

(கூடிப் பேசுவோம் வாங்க...)

## நிகழ்வு – 1

செந்திலைப் பார்த்திருக்கிறீர்களா ? ஆறாம் வகுப்புப் படிக்கிறான்; அவன் படுசுட்டி; ஓர் இடத்தில் நிற்கமாட்டான்; எப்போதும் ஓட்டமும் நடையுமாகத்தான் இருப்பான்.

அவனிடம் ஒரு பழக்கம் உண்டு. நடக்கும்போதே வழியெல்லாம் எச்சிலைத் துப்புவான். யாராவது கேட்டால், "உனக்கென்ன ?" என்பான்.



தட்டிக்கேட்டால், அவனுக்குச் சினம் வரும். ஆனால், எச்சில் துப்புவதனை மட்டும் நிறுத்தவே மாட்டான்.இவ்வாறு எச்சில் துப்புவதனால், காற்றில் நோய் உயிரிகள் பரவி, மற்றவர்களுக்கும் நோய்வர வாய்ப்புகள் உண்டு எனக் கூறியும் துப்புகிறான்.

கூடிப் பேசுவோம்

செந்தில் செய்வது முறையா ?

பொது இடங்களில் எச்சில் துப்பினால் என்னென்ன கெடுதல் வரும் ?

'எச்சிலை எங்கே துப்பினால் என்ன ?' எனக் கேட்கும் செந்திலுக்கு உங்கள் பதில் என்ன ? உன்னுடன் வருவோர் எச்சில் துப்பினால், அவர்களுக்கு நீ எவ்வாறு எடுத்துரைப்பாய் ?

நிகழ்வு – 2



சுந்தரத்தின் அப்பா பெயர் பழனி. ஆனால், எல்லாருக்கும் 'நன்றி பழனி' என்றால்தான் உடனே தெரியும். அஃதென்ன... 'நன்றி பழனி...' ? யாரிடம் என்ன பேசினாலும், என்ன செய்தாலும் உடனே 'நன்றி' சொல்கிற பழக்கம் உடையவர் பழனி.

ஒருநாளைக்கு ஆயிரம் தடவையாவது, 'நன்றி' என்னும் சொல்லைப் பயன்படுத்திவிடுவார்.

பேருந்தில் நடத்துநர் பயணச்சீட்டுக் கொடுப்பார்; பழனி 'நன்றி' என்பார். அஞ்சல்காரர் பழனியிடம் கடிதம் கொடுப்பார், அதற்கும் 'நன்றி ஐயா' என்பார்.

சுந்தரம், அப்பாவிற்குத் தண்ணீர் கொடுப்பான்; அதற்கும் 'நன்றி' சொல்வார் பழனி.

### கூடிப் பேசுவோம்

எதற்கெடுத்தாலும், 'நன்றி' சொல்கிற பழக்கம் உடையவர்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?

'நன்றி' என்பது வெறும் சொல்தானே, அதனைச் சொன்னால் என்ன, சொல்லாவிட்டால் என்ன என்று நினைக்கிறீர்களா ?

யாருக்காவது நீங்கள் 'நன்றி' சொன்னது உண்டா ?

'மகிழ்ச்சி' என்னும் சொல்லை எங்கெங்கு எல்லாம் பயன்படுத்தலாம் என நண்பர்களுடன் கலந்துரையாடுக.

### நிகழ்வு – 3

அந்த வரிசை நீண்டிருந்தது. ஒரே கூட்டம்.

ஆண்களும் பெண்களும் கலந்து ஒரே வரிசையில் நின்றிருந்தார்கள்.

மேலிருந்து பார்த்தால் பெரிய மலைப்பாம்பு படுத்திருப்பதுபோல் வரிசை தெரியும்.

கதவு திறக்கட்டும் என எல்லாரும் காத்திருந்தனர்.

முத்து அங்கே வந்தான்; ஆள் நல்ல உயரம்; கையைக் கட்டிக்கொண்டு சிறிதுநேரம் வேடிக்கை பார்த்தபடி நின்றான்.

அவன் வரிசையில் நிற்கவில்லை.

கதவு திறந்ததும் விரைவாய் முன்னால் ஓடினான், முத்து.



கூட்டத்தில் இருந்த சிலர் சொன்னார்கள்.

“யாரப்பா அது ? நாங்கள் வரிசையில நிற்கிறோமே, தெரியலயா !”

முத்து, முறைத்தபடி கூட்டத்தைப் பார்த்துச் சொன்னான்:

“உங்க வேலையைப் பாருங்க. எல்லாம் எனக்குத் தெரியும்.”

இன்னும் சிலர் சொன்னார்கள்.

“நமக்கு எதுக்கு வம்பு ? போனா போயிட்டுப் போறான்.”

ஒருவர் உரக்கச் சொன்னார்.

“இப்படியே வர்றவங்க முன்னால போனா, நாம எப்போ போறது ?

இதை யார்தான் கேட்பது ?”

### கூடிப் பேசுவோம்

முத்து செய்தது முறைதானா ?

மக்கள் நீள்வரிசையில் நின்றிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் ?

ஆண், பெண் எனத் தனித்தனி வரிசை தேவையா ? எங்கெங்கு எல்லாம் வரிசைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும் ? ஏன் ? வரிசைமுறையை மீறிச் செல்பவரைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் ?

### நிகழ்வு - 4

செண்பகத்தின் அப்பா எல்லாரையும் ‘அவன்’, ‘இவன்’ என்றுதான் அழைப்பார். சாலையில் போகும் காய்கறிக்காரரை, ‘ஏய், காய்கறி’ என்று அழைப்பார்.

வீட்டிற்கு வரும் தோட்டக்காரர் மாணிக்கத்தைத், “தோட்டக்காரா...இங்கே வா !” என்று அப்பா கூப்பிடுவார்; நாள்தோறும் வீட்டிற்குச் செய்தித்தாள் போடுபவரை, “பேப்பர்காரன்” என்றுதான் சொல்வார்.

இதில் அப்பாவுக்கு நேர் எதிரானவர் அம்மா. வயதில் குறைந்தவர்களைக்கூட ‘வாங்க, ‘போங்க’ என்றுதான் சொல்வார்.

செய்யும் தொழிலை வைத்து ஒருவரை மரியாதைக் குறைவாகக் கூப்பிடுவது அம்மாவுக்குப் பிடிக்காது.

அப்பா பிறரைக் கூப்பிடுவதனைப் பார்த்த செண்பகமும் ஒருநாள் மாணிக்கத்தை, “தோட்டக்காரா... இங்கே வா !” என்று கூப்பிட்டாள்.

அம்மா அதட்டினாள். “பெரியவங்களை அப்படிக் கூப்பிடக் கூடாது, தெரியுதா ?”

செண்பகம் பதிலுக்குக் கேட்டாள். “அப்பா மட்டும் அப்படிக் கூப்பிடலாமா ?”



கூடிப் பேசுவோம்

ஒருவரைப் பெயர் சொல்லி அழைக்கலாமா ?

வயதில் பெரியவர்களை வா, போ என ஒருமையில் பேசலாமா ?

உங்களைப் பெயர் சொல்லி அழைத்தால், மகிழ்ச்சியாக இருக்கிறதா ?

'ஏய்... இங்கே வா' எனப் பெயர் கூறாமல் அழைத்தால் மகிழ்ச்சியாக இருக்கிறதா ?

குறிப்பு

மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். ஆறு அல்லது ஏழு மாணவர்கள் ஒரு குழுவில் இருக்கட்டும். மேற்கண்ட கேள்விகளைக் குழுக்களில் கூடிப் பேசச் சொல்லுங்கள். எது முறை ? எது முறையற்றது ? என்பதனைவிட, மாணவர்கள் மனத்தில் பட்ட கருத்தைக் கலந்துரையாடச் சொல்லுங்கள்.

குழுவிற்கு ஒரு தலைவரை அவர்களே தேர்ந்தெடுக்கட்டும். அந்தக் குழுவின் கருத்தை அந்தத் தலைவர் தொகுத்துக் கூறும்படி சொல்லவும்.இவ்வாறு சமுதாயத்தில் நிகழும் பண்பு முறைகேடுகளைப் பட்டியலிடுக. அப்பட்டியலில் உள்ள பண்புக்கேடுகளைப்பற்றி, ஒவ்வொரு நாளும் ஒன்றனைப்பற்றிக் கருத்தாடல் புரிக.

சமுதாயம் என்பது நாம்தானே. நாம் ஒவ்வொருவரும் பண்புடன் நடக்கும்போது, சமுதாயமே பண்பாடுமிக்க சமுதாயமாக மாறிவிடும். நாம்தான் நல்ல பண்பாட்டை உருவாக்குதல் வேண்டும். அதற்கு, நமக்குள் உறுதியான நல்ல மனப்பான்மை வேண்டும். கடைப்பிடிப்போம்; நல்ல பண்புமிக்க சமுதாயத்தை உருவாக்குவோம்.

# வணக்கம் ஐயா!

சந்தை கூடி இருந்தது. வகைவகையான பொருள்களை விற்கும் பல்வேறு கடைகள். கூவிக்கூவிப் பொருள்களை விற்கும் வணிகர்கள். திரும்பிய பக்கம் எல்லாம் மக்கள் கூட்டம். காய்கறி, பழங்கள், மட்பாண்டங்கள், துணிமணிகள்... இப்படிப் பல பொருள்களும் விற்கும் கடைகளுக்கு நடுவே மாறுபட்ட ஒரு குரல் ஒலித்தது.

"சொல் வாங்கலியோ .... சொல்!

நாக்குல நல்ல சொல் இருக்கு; கெட்ட சொல்லும் இருக்கு.

சொல் வாங்கலியோ... சொல்...!

அங்கே போகிறவர்கள், வருகிறவர்கள் எல்லாரும் வியப்புடன் திரும்பிப் பார்த்தார்கள். பெரியவர் ஒருவர் கேட்டார்: "இந்த ஊர்ச்சந்தை மிகவும் புகழ்மிக்கது. இங்க புடலங்காயில் இருந்து, புதுத்துணிவரைக்கும் எல்லாம் வாங்கலாம். ஆனா, நீ சொல்லை விற்கிறாயே! இது புது வாணிகமாக இருக்கே... ?"

அந்த வணிகர் சொன்னார்: "புது வாணிகந்தாங்க... வாழ்க்கையில் காயம்பட்ட மக்களுக்கும் கவலைப்படுகின்ற மக்களுக்கும் ஆறுதல் சொல் வேண்டும். குழப்பத்துல தவிக்கின்ற கோடானுகோடி மக்களுக்கும் சொல் வேணும்... அதனால்தான் சொல்லை விற்கிறேன்..."

பக்கத்தில் ஏதோ சத்தம் உரக்கக் கேட்டது. அப்பாவியாகத் தோற்றம் அளித்த ஒருவன் இரு கைகளையும் நீட்டி வானத்தைப் பார்த்துச் சுற்றிச்சுற்றி வந்தான். பக்கத்தில் இருந்தவர்கள் "என்னப்பா இப்படி, உன்னையே சுற்றிக் கொள்கிறாயே" எனக் கேட்டனர்.

"அம்மாவும் நானும் சந்தைக்கு வந்தோம். அம்மாவைக் காணோம்; சுற்றிச் சுற்றித் தேடச் சொல்லி ஒருவர் சொன்னார். அதனால்தான் சுற்றுகிறேன்." என்றான், அந்த அப்பாவி.

"சரியான முட்டாள் நீ" என்றான் ஓர் ஆள். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த சொல் வாணிகர், "சில முட்டாள்களையும் அறிவாளியாக்க சொல் என்னிடம் இருக்கிறது..." என்று சொன்னார். அப்பாவி, அவரிடம் வந்து, "என்ன விற்கிறீங்க?" என்று கேட்டான். "சொற்களை விற்கிறேன். காசு இருந்தால் கொடு. உனக்கும் சொற்கள் தேவைப்படும்..."என்றார், வணிகர்.

"என்கிட்ட காசு இல்லைங்க... நாளைக்குத் தர்றேனே..." என்ற அந்த அப்பாவியிடம், "சரி, உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கு. நான் ஒரு சொல்லைத் தர்றேன்... நீ எல்லாரிடமும் அதனையே சொல்லு. 'வணக்கம்...' அதுதான், நான் உனக்குக் கொடுக்கும் சொல்."



அப்பாவி அவரிடம், ‘வணக்கம்’ சொல்லிவிட்டு அப்புறம் சென்றான். சற்றுத்தொலைவு செல்வதற்குள் வெளிநாட்டுப் பயணி ஒருவர் எதிரே வந்தார். அவரைப் பார்த்தவுடன், ‟வணக்கம்” என்றான் அப்பாவி. அவரது முகம் பூப்போல் மலர்ந்தது. மகிழ்ச்சியாய் அப்பாவியை அணைத்துக் கொண்டார்; தட்டிக் கொடுத்தார்.

‟காலையிலிருந்து ஏன் என்று கேட்பார் இல்லாமல் வழிகேட்டு அலைந்தேன். வந்தவர்களை மதிக்கத் தெரிந்தவன் நீதான்... ‘வணக்கம்’ என்னும் சொல்லை எவ்வளவு அன்புடன், அழகாகச் சொல்கிறாய். அருமை... அருமை..” எனப் பாராட்டினார். அத்துடன் நிற்கவில்லை; பொற்காசுகளையும் வழங்கினார்.

அப்பாவி மிகுந்த மகிழ்ச்சியுடன் சொல் வாணிகரிடம் போய் நடந்ததனைச் சொன்னான். அவரிடம் பொற்காசுகள் அனைத்தையும் கொடுத்தான். அவரோ, ‟தனக்குப் பாதி மட்டும் போதும்; மீதியை நீயே வைத்துக் கொள்” எனச் சொன்னார்.

வணிகரிடம், தனக்கு வேறு புதிய சொற்களைக் கற்றுத் தருமாறு அப்பாவி கேட்டான். அவர், உடனே இரு சொற்களைச் சொல்லிக் கொடுத்தார். ‟மகிழ்ச்சியாய் இருங்கள். இந்தச் சொற்களை யாரைப் பார்த்தாலும் சொல், சரியா ?” என, அவர் சொன்னதும் அப்பாவி மகிழ்ச்சியுடன் கிளம்பினான்.

நகரத் தெருவில் அப்பாவி சென்றான். எதிரே வந்த ஒவ்வொருவரையும் பார்த்து ‘மகிழ்ச்சியாய் இருங்கள்’ எனச் சொல்லிக்கொண்டே சென்றான்.

எதிரே பெரும் ஊர்வலம் ஒன்று ஆரவாரமாக வந்தது. அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானைகள் வந்தன. குதிரைப்படை வீரர்கள் வந்தார்கள். முரசுகள் அதிர, கொடிகள் பறக்க வந்தார்கள். என்ன செய்தி... ? வேட்டையாடுவதற்காகச் சென்றிருந்த அரசன் நாடு திரும்பிக் கொண்டிருந்தான்.

அப்பாவி அதனைப் பார்த்தான். காவலர்கள் தடுத்தார்கள். ஆனால், முண்டியடித்துக் கொண்டு அரசனின் முன்பாகச் சென்றுவிட்டான். பவனி வந்த அரசனின் எதிரே நின்று, ‘‘மகிழ்ச்சியாய் இருங்கள்’’ என்றான்.

அரசன் சினம் கொண்டான். ‘‘என்ன திமிர்! இந்த நாட்டின் அரசன் நான். என்னை வழி மறித்து வாழ்த்துகிறான் ஒரு பொடியன்’’ என்று கத்தினான். காவலர்களை அழைத்தான். அப்பாவியைச் சிறையில் அடைக்கும்படி ஆணையிட்டான்.

உடனே அப்பாவி, ‘‘மகிழ்ச்சியாய் இருங்கள்.’’ என்றான்.

அரசனுக்கு இன்னும் சினம் மிகுந்தது. ‘‘இவன் என்னைக் கேலி செய்கிறான்; ஏளனப்படுத்திவிட்டான். இவனைக் கொலைக்களத்திற்குக் கொண்டுசென்று தலையை வெட்டுங்கள்.’’ என்று ஆணையிட்டான். அப்பாவியோ, ‘‘மகிழ்ச்சியாய் இருங்கள்’’ என்றான்.

அப்பாவியைக் கொலைக்களத்திற்கு இழுத்துச் சென்ற வீரர்களிடமும் ‘‘மகிழ்ச்சியாய் இருங்கள்’’ என்றான். தலையை வெட்டுவதற்குத் தயாராக வாளுடன் நின்ற முரடர்கள் இருவரிடமும் அதே சொற்களைச் சொன்னான். முரடர்களுக்குப் புரியவில்லை. தலையை வெட்ட வாளை ஓங்கினார்கள். அப்போதும் அப்பாவி ‘‘மகிழ்ச்சியாய் இருங்கள்’’ என்றான்.

முரடர்களுக்குக் கண் கலங்கியது; வெட்ட ஓங்கிய வாள்களை அவர்கள் கீழே போட்டுவிட்டார்கள்.

‘‘கொலையாளிகள் நாங்கள்! கொடூரமான முறையில் கழுத்தை வெட்டுகிறோம். எங்களைப் பார்த்து, ‘‘மகிழ்ச்சியாய் இருங்கள்’’ என்று சொன்ன முதல் மனிதன் இவன்தான். இவன் சொற்களில் கருணை இருக்கிறது. எங்களால் இவனை வெட்ட முடியாது. அரசர் எங்களை அரிவாளால் கூறுபோட்டாலும் சரி; நாங்கள் அதனை ஏற்றுக்கொள்வோம்’’ என்றார்கள்.

எல்லாரும் அரசனிடமே சென்று அவனது முடிவை மாற்றிக்கொள்ளச் சொல்லிக் கேட்டார்கள். நடந்தவற்றை எல்லாம் சொன்னார்கள். அரசன் குழப்பம் அடைந்தான்.

அப்போது வெளிநாட்டுப் பயணி அரசவைக்கு வந்தார். அப்பாவியைப் பார்த்ததும் கட்டிக் கொண்டார். ‘‘அரசே! இவன்தான் உங்கள் நாட்டுப் பண்பாட்டை எனக்குப் புரிய வைத்தவன்’’ என்றார். மன்னன் மகிழ்ச்சி அடைந்தான். அப்பாவியை விடுதலை செய்தான். அவனுக்குப் பொன்னும் பொருளும் கை நிறைய வழங்கினான்.

பொன்பொருள் முதலான பரிசுகளுடன் அப்பாவி, அம்மாவிடம் திரும்பினான். மகனை மகிழ்ச்சிப் பொங்க அணைத்துக்கொண்டாள், அம்மா. ‘‘வணக்கம்... மகிழ்ச்சியாய் இருங்கள்!’’ என்று அம்மாவிடம் சொன்னான், அப்பாவி.

(நாட்டுப்புறக் கதை)

# இலக்கணமும் மொழித்திறனும்

## 1. பிழையும் திருத்தமும்

அ. நான் நேற்று திரைப்படத்திற்குச் செல்கிறேன்.

ஆ. அவன் நாளைக்கு வந்தான்.

இ. இந்தப் புத்தகத்தை இரண்டு ஆண்டுகளுக்குமுன் நான் வாங்குவேன்.

இந்தச் சொற்றொடர்களைப் படித்ததும், இவற்றில் உள்ள பிழைகள் என்ன என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

வினைச்சொற்களில் காலம் பிழையாக வந்திருக்கிறது.

எப்படி இருந்தால் முறையாக இருக்கும்.

அ. சென்றேன் ஆ. வருவான் இ. வாங்கினேன்

## 2. காலம்

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலங்கள் இருப்பது உங்களுக்குத் தெரியும்.

காலத்தைக் குறிக்கும் உரிய வினைச்சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

'பார்' என்னும் வினைச்சொல் காலத்திற்கு ஏற்றபடி பின்வருமாறு மாறுகிறது.

பார்த்தேன் ( இறந்தகாலம் )

பார்க்கிறேன் ( நிகழ்காலம் )

பார்ப்பேன் ( எதிர்காலம் )

### பயிற்சி – 1

பின்வரும் சொற்றொடர்களுக்கு எதிரே அவை எந்தக் காலத்தைக் குறிக்கின்றன என எழுதுக.

பாத்திமா நன்றாகத் தேர்வு எழுதினாள் ____________

சிங்காரம் கடைக்குப் போக மறுத்தான் ____________

பக்கத்தில் இருப்பவனைப் பார்த்துப் பார்த்து எழுதுகிறான் ____________

ஆசிரியர் வந்ததும் கேள்வி கேட்பார் ____________

### பயிற்சி – 2

அடைப்புக் குறிக்குள் இருக்கும் வினைச்சொல்லைக் காலத்திற்கு ஏற்றபடி மாற்றி எழுதுக.

(எ.கா.) அன்று நடந்த பேச்சுப்போட்டியில் நான் ஒரு மணிநேரம் பேசினேன். (பேசு)

1. நேற்று இரவு இந்தப் பாடத்தை நான் ________________ (படி)
2. உன் வீட்டு விருந்துக்குக் கட்டாயம் நான் ________________ (வா)
3. அப்பா வந்ததும் ________________ (திட்டு)
4. இப்போது நான் தமிழ் ________________ (படி)

### 3. உண்டு, இல்லை

உண்டு, இல்லை என்னும் இரு சொற்களையும் நாம் மிகுதியாகப் பயன்படுத்துகிறோம். உண்டு, இல்லை என முடியும் சொற்களில் காலம் வெளிப்படையாக இல்லை. குறிப்பாகத்தான் நாம் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

(எ.கா.)

பாத்திமா தேர்வை நன்றாக எழுதவில்லை. (இறந்தகாலம்)

அண்ணன் வந்ததும் உனக்குப் பரிசு உண்டு. (எதிர்காலம்)

### 4. அகரமுதலி பார்ப்போம்.

பின்வரும் சொல் தொகுதியில் அகரமுதலியில் முதலில் வரக்கூடிய சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

அ. தச்சர், தங்கம், தகரம் ________________

ஆ. பருத்தி, பின்னல், பலகை ________________

இ. சுவர், சுங்கம், சூழ்ச்சி ________________

ஈ. தேவை, தொழில், தென்னை ________________

உ. அம்மா, அப்பா, அண்ணன் ________________

ஊ. மனிதன், மளிகை, மழலை ________________

### 5. இதுவரை நாம் படித்தவற்றைத் தொகுத்துப் பார்ப்போம்.

#### 1. அடிப்படை

எழுத்து, சொல், சொற்றொடர் என மூன்றும் மொழியின் அடிப்படை உறுப்புகள்.

அ – எழுத்து.

அன்பு – சொல்.

அன்பே தெய்வம் – சொற்றொடர்.

சொல் என்பதனை மொழி, பதம், கிளவி, வார்த்தை எனவும் சொல்வோம்.

சொற்றொடரை வாக்கியம் எனவும் சொல்வோம்.

## 2. எழுத்து

### ஆ. எல்லா எழுத்துகளுக்கும் அடிப்படையானது ஒலி.

அரவன், வால் எடுத்துச் சண்டைக்குப் போனான் என எழுதுவதும் தவறு.

பேசுவதும் தவறு. ஒவ்வோர் எழுத்துக்கும் ஓர் ஒலி உண்டு.

எழுத்தை முறைப்படி ஒலிக்க நாம் பயிற்சி எடுத்தல் வேண்டும்.

### ஆ. ஒவ்வோர் எழுத்தும் ஒரு பணியைச் செய்கிறது.

அ, இ, உ – சுட்டும் எழுத்துகள் (சுட்டெழுத்துகள்) (உ– பயன்பாட்டில் இல்லை.)

எ, யா, ஆ, ஓ, ஏ – ஆகியவை வினா எழுப்பும் எழுத்துகள். (வினா எழுத்துகள்)

ஏ – என்பது சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தரும்.

### இ. எழுத்துகளுக்கு இடையே நட்பு உண்டு. அதனைப் புரிந்துகொண்டால் பெரும்பாலான பிழைகளை நீக்கலாம்.

மெல்லின எழுத்தும், அதன் நட்பு எழுத்தான வல்லின எழுத்தும் அடுத்தடுத்து வருவது இயல்பு.

ங்க; ஞ்ச; ண்ட; ந்த; ம்ப; ன்ற இந்த இயல்பைப் புரிந்துகொண்டவர்கள், உண்டான் எனவும், தின்றான் எனவும் முறையாக எழுதுகிறார்கள்.

புரியாதவர்கள் 'திண்றான்' எனப் பிழையாகவே எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள்.

### ஈ. பிழை நேர்வது எப்போது ?

#### I. ஒற்றுப்பிழை

பாடலை பிரித்து படி. (பிழை).

பாடலைப் பிரித்துப் படி. (திருத்தம்)

#### II. குறில் நெடில்பிழை

அ. தண்ணிர் குடித்தான். (தண்ணீர்)

ஆ. கடைக்குப் போய் வெட்டி சட்டை வாங்கினான். (வேட்டி)

இ. என்ன கோடுமை இது! (கொடுமை)

#### III. துணையெழுத்துப் பிழை

அ. அப்பாவிக்குப் பென்னும் பெருளும் கிடைத்தன. (பொன்னும் பொருளும்)

ஆ. சோவல் சண்டை பார்த்தேன். (சேவல்)

IV. மயங்கொலிப் பிழை

பாதையில் கள்ளும் முல்லும் கிடந்தன. ( கல்லும் முள்ளும்)

### 3. சொல்

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொல் நால்வகைப்படும். பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இருசொற்கள் பற்றி இந்த வகுப்பில் அறிந்துகொண்டோம்.

பெயர்ச்சொல்லை உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல் என இரண்டாகப் பிரிக்கலாம்.

பெயர், வினைச்சொற்களை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனவும் பிரிக்கிறோம்.

### 4. சொற்றொடர்

சொற்கள் இணைந்து சொற்றொடரை உருவாக்குகின்றன.

சொற்றொடரை அமைக்கும்போது பல்வேறு பிழைகள் ஏற்படுகின்றன.

ஒருமை பன்மைப் பிழைகளும், காலப்பிழைகளும் அடிக்கடி ஏற்படும் பிழைகளாம்.

I. ஒருமை – பன்மை

| பிழை | திருத்தம் |
|---|---|
| அ. காற்று வீசின; மரங்கள் அசைந்தது. | காற்று வீசியது; மரங்கள் அசைந்தன. |
| ஆ. தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றான். | தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றார்கள். |

II. காலம்

| பிழை | திருத்தம் |
|---|---|
| அ. நாளைக்கு நான் ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன். | நாளைக்கு நான் ஊருக்குப்போய்ச் சேர்வேன். |
| ஆ. நேற்று பால் பொங்குகிறது. | நேற்று பால் பொங்கியது. |

### 5. கடிதம் எழுதும் பயிற்சி (அலுவலகக் கடிதம்)

அலுவலகக் கடிதம் எழுதும்போது சில விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

## மாதிரிக் கடிதம்

அனுப்புநர்

நா. மெகருன்னிசா ,
17, திமிரிச் சாலை,
கலவை – 632 506,
வேலூர் மாவட்டம்.

பெறுநர்

வட்ட வழங்கல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆர்க்காடு,
வேலூர் மாவட்டம்.

ஐயா,

பொருள்: குடும்ப அட்டை புதுப்பித்தல் – தொடர்பாக.

குடும்பத்துடன் நாங்கள் வெளியூர் சென்றிருந்ததனால், எங்கள் குடும்ப அட்டையைப் புதுப்பிக்க இயலவில்லை. குடும்ப அட்டையின் ஒளிநகலை இத்துடன் இணைத்துள்ளேன். குடும்ப அட்டையைப் புதுப்பித்துத் தர வேண்டுகிறேன். நன்றி.

கலவை,
20.01.2012

தங்கள் உண்மையுள்ள,
நா. மெகருன்னிசா

உறைமேல் முகவரி

பெறுநர்

வட்ட வழங்கல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆர்க்காடு,
வேலூர் மாவட்டம்.

பயிற்சி : நகராட்சி/உள்ளாட்சியில் உள்ள சுகாதார அலுவலருக்கு உங்கள் தெருவில் கொசுமருந்து தெளிக்க வேண்டிக் கடிதம் வரைக.

## வகுப்பறைத்திறன்கள்

**1. பேசுக.**

ஐந்து மணித்துளிகளுக்குக் குறையாமல் பேசிப் பழகுக.

அ. என்னைக் கவர்ந்த மனிதர்
ஆ. எனக்குப் பிடித்தமான பழக்கம்
இ. என் வீடு
ஈ. என் தெரு
உ. என் நண்பர்கள்

**2. வினா எழுப்புக.**

பின்வரும் தலைப்புகளில் உனக்குத் தோன்றும் வினாக்களைத் தொடுக்க.

அ. கற்பனை
ஆ. உண்மை
இ. நியாயம்
ஈ. அநியாயம்
உ. பொய்

**3. குழுக்கல்வி**

ஐந்துபேர் கொண்ட மூன்று குழுக்களாகுக. ஒவ்வொருவரும் இயல்பாக நான்கு வரிகள் பேசுக. எப்பொருள் பற்றியாவது பேசுக. (எ.கா.) எனக்குப் பிடித்த திரைப்படம். ஒவ்வொருவரும் எத்தனை ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுகிறார்கள் எனக் கணக்கிடுக. குறைவாக ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசிய குழுவை வெற்றிபெற்ற குழுவாக அறிவிப்புச் செய்க.

**4. கருத்தாடல் செய்க.**

அ. கூட்டங்களில், கோவில்களில், திரை அரங்குகளில் நிகழ்ச்சி நடக்கும்போது, செல்பேசியில் பேசுவோர் நடந்துகொள்ளும் முறை

ஆ. 'வணக்கம் ஐயா' கதை கற்றுக்கொடுக்கும் பண்புகள்

**5. எழுதுக.**

**I. ஓரிரு சொற்களில் விடை தருக.**

அ. புலம்பக் காண்பது ________________

ஆ. திருக்குற்றால மக்கள் தேடுவது ________________

இ. இரு பொருள்படப் பாடுவது ________________

**II. நான்கு வரியில் விடை தருக.**

அ. திரிகூட மலையின் சிறப்புகளை எழுதுக.

ஆ. கோட்டுமரமும் பீற்றல் குடையும் ஒப்பாகும். எவ்வாறு ?

இ. பாடத்திலுள்ள பண்பாட்டு நிகழ்வுகளில் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டியதென எதனை நீ கருதுகிறாய் ? ஏன் ?

**III. சிறுசிறு கட்டுரைகள் எழுதிப் பழகுக.**

அ. என் வீடு

ஆ. என் நண்பர்கள்

இ. என் இலட்சியம்

ஈ. என் தேவைகள்

உ. என் விருப்பங்கள்

ஊ. 'வணக்கம் ஐயா' கதையை நாடகமாக்கி நடித்துக் காட்டுக.

## IV. விளையாடுக.

தேவை : மூன்று குழுக்கள்; குழுவுக்கு மூவர்.

விளையாடும் முறை

யார் வெற்றி பெறுவார்கள் ? ஒவ்வொரு குழுவுக்கும் ஓர் எழுத்துத் தருதல் வேண்டும். அந்த எழுத்து உயிர்மெய்யாக இருத்தல் வேண்டும்.

(எ.கா.) க த ப

ஆசிரியர் ஏதாவது ஒரு குழுவுக்குரிய எழுத்தை உரக்கச் சொல்வார். எடுத்துக்காட்டாக, 'க'. முப்பது வினாடிகளுக்குள் அந்தக் குழு 'க' வில் தொடங்கும் ஒரு சொல்லைச் சொல்லுதல் வேண்டும்.

அச்சொல்லில் எத்தனை எழுத்து உள்ளதோ அத்தனை மதிப்பெண் அந்தக் குழுவுக்கு வழங்குதல் வேண்டும்.

(எ.கா.) கப்பல் சொன்னால் 4 மதிப்பெண்.

கடற்கரை சொன்னால் 5 மதிப்பெண்.

கடன்காரர் சொன்னால் 6 மதிப்பெண்.

நிறைய எழுத்துகள் கொண்ட சொற்களைச் சிந்தித்துச் சொல்லுதல் வேண்டும்.

ஒரே வரிசையில் கேட்காமல் மாறிமாறிக் கேட்டல் வேண்டும்.

ஐந்துமுறை இந்த விளையாட்டு நடைபெறுதல் வேண்டும்.

அதிக எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சொல்லி, அதிக மதிப்பெண் பெறுகின்ற குழுவே வெற்றி பெற்ற குழுவாக அறிவித்தல் வேண்டும்.

(ஒரே ஒரு கட்டுப்பாடு: பெயர்ச்சொற்களைத்தான் சொல்லுதல் வேண்டும். வினைச்சொற்களைச் சொல்லுதல் கூடாது. கண்டேன், தவறினேன், படித்தேன் போன்றவை வினைச்சொற்கள்)

## வாழ்க்கைத்திறன்கள்

### பகுத்தாயும் திறன்

எதனைப் படித்தாலும் எதனைக் கேட்டாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் கூடாது. பகுத்து ஆய்ந்து பார்த்தல் வேண்டும்.

ஏற்க வேண்டியதனை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; தள்ள வேண்டியதனைத் தள்ளுதல் வேண்டும்.

பகுத்தாயும் திறன் வாழ்க்கைக்குத் தேவைப்படும் திறன்.

1. குற்றாலக் குறவஞ்சிப் பாடலில் ஆண்குரங்குகளும் பெண்குரங்குகளும் கொஞ்சி விளையாடும் காட்சி பற்றி ஆராய்ந்து கூறுக.

அ. நடக்கக் கூடியது; இயற்கையானது.

ஆ. நடக்கமுடியாதது; கற்பனையானது.

2. கானவர்கள் தேவர்களைக் கண்சிமிட்டி அழைக்கும் காட்சி

அ. நடக்கக் கூடியது; இயற்கையானது.

ஆ. நடக்க முடியாதது; கற்பனையானது.

3. அருவியின் அலை, வானத்தை முட்டிச் சூரியனின் பாதையை வழுக்க வைக்கிறது. இது

அ. நடக்கக்கூடியது; இயற்கையானது.

ஆ. நடக்க முடியாதது; கற்பனையானது.

4. குழந்தைக்குக் காய்ச்சல், திருஷ்டி சுற்றிப்போடலாம் என்கிறாள் பாட்டி. நீ என்ன நினைக்கிறாய் ?

அ. பாட்டி சொல்வது சரியாகத்தான் இருக்கும்.

ஆ. உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

5. சந்திர கிரகணம் எப்படி நிகழ்கிறது ?

அ. பெரிய பாம்பு வந்து சந்திரனை விழுங்குகிறது.

ஆ. சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே பூமி வருவதனால் உண்டாவது.

## மொழி விளையாட்டுகள்

### 1.சொல் விளையாட்டு

அட்டவணையில் உள்ள சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ரி | த | ம் | பி | பா |
| சு | கு | ணை | த | ரி | வா |
| ர் | ரு | ந | ய் | வு | ண |
| யி | ரி | க | ஆ | ய | ர் |
| உ | ட | ம் | பு | ற | ம் |

1. ______

2. ______

3. ______

4. ______

5. ______

6. ______

7. ______

## நானே உருவாக்குவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________
7. ______________________

## 2. சொல் விளையாட்டு

‘முடிவே தொடக்கம்’

சொல்லின் இறுதியில் முடியும் எழுத்தை முதலாவதாகக்கொண்டு மற்றொரு சொல்லை எழுதிச் சொற்படிக்கட்டு உருவாக்குக.

அம்பு

புகை

கைவீசு

சுண்ணாம்பு

புளியமரம்


### நானே செய்வேன்

துளைத்த

வைத்து

### 3. சொல் விளையாட்டு

தேவையான எழுத்துகளை வெற்றுக் கட்டத்தில் நிரப்பிச் சொற்களை உருவாக்கி எழுதுக.




### 4. சொல் விளையாட்டு

அகரவரிசைப்படி எழுதிப் பழகுக.

சான்று : பல்லாண்டு, முத்து, ஆமணக்கு, அரசன், கொம்பு.

அகரவரிசை : அரசன், ஆமணக்கு, கொம்பு, பல்லாண்டு, முத்து.

அகரவரிசைப்படுத்துக.

1. நட்பு, அன்பு, மகிழ்ச்சி, பள்ளி, விளையாட்டு, வீடு, தோட்டம்.

   அகரவரிசை

   ________ , ________ , ________ , ________ , ________ .

2. பச்சை, தேங்காய், வட்டம், தேக்கம், மஞ்ஞை.

   அகரவரிசை

   ________ , ________ , ________ , ________ , ________ .

# படைப்பாற்றல்

## கையெழுத்து இதழ் உருவாக்குதல்


(எண்ணிக்கைக்கு ஏற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் கையெழுத்து இதழ் உருவாக்குதல்)

(அறிவுச் சுடர் ஏந்தி அகிலத்தை வெல்க!)

### கவிதை

வளமெலாம் பொலிக!


### பொங்கல்



(கொண்டாடும் காரணம்)

### உழவர் நண்பன்

படம் வரைதல் (மாடு)



### விடுகதை

1.

2.

3.

விடை : 1. 2. 3.

### பழமொழி அறிந்துகொள்வோம்!

### நம்பிக்கைத் துளி

(புகழ்பெற்றவர்களின் தன்னம்பிக்கை வரிகள்)

### மன்றச்செய்தி

தமிழ் மன்றத்தின் இம்மாத நிகழ்வுகள்

## இலவசப் பயண அட்டை விண்ணப்பப் படிவம்

**I. நிரப்புக.**

1. மாணவர் பெயர் :
2. படிக்கும் பள்ளியின் பெயர் :
3. வகுப்பு :
4. பிரிவு :
5. புறப்படும் இடம் :
6. சேரும் இடம் :

பெற்றோர் கையொப்பம்

மாணவர் கையொப்பம்

தலைமையாசிரியர் கையொப்பம்

## தொடர்வண்டி முன்பதிவு விண்ணப்பப் படிவம்

**II. நிரப்புக.**

1. பெயர் ____________________
2. ஆண்/பெண் ____________________
3. தொடர்வண்டி எண் ____________________
4. பயண நாள் ____________________
5. புறப்படும் இடம் ____________________
6. சேரும் இடம் ____________________
7. இருக்கை எண்ணிக்கை ____________________

விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.